Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Special Commissioner and Commissioner of Stationery and Printing, Chennai-600 002.

வெளியீடு 14-10-98

Issued 14-10-98

412
99

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

சனிக்கிழமை, மார்ச் 21, 1998 – தொகுதி 40 – எண் 1

Saturday the 21st March, 1998 – Volume 40 – No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

V211, 51'N98
N98·40·1
218469

[Price Rs. 3.00

H12/99

21–3–1998

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-xii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xi-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| *1.* **வினாக்கள்-விடைகள்--** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-51 |
| *2.* **அறிக்கைகள் அளித்தல்--** | |
| பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | 52 |
| *3.* **அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)--** | |
| (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, *1998* | 52-53 |
| (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் இரண்டாம் (திருத்தச்) சட்டமுன்வடிவு, *1998* | 53 |
| *4.* **ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்**--தொடர்ச்சி | 53-54, 59-158 |
| திரு. பா. வேல்துரை | 59-68 |
| திரு. இரா. தாமரைக்கனி | 68-87 |
| திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் | 87-92 |
| திரு. பரிதி இளம்வழுதி | 92-113 |

| | பக்கங்கள் |
|---|---|
| 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்--தொடர்ச்சி | |
| திரு. இ. கணேசன் | 113-127 |
| *திரு. நா. பெரியசாமி | 129-134 |
| திரு. எஸ். திருநாவுக்கரசு | 135-158 |
| 5. அரசினர் தீர்மானம்-- | |
| விதி 32-ஐத் தளர்த்துதல் | 54-55 |
| 6. விதி 110-ன்கீழ் சட்ட அமைச்சரின் அறிக்கை-- | |
| முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மீது தொடுக்கப்பட்ட வழக்குகள் குறித்து மத்திய சட்டம் மற்றும் நீதித் துறை அமைச்சர் அளித்துள்ள பேட்டியில் தெரிவித்த கருத்துக்கு மறுப்பு | 55-59 |
| 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 159-161 |


218449.

D
4211,31N98
98-40.1



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்--நீதிபதி செல்வி ம். பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.

2. கல்வி அமைச்சர் : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. வருவாய்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

| | | |
|---|---|---|
| 6. | வேளாண்மைத் துறை அமைச்சர் | **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :** வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு. |
| 7. | பொதுப்பணித் துறை அமைச்சர் | **மாண்புமிகு திரு. துரைமுருகன் :** பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள். |
| 8. | போக்குவரத்துத் துறை அமைச்சர் | **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :** போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகம் மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம். |
| 9. | தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் | **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை. |
| 10. | உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் | **மாண்புமிகு திரு. கா. நா. நேரு :** உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள். |
| 11. | பால்வளத் துறை அமைச்சர் | **மாண்புமிகு திரு. க. சுந்தரம் :** பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு. |
| 12. | தொழிலாளர் நலத் துறை அமைச்சர் | **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :** தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்). |



| | | |
|---|---|---|
| 13. | சட்டத் துறை அமைச்சர் | **மாண்புமிகு திரு. ஆலடி அருணா :** சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல். |
| 14. | கைத்தறித் துறை அமைச்சர் | **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :** கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு. |
| 15. | பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் | **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் :** பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர். |
| 16. | வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் | **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :** வனம், சின்கோனா, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம். |
| 17. | வீட்டு வசதித் துறை அமைச்சர் | **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :** வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்பு திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி. |
| 18. | ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் | **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :** கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு. |

19. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :
*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம்.*

20. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் : மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் :
*கால்நடைப் பராமரிப்பு.*

21. சமூக நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் :
*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.*

22. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :
*ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.*

23. சுற்றுலாத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் :
*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

24. கதர்த் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :
*கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.*

25. மீன் வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :
*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.*



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education..** **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

| | | |
|---|---|---|
| 6. **Minister for Agriculture** | .. | **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| 7. **Minister for Public Works** | .. | **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works. |
| 8. **Minister for Transport** | .. | **The Hon. Dr. K. Ponmudi :** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways and Chennai Metropolitan Development Authority. |
| 9. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments. |
| 10. **Minister for Food, Public Distribution System and Co-operation** | .. | **The Hon. Thiru K.N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics. |
| 11. **Minister for Milk** | .. | **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control. |
| 12. **Minister for Labour** | .. | **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf. |



| | | |
|---|---|---|
| 13. **Minister for Law** | .. | **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits. |
| 14. **Minister for Handlooms** | .. | **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles and Environmental Pollution Control. |
| 15. **Minister for Backward Classes** | .. | **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees. |
| 16. **Minister for Forest and Printing** | .. | **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona, Stationery and Printing and Government Press. |
| 17. **Minister for Housing** | .. | **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development. |
| 18. **Minister for Rural Industries and Registration** | .. | **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals. |
| 19. **Minister for Information and Publicity** | .. | **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act. |
| 20. **Minister for Animal Husbandry** | .. | **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry. |

| | | |
|---|---|---|
| 21. **Minister for Social Welfare** | .. | **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 22. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. | **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 23. **Minister for Tourism** | .. | **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 24. **Minister for Khadi** | .. | **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| 25. **Minister for Fisheries** | .. | **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர்
மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

பேரவைத் துணைத் தலைவர்
மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. ரா. சேதுநாதன்
திரு. கு. மனோகரன்
திரு. வ. வேலுசாமி
திரு. சி. ஞானசேகரன்
திரு. நா. பெரியசாமி
திரு. முகம்மது கோதர் மைதீன்

செயலாளர்
திரு. டி. சாலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 5. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 6. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 7. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 8. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 10. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 11. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 12. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 13. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 14. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 15. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 16. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |

17. திருமதி வீ.நா. உமா, பி.ஏ. .. குழு அலுவலர்
18. திரு. சு. ராஜகுரு .. குழு அலுவலர்
19. திரு. சௌரி அய்யாத்துரை .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர்
20. திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
21. திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
22. திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
23. திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
24. திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
25. திருமதி என். துளசிபாய், பி.ஏ. .. சார்புச் செயலாளர்
26. திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
27. திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. .. சார்புச் செயலாளர்
28. திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
29. திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
30. திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
31. திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
32. திருமதி இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
33. திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்
34. திருமதி சி. கனகவல்லி, டி.சி.பி. .. தலைமை நிருபர்
35. திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. .. தலைமை நிருபர்
36. திரு. நா. நடராஜன், பி.ஏ. .. தலைமை நிருபர்



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

1. அசோகன், திரு. அ. .. திருவாரூர் (செ.வ.)
2. அந்தியூர் ப. செல்வராசு, திரு. .. அந்தியூர் (செ.வ.)
3. அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். .. மயிலாடுதுறை
4. அப்துல் நாசர், திரு. அ.வ. .. புவனகிரி
5. அப்துல் லத்திப், திரு. ம. .. வாணியம்பாடி
6. அப்பாவு, திரு. மு. .. ராதாபுரம்
7. அமரமூர்த்தி, திரு. டி. .. அரியலூர்
8. அய்யலுசாமி, திரு. லி. .. கோவில்பட்டி
9. அருண்குமார், திரு. பா. .. மேட்டுப்பாளையம்
10. அழகராஜா, திரு. என்.ஆர். .. தேனி
11. அழகிரி, திரு. ச. .. சிதம்பரம்
12. அழகுவேலு, திரு. ச. .. கண்டமங்கலம் (செ.வ.)
13. அன்பழகன், திரு. வ. .. செய்யார்
14. அன்பழகன், பேராசிரியர் க. .. துறைமுகம்
15. அன்பில் பொய்யாமொழி, திரு. .. திருச்சிராப்பள்ளி-2
16. ஆசையன், திரு. பெ. .. ஆண்டிப்பட்டி
17. ஆண்டமுத்து, திரு. வெ.அ. .. பவானிசாகர்
18. ஆண்டி அம்பலம், திரு. எம். .. நத்தம்
19. ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். .. வில்லிவாக்கம்
20. ஆலடி அருணா, திரு. .. ஆலங்குளம்

21. ஆல்பன், டாக்டர் வே. .. திருவட்டாறு
22. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்
23. ஆறுமுகம், திரு. தி.ப. .. திருச்செங்கோடு
24. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணாநகர்
25. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
26. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
27. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
28. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
29. இராசன், திரு. வி. பி. .. ராஜபாளையம் (செ.வ.)
30. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்
31. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி
32. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடானை
33. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
34. இராமச்சந்திரன், திரு. சி.இரா. .. தொண்டாமுத்தூர்
35. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
36. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
37. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
38. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு
39. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்
40. இராஜ ரெட்டி, திரு. ச. .. தளி
41. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்
42. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)
43. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)



44. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
46. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
47. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்
48. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
51. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
52. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
53. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
54. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
55. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)
56. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி
57. கிருஷ்ணன், திரு. சீ. வெ. .. வேடசந்தூர்
58. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
59. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்
60. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
61. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்
62. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
63. கோபால், திரு. பா. .. மேட்டூர்
64. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு
65. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
66. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்

67. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
68. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
69. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
70. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
71. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
72. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்
73. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
74. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)
76. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
77. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
79. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
80. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
81. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
82. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
83. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி
85. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
87. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்
88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்



89. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்
90. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
94. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
95. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
96. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
97. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்
98. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
99. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி
100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
101. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி
102. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
103. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
104. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்
105. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)
107. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
108. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
109. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
110. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

111. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
112. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
113. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
114. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
115. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
116. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
117. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
118. தங்கவேலன், திரு. சப. .. கடலாடி
119. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்–2
120. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
121. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
122. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
123. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
124. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
125. தனபாலன், திரு. கு.ர.கோ. .. சேலம்–1
126. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
127. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
128. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
129. திருஞானசம்பந்தம், திரு. எஸ். வி. .. பேராவூரணி
130. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
131. திருவேங்கடம், திரு. பெ.சு. .. கலசப்பாக்கம்
132. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
133. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
134. துரைமுருகன், திரு. .. காட்பாடி



135. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
136. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
137. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
138. நடராஜன், திரு. த. .. செஞ்சி
139. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
140. நன்னன், திரு. கொ.வீ. .. செங்கம் (செ.வ.)
141. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
142. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
143. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
144. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்
145. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
146. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
147. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
148. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி–1
149. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
152 பன்னீர்செல்வம், திரு. எம். ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
154. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
155. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
156. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
157. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

158. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
159. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
160. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
161. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
162. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
163. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
164. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
165. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
166. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)
167. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
168. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
169. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
170. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
171. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
172. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
173. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
175. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
179. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்



180. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
181. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
182. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
183. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
184. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
185. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
186. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
187. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
188. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
189. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
190. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
191. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
192. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
193. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
194. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
195. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
196. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
197. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
198. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
199. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
200. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
201. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
202. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி

| | | |
|---|---|---|
| 203. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 204. ராசேந்திரன், திரு. ஏ. | .. | பேராளூர் |
| 205. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 206. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 207. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 208. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 209. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 210. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | .. | காங்கேயம் |
| 211. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 212. வல்லரசு, திரு. பி.என். | .. | உசிலம்பட்டி |
| 213. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 214. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 215. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 217. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 218. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 219. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | .. | பாலக்கோடு |
| 221. வெங்கடேசன், திரு. ச. க. | .. | மதுராந்தகம் |
| 222. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 223. வெங்கிடு, திரு. ஜி. பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 225. வேணு, திரு. கி. | .. | கும்மிடிப்பூண்டி |
| 226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 227. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 228. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 229. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 230. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 231. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 234. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 235. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. கே.வி. வெங்கடபதி | .. | அரசு தலைமை வழக்கறிஞர் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 7, ஈஸ்வர—திருவள்ளுவர் ஆண்டு 2029**

**1998 மார்ச் 21, சனிக்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்*
*துன்பம் துடைத்தூன்றும் தூண்"*

*தன்னலம் விரும்பாமல், தான் மேற்கொண்ட செயலை நிறைவேற்ற விரும்புகின்றவன் தன்னைச் சூழ்ந்துள்ள சுற்றத்தார், நண்பர்கள், நாட்டு மக்கள் ஆகிய அனைவரின் துன்பம் துடைத்து, அவர்களைத் தாங்குகின்ற தூணாவான்.*

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள், வினா எண் 41, திரு. கு. மனோகரன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**41—**

### தொழில் வளாகம் அமைத்தல்

***5989—திரு. கு. மனோகரன்:**

*மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தர்மபுரி மாவட்டத்தில் அரசினர் தொழில் வளாகம் அமைக்க அரசு முன்வருமா?*

[1998 மார்ச் 21

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்திற்கு அரசினர் தொழில் வளாகம் ஒன்றை புதிதாக ஏற்படுத்த முன்வந்துள்ள தாயுள்ளம் கொண்ட முதல்வர் அவர்களுக்கு தர்மபுரி தொகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவிக்கும் இவ்வேளையில், அமையவிருக்கின்ற அந்தத் தொழில் வளாகத்தை, பிற்படுத்தப்பட்ட பகுதியாகவும், தொழில் வளாகம் இல்லாத பகுதியாகவும் வறட்சிப் பகுதியாகவும் உள்ள தர்மபுரி மாவட்டத்தின் தலைநகராக உள்ள தர்மபுரியிலேயே அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரியிலேயே, அந்தத் தொகுதியிலேயே அது அமைய வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை உடனடியாக ஏற்க இயலாது. ஆனால் இந்தத் தொழில் வளாகம் ஓசூரில் 'சிப்காட்' தொழில் வளாகத்தில் முதற்கட்டமாக 1235 ஏக்கர் நிலப்பரப்பில் 1974 ஆம் ஆண்டு அரசால் அனுமதிக்கப்பட்டு, 1975 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இயங்க ஆரம்பித்தது. அதனுடைய இரண்டாவது கட்டம் 1989 ஆம் ஆண்டு 456 ஏக்கர் நிலப்பரப்பில் அரசால் அனுமதிக்கப்பட்டு, 1990 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இயங்க ஆரம்பித்தது. அதைப் போலவே, - தமிழ்நாடு தொழில் வசதி மேம்பாட்டு நிறுவனம், (TACID) தர்மபுரி மாவட்டத்தில் பர்கூரில் 1400 ஏக்கர் நிலப்பரப்பிலே 41 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைத்திட 1995 ஆம் ஆண்டில் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதுவரையில் 728 ஏக்கர் நிலங்களை நேரடிக் கிரயம் மூலமாகப் பெற்றுள்ளது. மீதமுள்ள நிலங்களை நிலமெடுப்புச் சட்டத்தின்கீழ் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, தர்மபுரி தொகுதிதான் என்று குறிப்பாக இல்லாமல் மாவட்டத்தில் இதுபோன்ற பல தொழில் வளாகங்கள் பல நிறுவனங்களின் சார்பாக அமைக்கப்படவிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1998 மார்ச் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், தர்மபுரியைப் பற்றிக் கேட்கப் போகிறீர்களா? (குறுக்கீடு) வினா எண் 42, திரு. பி. இராசமாணிக்கம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

42—

## தீயணைப்பு நிலையங்களுக்குக் கட்டடம் கட்டுதல்

***7619—திரு. பி. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு, திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் ஆகிய இடங்களில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் தீயணைப்பு நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டடம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தநாடு தொகுதி மக்களுடைய நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்றி வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பில் நன்றி தெரிவித்து, அந்தப் பணி இந்த ஆண்டு முடிக்கப்படுமா, அதனுடைய மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தநாடு தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்ட எல்லா நடவடிக்கைகளும் தேவையான அளவுக்கு எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்குப் பொருத்தமான இடத்தைத் தேர்வு செய்து ஒரு ஏக்கர் பரப்பளவு நிலம் ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்டுள்ளது. அதைப் போலவே, தஞ்சை மாவட்டத்தில் நீடாமங்கலம் தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டடம் கட்ட பழைய நீடாமங்கலம் கிராமத்தில் 1.11 ஏக்கர் புஞ்சை நிலம், நிர்வாகத்திற்குச் சொந்தமானது — சத்திர நிர்வாகத்திற்குச் சொந்தமானது—தேர்வு

செய்யப்பட்டு, அந்த நிலத்திற்கான மதிப்பீடு செய்யும் பணி நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. இவையெல்லாம் விரைவில் நடைபெற்று முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கான செலவு விவரங்கள் என்னிடத்திலே இப்பொழுது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ஆண்டி அம்பலம்.

**திரு. எம். ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே மரியாதைக்குரிய நமது கலைஞர் அவர்களே தீயணைப்பு நிலையத்தைக் கொடுத்தார்கள். அதற்கு Order கொடுத்தார். அது இன்னும் கீற்றுக் கொட்டகையிலேயே இருந்து வருகிறது. அங்கு கட்டடம் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இடத்தைச் சொல்லுங்கள்.

**திரு. எம். ஆண்டி அம்பலம்:** நத்தம் தொகுதி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நத்தம் தொகுதியில் எந்த ஊர்?

**திரு. எம். ஆண்டி அம்பலம்:** நத்தத்திலேயே இருக்கிறது. அவர்கள் கட்டடம் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அங்கு நிரந்தரக் கட்டடம் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்திலே நிரந்தரக் கட்டடத்திலே இயங்கி வருகின்ற தீயணைப்பு நிலையங்களுடைய எண்ணிக்கை 90 தான். 148 தீயணைப்பு நிலையங்கள் வாடகைக் கட்டடங்களிலேதான் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த ஓலைக் கொட்டகை தமிழ்நாட்டிலே உள்ள 13 ஓலைக் கொட்டகைகளிலே ஒன்றாக இருக்குமென்று கருதுகிறேன். 13 இடங்களில் அப்படி இருக்கின்றன. மற்றவற்றைப் பார்த்து மாண்புமிகு உறுப்பினர் திருப்தி அடைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விரைவில் அந்த ஓலைக் கொட்டகை அகற்றப்பட்டு நிரந்தரமான கட்டடம் கட்டுவதற்கு எடுக்கப்படுகின்ற முயற்சிகளில், அந்தப் பட்டியலிலே இதுவும் சேரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் பத்மா.





**டாக்டர் பத்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1976-ல் நன்னிலம் தீயணைப்பு நிலையத்திற்காக தமிழக அரசால் இடம் வழங்கப்பட்டது. 1995 ஆம் ஆண்டு தமிழக அரசால் நிதி உதவி அளிக்கப்பட்டு, ரூ. 40.71 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு அரசு ஆணையிட்டு, இன்று வரை நன்னிலம் தொகுதிக்கு தீயணைப்பு நிலையம் வரவில்லை. இந்த ஆண்டாவது நிதி ஒதுக்கப்பட்டு, தீயணைப்பு நிலையம் கட்டித் தரப்படுமா என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செய்தி எனக்குப் புதிதாகக் கிடைத்திருக்கின்ற செய்தியாகும். அதைப் பற்றிய விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் எனக்குத் தெரிவிப்பார்களேயானால், உடனடியாக விரைவான நடவடிக்கை உரிய நேரத்தில் எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற நிதியாண்டில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டு, வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிற குத்தாலம், குடவாசல் தீயணைப்பு நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டடம் கட்டித் தருவதற்கு உரிய திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னுடைய தொகுதியிலேயுள்ள ஒரு தீயணைப்பு நிலையத்தைப் பற்றிக் கவலையோடு இருக்கிற மாண்புமிகு உறுப்பினர், அதற்கெனத் தனியாகக் கேள்வி கேட்டிருந்தால், உரிய விவரங்களோடு நான் பதில் அளிக்க முடியும். மற்றவர்களின் கேள்வியிலே நுழைந்து கொள்வது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராசிபுரம் சட்டமன்றத் தொகுதியில், ராசிபுரத்தில் உள்ள தீயணைப்பு நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. சென்ற ஆண்டு முதலமைச்சர் அவர்கள் அதற்கு நிரந்தரக் கட்டடம் கட்டித் தரப்படும்,

[1998 மார்ச் 21

அதற்கான நிதி உதவி அளிக்கப்படும் என்று இங்கே கூறியிருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் கட்டடம் கட்டுவதற்கான நிதி வரவில்லை என்று அங்கே கூறுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆண்டாவது இதனைப் பரிசீலனை செய்து, நிரந்தரக் கட்டடம் அங்கே கட்டுவதற்கு வேண்டிய நிதியை அனுமதிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியின் வாயிலாக அது பற்றிய பரிசீலனை நடைபெறும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களுக்கு என்று தனி வீடுகள் இருப்பது போல தீயணைப்புத் துறையில் பணிபுரிபவர்களுக்கும் தனி வீடுகள் கட்டி வழங்கப்படுகின்றனவா? அப்படி வழங்கப்படவில்லையெனில் எதிர்காலத்தில் தீயணைப்புத் துறையில் பணிபுரிபவர்களுக்குத் தனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதும் அவர்களுக்காக வீட்டு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதற்கான பணி தொடர்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. வெங்கடாசலம்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையில் இருக்கிற தீயணைப்பு நிலையத்தினுடைய வண்டி மிக மிகப் பழமையான வண்டி. ஓர் ஆண்டிற்கு முன்னாலே புதுக்கோட்டையிலே தீப்பிடித்தபோது, ஒரு பர்லாங் தூரத்திற்கு வண்டியைத் தள்ள முடியாமல், தீப்பிடித்த இடத்திற்குச் செல்ல முடியாமல், தீயினால் முழுமையாக பாதிப்பு ஏற்பட்டது. இப்படிப் பழமையாகி இருக்கிற தீயணைப்பு வண்டியை மாற்றித் தருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? சென்ற ஆண்டு என்னுடைய தொகுதியிலுள்ள கீரமங்கலம், கரம்பக்குடிக்கு புதிய தீயணைப்பு நிலையம் கேட்டிருந்தேன். இந்த ஆண்டு தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அருள்கூர்ந்து நம்முடைய மாண்புமிகு



1998 மார்ச் 21]

முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு கீரமங்கலம், கரம்பக்குடிக்கு தீயணைப்பு நிலையம் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற கோரிக்கைகளை, அதற்கென்றுள்ள துறைக்கான மானியம் வரும்போது எழுப்பினால், அதைப் பற்றிப் பதில் சொல்ல இயலும். இப்போது இந்தக் கேள்வியின் அடிப்படையில் பதில் சொல்ல இயலாது. பழைய வண்டி மாற்றப்படுமா என்று கேட்டிருக்கிறார். அதைப் பற்றி ஆராய்ந்து உரிய அளவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 43, திரு. கே. சுந்தர், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**43—**

## தொடக்கப் பள்ளிகளில் அன்னை ஆசிரியர் கழகம்

***1589—திரு. கே. சுந்தர்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொடக்கப் பள்ளிகளில் "அன்னை ஆசிரியர் கழகம்" என்ற ஒரு அமைப்பு இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அது தேவைதானா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசாணை நிலை எண் 242, கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள்: 28-3-1994-ன்படி தொடக்கப் பள்ளி நடுநிலைப் பள்ளிகளில் அன்னை ஆசிரியர் கழகங்கள் இயங்கி வந்தன. பின்பு, மாநில பெற்றோர் ஆசிரியர் கழகப் பொதுக்குழுக் கூட்டத்தில், விதிகளுக்குத் திருத்தம் செய்து, தொடக்கப் பள்ளிகளில்

செயல்பட்டு வந்த 'அன்னை ஆசிரியர் கழகம்' இனி "பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகம்" என்ற பெயரில், பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகமாக விதிகளைப் பின்பற்றிச் செயல்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. தொடக்க/நடுநிலைப் பள்ளிகளில் இப்பொழுது அன்னை ஆசிரியர் கழகங்கள் இல்லை. அதற்குப் பதிலாக பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் செயல்படுகின்றன.

(ஆ) அன்னை ஆசிரியர் கழகத்தின் பணிகளை, பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகம் செய்து வருவதால் அன்னை ஆசிரியர் கழகம் தேவைப்படவில்லை.

**திரு. கே. சுந்தர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர்களாக சில பள்ளிகளிலே, மாணாக்கர்களுக்குத் தகப்பனாராகவும், பாதுகாவலர்களாகவும் இல்லாதவர்கள் இன்றைக்கும் தொடர்ந்து நீடிக்கின்றார்கள். அந்தத் தலைவர் பதவியிலிருந்து அவர்கள் நீக்கப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறுபடியும் அவர்களுக்கிடையில் ஒரு தேர்தல் நடத்துவதன் மூலமாக மாணவர்களுடைய பெற்றோர்கள் அல்லாதவர்கள் பொறுப்பிலேயிருந்து மாற்றப்படுவதற்கு வழிவகை காணப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 44, திரு. வெ.அ. ஆண்டமுத்து, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**44—**

## தட்டச்சுத் தேர்வு மையம் தொடங்குதல்

***7097—திரு. வெ.அ. ஆண்டமுத்து :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதி, பவானிசாகர், புஞ்சைப் புளியம்பட்டி அல்லது சத்தியமங்கலத்தில் புதியதாக ஒரு தட்டச்சுத் தேர்வு மையம் துவங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசு பரிசீலனையில் உள்ளதா?





**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. வெ.அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் தொகுதி, சத்தியமங்கலம் போன்ற மலைப்பகுதிகளில் ஏராளமான மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அங்குள்ள மாணவர்கள் கோபிச்செட்டிப்பாளையம் வரை சென்று, அங்குள்ள தட்டச்சுத் தேர்வு மையங்களிலே தேர்வு எழுத வேண்டியிருக்கிறது. பவானிசாகர், சத்தியமங்கலம் போன்ற இடங்கள் மலைப்பகுதிகளாக இருப்பதால், அங்கே பயங்கரமான கொள்ளைக்காரர்கள் இருப்பார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை. ஆகையால், சத்தியமங்கலத்தில் சுமார் 10 உயர்நிலை மற்றும் மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இருப்பதால், அங்கு ஒரு தேர்வு மையத்தினை ஏற்படுத்தினால் அங்குள்ள மாணவர்களுக்கு வசதியாக இருக்கும். ஆகையால், கல்வி அமைச்சர் அவர்கள் இதனை மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தட்டச்சுத் தேர்வு எழுதுகிற மாணவர்கள் 800 பேர் அளவிற்குத் தேர்வு எழுத வேண்டிய இடங்கள்தான் தேர்வு மையங்களாகத் தேர்வு செய்யப்பட்டு, அங்கு தேர்வுகள் நடைபெற்று வருகின்றன. 800 மாணவர்கள் என்பதில் 600-ஆக இருந்தால்கூட விதிவிலக்கு வழங்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. கோபிச்செட்டிப்பாளையம் என்ற அந்த மையத்திலேகூட ஏறத்தாழ 700 மாணவர்கள்தான் அந்தத் தேர்வுகளை எழுதுகிறார்கள். சத்தியமங்கலம் பகுதியிலே, அந்தப் பகுதியைச் சேர்ந்த தேர்வு எழுதக்கூடிய மாணவர்கள் 212 பேர்தான். 212 பேருக்காக ஒரு தேர்வு மையம் ஏற்படுத்துகின்ற அளவிற்குப் பொருளாதார நிலை இடம் தராது. மேலும், அப்படித் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டால், கோபிச்செட்டிப்பாளையத்தில், அங்கே இருக்கின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை குறைந்து, 450 மாணவர்கள் மட்டுமே தேர்வு எழுத வேண்டிய நிலை ஏற்படும். எனவே, அந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் அடிப்படையிலேயும், தேர்வு மையங்கள் தேர்வு செய்யப்பட வேண்டிய முறையின் அடிப்படையிலேயும் இந்த நிலையை மாற்றுவது

[1998 மார்ச் 21

என்பது இயலாத ஒன்றாக இருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 45, திரு. சி. வேலாயுதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**45—**

**யானைக்கால் நோயைத் தடுத்தல்**

***9670—திரு. சி. வேலாயுதன்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, இரணியல், திருவிதாங்கோடு பகுதியிலும், புதுக்கடையிலும் யானைக்கால் நோயைத் தடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டத்தில் யானைக்கால் நோயைக் கட்டுப்படுத்தக் கீழ்க்காணும் நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப் படுகின்றன:

(1) உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் அரசு மானியத்துடன் கூடிய கொசு ஒழிப்புத் திட்டம் 1975 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் யானைக்கால் நோய் பரவுவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

(2) யானைக்கால் நோய்க்குக் காரணமான மைக்ரோ பைலேரியா கிருமிகள் மனித இரத்தத்தில் இருப்பதை இரவு நேரத்தில்தான் கண்டறிய இயலும். எனவே, இரவு நேர சிகிச்சை மையங்கள் அமைக்கப்பட்டு இரத்தப் பரிசோதனை செய்து, நோயுள்ளவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

(3) கன்னியாகுமரி மாவட்டம் முழுமையிலும் யானைக்கால் நோயைத் தடுக்க டி.இ.சி கலந்த நல உப்புப் பொட்டலங்கள் அரசால் சலுகை விலையில் நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகிக்கப்பட்டு



1998 மார்ச் 21]

வருகின்றன. இதனால், யானைக்கால் நோய் பரவும் வேகம் வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

(4) யானைக்கால் நோய் பரவாமல் தடுக்க பத்மநாபபுரம், குழித்துறை, நாகர்கோவில் ஆகிய இடங்களில் யானைக்கால் நோய் கட்டுப்பாட்டுப் பிரிவுகளை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 9-45

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, இந்த நோயைப் பரப்பக்கூடிய கொசுக்கள் சாக்கடைகளில் வாழ்கின்றன என்று சொல்கிறார்கள். எனவே, இதுபோன்ற நோயுள்ள பகுதிகளில், சாக்கடை எதுவுமே தங்காத அளவுக்குச் சிறப்புக் கவனம் கொடுத்து, அதற்கென்று நிதி ஒதுக்கி, நவீன முறையில் அரசு செய்யுமா? யானைக்கால் நோய், தமிழகத்திலே வேறு ஏதாவது இடத்தில் உள்ளதா? இதை அறவே ஒழித்ததாக ஏதாவது சம்பவங்கள் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் கேள்வியில், கிராமப் பகுதிகளிலே இருக்கக்கூடிய யானைக்கால் நோயைக் கட்டுப்படுத்த, கொசுக்கள் சாக்கடைகளில் தங்காதபடி, சுத்தம் செய்து தரமுடியுமா என்று கேட்டார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், அதற்கேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரையில், இந்த நோய் வருவதைத் தடுப்பதற்காக, வீடியோ கேசட்டுகள், சினிமா ஸ்லைடுகள், போக்குவரத்துச் சாலைகளில் மக்கள் கவனத்தை ஈர்க்கும் விளம்பரப் பலகைகள், துண்டுப் பிரசுரங்கள், தொங்கும் விளம்பரப் படங்கள் ஆகியவற்றின் மூலம் மக்களுக்கு அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. அவற்றிலே ஒன்று, 'வீட்டைச் சுற்றி நீரைத் தேக்கி விடவேண்டாம்'; இரண்டு, 'கொசு வலையைப் பயன்படுத்தவும்'; மூன்று, 'இரவு நேரத்தில் இரத்தத் தடவல் எடுக்க உதவுங்கள்'; நான்கு, 'டி.இ.சி. கலந்த உப்புப் பொட்டலங்களைச் சமையலுக்கு அன்றாடம் தொடர்ந்து பயன்படுத்துங்கள்' என்று இப்படி விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. மற்ற மாவட்டங்களிலே இருக்கிறதா இந்த நோய் என்று கேட்டார். ஏற்கெனவே, ஒன்றாக இருந்த தென்னாற்காடு மாவட்டத்திலே இந்நோய் இருந்தது; அது இப்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

[1998 மார்ச் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆ. ஞானசேகரன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் Culex என்கிற கொசுவின் வகையினால் யானைக்கால் நோயும், பெண் Anophiles என்கிற கொசுவினால், மலேரியாக் காய்ச்சலும், மூளைக் காய்ச்சலும், இவைபோன்ற பலவகையான நோய்கள் பரப்பப்பட்டு வருகின்ற இந்தக் காலகட்டத்தில், சென்னை மாநகரில் கொசுவின் தொல்லை அதிகமாக உள்ளது. இந்தக் கொசுக்களை அடியோடு அழிப்பதற்கு, நம்முடைய அரசு சிறப்புக் கவனம் செலுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொசுத் தொல்லை நாடெங்கும் இருக்கிறது. அது சென்னையிலும் இருக்கிறது. சென்னையில் கொசுத் தொல்லையை ஒழிக்க, சென்னை மாநகராட்சி உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யானைக்கால் நோயை ஒழிப்பதற்காக தடுப்பு மருந்துகள், மாத்திரைகள் எங்கும் வழங்கப்பட்டன. நாகை மாவட்டம், வேதாரண்யத்திலும் அப்படி வழங்கப்பட்டதிலே, ஒருவர் மரணமுற்றார் என்ற தவறான செய்தி பரப்பப்பட்டு, அதன்மீது அரசின் சார்பிலும் விளக்கங்கள் அளிக்கப்பட்டன. ஆனால், மக்கள் முழுமையாக நம்பி, அந்த நோய்க்கான மாத்திரைகளைப் பயன்படுத்துவதற்கு அஞ்சுகிறார்கள். மேலும் அரசின் சார்பிலே அதற்கான விளக்கம் அளித்து, மக்களுக்குப் போதிய அளவுக்கு அந்த மாத்திரைகள் வினியோகிக்கப்படுமா? அதேபோல், மருத்துவமனைகளிலும் போதிய மருந்துகள் இல்லை என்ற பிரச்சினை வருகிறது. ஆகவே, அரசு மருத்துவமனைகளிலே போதிய மருந்துகளை வைப்பதற்கான முயற்சிகளை நம்முடைய அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காக வழங்கப்படுகிற மாத்திரைகள் மூலம் யாரும் இறப்பதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, தவறான



1998 மார்ச் 21]

தகவல் அங்கே பரப்பப்பட்டிருக்கிறது என்று சொன்னார். அதுபற்றிய உரிய விளக்கங்களையும் அரசு கொடுத்திருக்கிறது. மருந்துகளைப் பொறுத்தவரையில், மருந்து இல்லை என்ற குறைபாடு, தமிழகத்தில், இதுவரையிலே ஆரம்ப சுகாதார நிலையங்களில் இருந்தோ, வட்டாட்சி மருத்துவமனைகளில் இருந்தோ அல்லது மாவட்ட மருத்துவமனைகளில் இருந்தோ வரவில்லை. அப்படி எங்கேயாவது மருந்துகள் இல்லை என்ற புகார் இருக்குமானால், அது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால், நிச்சயமாக அக்குறை நிவர்த்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, கன்னியாகுமரி மாவட்டத்திலே 3 மையங்களிலே — நாகர்கோயில், இரணியல், குழித்துறை ஆகிய 3 மையங்களிலே யானைக்கால் நோய் தடுப்பு முகாம்கள் ஏற்கெனவே அமைக்கப்பட்டு இருக்கின்றன என்று சொன்னார்கள். கடந்த 5 ஆண்டுகளாக இதே பதிலை நான் சட்டமன்றத்திலே கேட்டுக் கொண்டிருக்கிறேன். சொல்கிறார்களே தவிர, செயல்படவில்லை. பாதிக்கப்பட்ட பகுதிகளிலே மருத்துவமனைகள் இருந்தால்தான். அங்கேயே டாக்டர்கள் Camp போட்டிருந்தால்தான், நோய்களைப் பார்ப்பதானாலும் சரி, வருவதற்கு முன் நோயைத் தடுப்பதானாலும் சரி, முயற்சிகளை மேற்கொள்ள முடியும். ஆனால் பதில்தான் இப்படி வருகிறதே தவிர, நடைமுறையில் சாத்தியக்கூறு ஏற்படவில்லை, நடக்கவே இல்லை. எனவே, அரசாங்கம்— கழிந்த அரசாங்கத்தை விட்டுவிடுங்கள். நமது அரசாங்கம் — வேகமாக செயல்பட்டு அதைத் தடுக்க முன்வரவேண்டும். காரணம், இந்தப் பிரச்சினை மிக அதிகமாகி வருகிறது. இதிலே அருமைச் சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. வேலாயுதன் அவர்கள் 3 இடங்களைத்தான் குறிப்பிட்டிருக்கிறார். கன்னியாகுமரி மாவட்டத்திலே 3 இடங்கள் என்று சொல்லியிருக்கிறார். ஆனால், 50-க்கும் அதிகமான pockets இப்படி யானைக்கால் நோயினால் பாதிக்கப்பட்ட பகுதிகள் கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கின்றன. அரசினுடைய கவனத்திற்கு அவர்கள் இதைக் கொண்டு வந்தார்களோ, இல்லையோ தெரியாது. எனவே, தயவுசெய்து இந்த முகாம்களைக் கொண்டு தனிக் கவனம் செலுத்தி.....

[1998 மார்ச் 21

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களே கேள்வி கேட்கவில்லையே, திரு. வேலாயுதன் அவர்கள் கேட்ட கேள்வியில்தானே நீங்கள் துணைக் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள் !

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரணம் உண்டு. கேட்டுக் கேட்டு அலுத்துப் போய்விட்டது. (சிரிப்பு) நடைமுறையில் சாத்தியக்கூறு இல்லாத காரணத்தினால், சரி, கேட்டாலும் ஒன்றுதான், கேட்காமல் இருந்தாலும் ஒன்றுதான் என்ற சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. எனவே நமது அரசைப் பொறுத்தவரைக்கும் இதிலே கவனம் செலுத்த வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார். அதனால் நான் அந்த மாவட்டத்து மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் சொல்கிறேன். கேள்வி நேரம் என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் இந்தப் பிரச்சினையைச் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். எனவே, போர்க்கால நடவடிக்கையைப் போல நீங்கள் முனைப்பாகச் செயல்பட்டு கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கிற யானைக்கால் நோயை—தென்னாற்காடு மாவட்டத்திலே நீங்கள் தடுத்து விட்டோம் என்று சொன்னீர்கள், பாராட்டுக்குரியது—அதைப்போல கன்னியாகுமரி மாவட்டத்திலே நமது அரசினுடைய முனைப்பான நடவடிக்கை மூலம் தடுப்பது.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணை வினா எப்படிக் கேட்பது என்று தெரிந்த இவ்வளவு அனுபவம் உள்ள உறுப்பினரான நீங்களே ஒரு உரையை நிகழ்த்திக் கொண்டிருக்கிறீர்களே! மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல கன்னியாகுமரியிலே இரணியல், திருவிதாங்கோடு, புதுக்கடையில் மட்டும் இந்த நோய் இருப்பதாக நான் நினைக்கவில்லை. குழித்துறை, குளச்சல், புதுக்கடை, விளவன்கோடு, திருவிதாங்கோடு, மேல்புரம், களியக்காவிளை, தலைக்குளம், நட்டாளம், கருங்கல், பள்ளியாடி, மண்டைக்காடு, காந்திபுரம் போன்ற பகுதிகளிலும் இந்த நோய் இருக்கிறது. அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் போர்க்கால நடவடிக்கை எடுக்க வேண்டும்



1998 மார்ச் 21]

என்று சொன்னார்கள். சட்டசபை முடிந்தவுடன் நானே அந்தப் பகுதிக்கு வருகிறேன். அனைத்து அதிகாரிகளையும் அழைத்துக் கொண்டு வந்து ஒரு மாநாடு போட்டு, மாண்புமிகு உறுப்பினர் முழு நேரம் இதைப் பற்றிப் பேசி, என்னென்ன தேவை என்று சொல்கிறார்களோ அதைச் செய்து தருவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த யானைக்கால் நோய், காலரா, மலேரியா போன்ற நோய்கள் பரவுவதற்கு கொசுக்கள்தான் காரணம். கொசுக்கள் தனியாகக்கூட அல்ல, கூட்டணி அமைத்துக் கொண்டு இந்த நாட்டில் விஷத்தை, நோயைப் பரப்பி வருகின்றன. இந்தக் கொசுக்களின் கூட்டணியை அழித்து, நோயிலிருந்து மக்களைக் காப்பாற்ற, நமது அரசு சிறப்புக் கவனம் செலுத்தி மருந்தடிக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொசுக்கள் தனியாக வந்து தொல்லை கொடுத்தாலும், கூட்டணி அமைத்துக் கொண்டு மக்களுக்குத் தொல்லை கொடுத்தாலும் சரி, மக்கள் விழிப்புணர்ச்சியோடு இருக்க வேண்டுமே தவிர, அரசாங்கம் இதில் ஒன்றும் செய்ய முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் 3 மையங்கள் செயல்படுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிகப்படியாக வளர்ந்து வருகிற புதுக்கடையிலும், சுசீந்தரம் பகுதியிலும் இதுபோன்ற மையங்களை அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புவதோடு, கொசுத் தொல்லை மிக முக்கியமான ஒன்று. குழித்துறை நகராட்சிப் பகுதியில் சாக்கடை தேங்கக்கூடிய ஒரு குளம் இருக்கிறது. அதை நகராட்சிக்கு ஒப்படையுங்கள் என்று 22 வருடங்களுக்கு முன்னால் நான் அந்த நகராட்சியின் தலைவராக இருக்கும்போது தீர்மானம் போட்டு அனுப்பினேன். இதுவரையிலும் அது நகராட்சிக்கு ஒப்படைக்கப்படவில்லை. அப்படிப்பட்ட குளங்களை நகராட்சிக்கு ஒப்படைத்து அதை நிரப்பி சாக்கடை அடையாமல்

இருக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் இதில் அதிகமான அக்கறையோடு இருக்கிற காரணத்தினால் குமரி மாவட்டத்தில் இதுகுறித்து ஒரு மாநாடு போடவேண்டும் என்று நான் தெரிவித்தேன். அந்த மாநாட்டை ஏற்பாடு செய்கின்ற நேரத்தில், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் அங்கே அழைத்து வந்து, இப்படிப்பட்ட குறைகளைப் போக்குவதற்கு உண்டான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் காஞ்சனா கமலநாதன்

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக அரசு ஏற்படுத்தப்பட்ட பிறகு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றுகின்ற மருத்துவர்கள் இப்பொழுதெல்லாம் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு உட்பட்ட கிராமப் பகுதிகளுக்கு மதிய நேரத்திலே சென்றிருந்து கண் சிகிச்சை முகாம்கள் (Eye camps) அமைத்தும், தோல் சிகிச்சை நிபுணர்களைக் கொண்டு, தோல் வியாதிகளைக் கண்டுபிடிப்பதற்காக தனியாக Camp அமைத்தும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அரசு இவ்வளவு அழகாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றபோது, இந்த யானைக்கால் நோயையும் அதோடு இணைத்து Filariasis Detection Camp என்று நடத்தச் சொல்லி ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குத் தேவையான அறிவுரைகளை அரசு வழங்கினால் அது பயன் உள்ளதாக இருக்குமே, அந்த முயற்சியை நம்முடைய அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணொளி வழங்குகின்ற நிகழ்ச்சிகளும், தோலில் ஏற்படக்கூடிய நோய்களைப் போக்கக்கூடிய நிகழ்ச்சிகளும் தமிழ்நாட்டிலுள்ள எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் குறிப்பாக கன்னியாகுமரி



மாவட்டத்திலேதான் இந்த யானைக்கால் நோய் அதிகமாக இருக்கிறது. அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய இந்த நோயைப் போக்குவதற்கு அரசு ஏற்கெனவே நடவடிக்கை எடுத்து வருகிறது. நிச்சயமாக இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன், அரசு இதிலே தீவிரமாகக் கவனம் செலுத்தி, இந்த ஆட்சிக் காலத்திலேயே இந்த நோயை அந்த மாவட்டத்திலிருந்து விரட்டுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 46, திரு. எம். முத்துராமலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**46—**

**அரசு மருத்துவமனை அமைத்தல்**

***11240—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பரங்குன்றம் ஒன்றியம், அவனியாபுரம் பேரூராட்சியில் அரசு மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அவனியாபுரம் பேரூராட்சியில் அரசு மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, அவனியாபுரம் பேரூராட்சி சுமார் 38 ஆயிரம், 40 ஆயிரம் மக்கள் தொகையைக் கொண்ட, வளர்ந்து வருகின்ற ஒரு பேரூராட்சியாகும். அங்குள்ள மக்கள் மருத்துவ வசதியை மிகவும் அவசியமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு

[1998 மார்ச் 21

அமைச்சர் அவர்கள் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்று சொன்னாலும், வருகின்ற ஆண்டிலாவது அதற்கான நடவடிக்கையை எடுப்பார்களா? அல்லது 24 மணி நேரமும் இயங்கக்கூடிய ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தையாவது அங்கே அமைத்துத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே சுட்டிக் காட்டியதைப்போல அவனியாபுரம் பேரூராட்சியினுடைய மக்கள் தொகை 35,810 ஆகும். 30 ஆயிரம் பேர் இருந்தாலே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்க வேண்டுமென்று விதிமுறைகள் இருக்கின்றன. இருந்தாலும் திருப்பரங்குன்றத்திலே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கின்றது, வலையன்குளத்திலே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கின்றது, நாகமலை புதுக்கோட்டையிலே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கின்றது, விராகனூரிலே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கின்றது. மக்கள் தொகை மட்டுமல்லாமல், மத்திய அரசு 8 கிலோ மீட்டருக்கு இடையிலே ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லாவிட்டால்தான் ஆரம்ப சுகாதார நிலையங்களை ஆரம்பிக்க வேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறது. ஆனால் அவனியாபுரம் பேரூராட்சிக்கு 5 கிலோ மீட்டர் தொலைவில் 24 மணி நேரமும் செயல்படக்கூடிய திருப்பரங்குன்றம் ஆரம்ப சுகாதார நிலையமும், 9 கிலோ மீட்டர் தொலைவில் வலையன்குளம் ஆரம்ப சுகாதார நிலையமும், 10 கிலோ மீட்டர் தொலைவில் மதுரை அரசு மருத்துவமனையும் இருக்கின்ற காரணத்தால் அவனியாபுரத்தில் ஆரம்பிக்க இயலவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான ஒட்டன்சத்திரத்தில் இயங்கிவந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை சென்ற ஆண்டு அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்திக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே எக்ஸ்ரே, ஸ்கேன் வசதிகள் மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு இல்லாமல் உள்ளன. எனவே,



1998 மார்ச் 21]

அவற்றை அமைத்துத் தர அரசு முயற்சி செய்யுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெல்லாம் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தாலுக்கா மருத்துவமனையாக மேம்படுத்தப்படுகின்றனவோ, அங்கெல்லாம் தாலுக்கா மருத்துவமனைக்குத் தேவையான அடிப்படை வசதிகளை, கருவிகளை நிச்சயம் இந்த ஆண்டு அரசு அமைத்துத் தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. தளபதி.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றம் அரசு மருத்துவமனையில் புதிய ஆம்புலன்ஸ் வண்டி இருந்தும், ஓட்டுநர் இல்லாததால் பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கிறது. அப்படிப்பட்ட வண்டிகளுக்குத் தற்காலிக அடிப்படையில் ஓட்டுநர்களை நியமித்து அவற்றைப் பயன்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு வரையில் ஆம்புலன்ஸே இல்லாமல் இருந்தது. இந்த ஆண்டு ஆம்புலன்ஸ்கள் வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு ஓட்டுநர்கள் இல்லை என்கிறார்கள். ஓட்டுநர்களையும் அங்கே நியமிக்க வேண்டுமென்ற அறிவுரை வழங்கி, சென்னைக்கு வந்து அந்த வண்டிகளை ஓட்டுநர்கள் எடுத்துக்கொண்டு போய் இருக்கின்றார்கள். தனிப்பட்ட முறையிலே எங்கேயாவது புகார்கள் வருமேயானால் நிச்சயமாக அங்கு ஓட்டுநர்கள் உடனடியாக நியமிக்கப்படுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான ஆண்டிமடம் தொகுதியிலே செந்துறையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் அரசு மருத்துவமனையாக மாற்றப்பட்டு பல மாதங்கள் ஆகின்றன. இன்னும்

அந்த மருத்துவமனைக்கான அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லை. அவற்றைச் செய்து தர அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அவசியம் செய்து தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களையெல்லாம் மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்துவதிலே அரசு முன்னுரிமை கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15 ஆண்டுகளுக்கு முன்னாலே ஆரம்பிக்கப்பட்டதா, 5 ஆண்டுகளுக்கு முன்னாலே ஆரம்பிக்கப்பட்டதா என்பதல்ல. எல்லா மருத்துவமனைகளையும் தரம் உயர்த்த வேண்டும், தேவையான வசதிகளைச் செய்துதர வேண்டும், கட்டடங்கள் கட்ட வேண்டும், டாக்டர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை, அதன்படி செய்து தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னமனூர் ஒன்றியத்தில் குச்சனூர், டவுன் பஞ்சாயத்தைச் சேர்ந்தது. அது 10,000 ஜனத்தொகை கொண்ட ஒரு பெரிய நகரமாக இருக்கின்றது. ஆனால் அங்கேயிருந்து சின்னமனூர் மருத்துவனைக்குச் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை உள்ளது. அது கிட்டத்தட்ட 10 கி.மீ.க்கும் அதிகமாக இருக்கிறது. ஆகவே, குச்சனூர் டவுன் பஞ்சாயத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்றையதினமே இங்கே தெரிவித்திருக்கிறேன். 30,000 மக்கள் தொகை இருந்தால்தான் எந்தப் பகுதிக்கும்



ஆரம்ப சுகாதார நிலையம் அளிக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கம் விதிமுறை வகுத்திருக்கின்ற காரணத்தினால் 10,000 மக்கள் தொகை இருக்கக் கூடிய பகுதிக்கு புதிய ஆரம்பச் சுகாதார நிலையம் கொடுக்க இயலாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகள் சிலவற்றில் மருந்துகள் இல்லையென்றால் அவற்றை வெளியே வாங்குவதற்கு—அரசு குறிப்பிட்ட தொகையை மட்டும் அதாவது ரூ.20,000/-க்கு மேல் வாங்கக்கூடாது, ரூ.10,000/-க்கு மேல் வாங்கக்கூடாது என்ற ஒரு கட்டுப்பாட்டை வைத்திருக்கின்ற காரணத்தினால், உயிர் காக்கும் மருந்துகள் வாங்குவதற்குச் சில சமயங்களில் நிதி இல்லை என்கின்ற காரணத்தினால் சில நோயாளிகள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, உயிர் காக்கும் மருந்துகள் எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கி நோயாளிகளைக் காப்பாற்றுவதற்கு அரசு வைத்திருக்கின்ற தடையை நீக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயிர் காக்கும் மருந்துகள் அத்தனையும் அரசாங்கத்தாலே விநியோகிக்கப்படுகின்றன. 269 வகையான மருந்துகள் அரசாங்கத்தாலே வாங்கப்பட்டு மருத்துவமனைகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலேயும் கம்ப்யூட்டர் மூலம் இது சரிபார்க்கப்பட்டு அன்றாடம் எந்தெந்த மாவட்டங்களுக்கு என்னென்ன மருந்துகள் வேண்டுமோ அவை எல்லாம் அனுப்பி வைக்கப்படுகின்றன. இது மட்டுமல்லாமல் அனைத்து மருத்துவமனைகளுக்கும், அது மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக இருந்தாலும் சரி, மாவட்ட மருத்துவமனையாக இருந்தாலும் சரி, தாலுக்கா மருத்துவமனையாக இருந்தாலும் சரி, ஆரம்பச் சுகாதார நிலையங்களாக இருந்தாலும் சரி, அந்த மருத்துவமனைகளுக்கு எவ்வளவு மருந்துகளை ஒதுக்குகின்றோமோ அதிலே 10 சதவிகிதப் பணத்தையும் ஒதுக்கி அவசரத் தேவைக்கு மருந்துகள் இல்லையென்று சொன்னால், இந்த 269 வகையான மருந்துகளிலே நோயாளிகளைக் காப்பாற்ற முடியவில்லை என்று டாக்டர்கள் கருதுவார்களேயானால் 10 சதவிகிதப்

[1998 மார்ச் 21

பணத்தையும் கொடுத்து—நீங்கள் அந்த நோயாளிகளைக் காப்பாற்றுவதற்கு வெளியே மருந்துகள் வாங்கிக் கொள்ளலாம் என்ற ஆணையும் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. எனவே, இந்தக் குறைபாடு தமிழகத்திலே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளிலே இயங்கி வருகின்ற மருத்துவமனைகளை மேம்பாடு செய்வதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா? என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற சோழவந்தான் மருத்துவனை எந்தவித வசதியும் இல்லாமல், படுக்கை வசதிகூட இல்லாத நிலையிலே இருக்கின்றது. அதை மேம்பாடு செய்வதற்கு அரசிடம் திட்டம் இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண ஆரம்பச் சுகாதார நிலையங்களில் படுக்கை வசதிகள் கிடையாது. நோய்வாய்ப்பட்ட மக்கள் அவசரத் தேவைக்கு சிகிச்சை பெறுவதற்காக ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு வரும் நேரங்களிலே அவசர சிகிச்சை அளிப்பதற்கான வசதிகள்தான் அங்கே இருக்கின்றன. அவர்கள் உள்நோயாளிகளாகச் சேர்ந்து, படுக்கையிலே படுத்து சிகிச்சை பெறவேண்டும் என்று கருதினால், பக்கத்திலே இருக்கக்கூடிய தாலுக்கா மருத்துவமனைகளிலேதான் சிகிச்சை பெறுவதற்கு அணுக வேண்டும். அரசு இதைக் கருத்திற்கொண்டுதான் 24 மணி நேரமும் செயல்படக்கூடிய மருத்துவமனைகளை உருவாக்கி வருகிறது. அப்படிப்பட்ட மருத்துவமனைகளிலே 6 படுக்கைகளைத் தமிழக அரசு வாங்கிக் கொடுத்து நோயாளிகளை அங்கேயே சேர்த்து சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற அந்த மருத்துவமனையை 24 மணி நேரமும் இயங்கக்கூடிய மருத்துவனையாக உயர்த்த முடியுமா என்பதை அரசு பரிசீலித்து, உரிய நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 47. திரு. இரா மணிமாறன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.



1998 மார்ச் 21]

47—

## திண்டுக்கல் வட்டத்தை இரண்டாகப் பிரித்தல்

***9983—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் வட்டத்தை இரண்டு வட்டங்களாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இப்பொருள் குறித்த செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் வட்டம் மிகப் பெரிய வட்டம். சின்னாளப்பட்டி ஒன்றியம், ஆத்தூர் ஒன்றியம், ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் இப்படிப் பல ஊராட்சிகளை உள்ளடக்கிய மிகப் பெரிய வட்டமாகும். மக்கள் தொகையும் மிகவும் அதிகம். எனவே, அரசு நிர்வாக நலன் கருதியும், மக்கள் நலன் கருதியும், இந்த வட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு மீண்டும் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு உறுப்பினரின் உணர்வை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் நடப்பு ஆண்டில், புதிய வட்டங்கள், புதிய வருவாய்க் கோட்டங்கள் போன்ற நிருவாக அமைப்புக்களை நிதிநிலை காரணமாக உருவாக்குவதில்லை என்று 20-6-1997-ல் அரசு முடிவு எடுத்துள்ளது. எனவே, வரும் 20-6-1998-க்குப் பிறகு உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். பரிசீலிக்கப்படும் என்று சொல்லுகின்ற போது, ஒத்துக்கொண்டதாகப் பொருளாகாது. ஒத்துக்கொள்ளக்கூடியதாக இருக்குமேயானால் நிச்சயம் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண்: 48, திரு. இரா. பெர்னார்டு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[1998 மார்ச் 21

48—

**மீன் குத்தகை ஏலம் விடும் காலத்தை மாற்றியமைத்தல்**

***3655—திரு. இரா. பொன்னார்டு:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட குளங்களில் குத்தகை அடிப்படையில் மீன் வளர்ப்பதற்கு சனவரி, பிப்ரவரி மாதங்களில் ஏலம் விடுவதை மாற்றி ஜூன், ஜூலை மாதங்களில் ஏலம் விட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில் ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட குளங்களில் குத்தகை அடிப்படையில் மீன் வளர்ப்பதற்கு சனவரி, பிப்ரவரி மாதங்களில் ஏலம் விடுவதை மாற்றி, ஜூன், ஜூலை மாதங்களில் ஏலம் விட்டால் நிர்வாகச் சிக்கல்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. மேலும், விவசாயத்திற்குப் பாதிப்பு ஏற்படும். எனவே, தற்போதுள்ள நடைமுறைப்படி, சனவரி, பிப்ரவரி மாதங்களில் மீன் குத்தகை ஏலம் விடுவது தொடரும்.

**திரு. இரா. பொன்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சனவரி, பிப்ரவரி மாதங்களில் குளங்களில் குத்தகை அடிப்படையில் ஏலம் விடுவதை மாற்றினால் நிர்வாகச் சிக்கல் ஏற்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால், நிர்வாகக் காரணங்களைக் காட்டி, ஏற்கெனவே இருக்கின்ற நடைமுறைகளை மாற்றுகின்றபோது ஊராட்சி ஒன்றியங்களுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. ஆகவே, நடைமுறைகளை மாற்றாவிட்டாலும், இழப்புகளைத் தவிர்க்க, அரசு முயற்சி மேற்கொள்ளுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தனியாக, குறிப்பிட்ட இடங்களில்



1998 மார்ச் 21]

இப்படிப்பட்ட இழப்புகள் வருவதற்குக் காரணமாக இருப்பவற்றை எல்லாம் அறிந்து, எங்களுக்குத் தகவல் தெரிவிப்பார்களேயானால் சம்பந்தப்பட்ட இடங்களில் அதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ரவி அருணன்.

**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறுவடைக் காலம் முடிந்ததும், குளங்களில் தண்ணீர் இருந்தாலும்கூட மீன்களைப் பிடிப்பதற்காகத் தண்ணீரைத் திறந்து விட்டு விடுகிறார்கள். அதனால், அந்தப் பகுதிகளிலே நிலத்தடி நீர் குறைந்து குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படுகிறது. உதாரணமாக, என்னுடைய தொகுதியில், செங்கோட்டையில், நல்ல மழை பெய்தும்கூட, அனைத்துக் குளங்களிலும் மீன் பிடிப்பதற்கு என்று தண்ணீர் திறந்துவிடப்பட்டிருக்கின்ற காரணத்தால் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. ஆகவே, குளங்களில் தண்ணீர் இருக்கும்போது மீன் பிடிப்பதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு எதிரானதாக விடையாகத்தான் இது அமைந்துள்ளது. இந்த அரசும் அப்படித்தான் கருதுகிறது. எனவே, இப்படிப்பட்ட நிலைகளில், ஆராய்ந்துதான் ஒரு முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது. அதிகமான இடங்களில், மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவி அருணன் அவர்கள் குறிப்பிட்டதைப் போலத்தான் நிலைமை இருக்கிறது. அதனால் இந்த மாதங்களை என்று முடிவு செய்திருக்கிறோம். இல்லாவிட்டால் அவற்றை மாற்றுவதற்கு எங்களுக்குச் சங்கடம் ஒன்றும் இல்லை.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 49, திரு. ந. பாண்டுரங்கன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

[1998 மார்ச் 21

49—

**கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் டீசல் விற்பனை நிலையம்**

***8686—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் டீசல் விற்பனை நிலையம் (Bunk) பெரணமல்லூரில் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன்/இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் / இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் ஆகியவை அந்தப் பகுதியில் டீசல் விற்பனை நிலையம் அமைக்க விண்ணப்பம் கோரும்பொழுது, பெரணமல்லூர் வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு மையம் அதற்கென விண்ணப்பிக்க உள்ளது. அப்போது இம்மையம் மூலம் டீசல் விற்பனை மையம் அமைக்கப் பரிந்துரை செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 50, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

50—

**பொய்கை ஆற்று நீரை ராதாபுரம் கால்வாய்க்கு வழங்குதல்**

***10552—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மார்ச் 21]

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பொய்கை ஆற்று நீரை ராதாபுரம் கால்வாய்க்கு வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பொய்கையாற்றின் நீர்வரத்து அடிப்படையில் இவ்வாற்று நீரை ராதாபுரம் கால்வாய்க்கு வழங்க வாய்ப்புகள் இல்லை.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் தொகுதி மிகவும் வறட்சியான பின்தங்கிய பகுதி என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். நாம் காவிரியிலிருந்து தண்ணீர் தருவார்களா என்று ஏங்கிக் கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில், ராதாபுரம் தொகுதிக்கு, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பேச்சிப் பாறையிலிருந்து தண்ணீர் திறந்துவிடுவதற்கு மறுக்கிறார்கள். மணிமுத்தாறு அணையிலிருந்து புத்தன்தருவைக்குத் தண்ணீர் தருவதற்கு, ஜனவரி 4-ந்தேதியே அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்து இருந்தும், இன்றுவரை தண்ணீர் திறந்துவிடப்படவில்லை. பொய்கையாறு திட்டம் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட திட்டம். இந்தத் திட்டத்தில், சாலைப்புதூர் குளம், தெற்கு சிவகங்கை குளம், மேலப்பாவூர் குளம், கீழப்பாவூர் குளம், பழவூர் குளம் ஆகிய ஐந்து குளங்களுக்கு - ராதாபுரம் தொகுதிக்குட்பட்ட குளங்களுக்கு, தண்ணீர் தருவதற்கு இடம் அளித்து, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. பழவூர் குளத்தையும் தாண்டி, ராதாபுரம் கால்வாயில் தண்ணீர் திறந்துவிடுவதற்கு, இந்தப் பொய்கையாற்றின் மூலம் இந்தத் திட்டத்தில் வகை செய்ய வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்வதோடு, புத்தன்தருவை குளத்திற்கு, தண்ணீர் திறந்து விடுவதற்கு, ஆணை பிறப்பித்தும், அதிகாரிகள் செயல்படவில்லை என்பதால் நாளை முதலாவது 200 கன அடி தண்ணீர் வீதம் 15 நாட்களுக்குத் தண்ணீர் தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று உங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதோடு பேச்சிப்பாறை அணையிலிருந்து ராதாபுரம் கால்வாய்க்கு 200 கன அடி வீதம் தண்ணீர் தந்து அந்த இரண்டு செயற் பொறியாளர்களையும்...

[1998 மார்ச் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது ஒரு துணை வினாவா? தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்துப் பகுதிகளிலிருந்தும் தண்ணீர் வேண்டுமென்று கேட்பீர்கள் போல் இருக்கிறது. உட்காருங்கள். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொய்கையாற்று அணை கட்டுவதன் நோக்கமே, தோவாளை தாலுக்காவிலும், ராதாபுரம் தாலுக்காவிலும் இருக்கின்ற 500 ஏக்கர் பரப்பிற்குத் தண்ணீர் தரவேண்டுமென்பதுதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ராதாபுரம் தொகுதியிலுள்ள, சாலைப்புதூர் குளம், தெற்கு சிவகங்கை குளம், மேலப்பாவூர் குளம், கீழப்பாவூர் குளம், பழவூர் குளம் ஆகிய ஐந்து குளங்களுக்கு நாங்கள் தண்ணீர் தர இருக்கிறோம். இதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஆனால் அதைக் கொண்டு வந்து, ராதாபுரம் கால்வாய் சேனலில் விடமுடியுமா என்று கேட்கிறார்கள். அதுபற்றி என்னால் சொல்ல முடியாது. காரணம், பொய்கையாற்று அணை இன்னும் கட்டி முடியவில்லை. கட்டி முடிந்த பிறகுதான் உபரி நீர் இருக்கிறதா, இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும். 500 ஏக்கர் நிலங்களுக்கு 95 மில்லியன் கன அடி தண்ணீர்தான் அதன் கொள்ளளவாக இருக்கும்; இதை மறுமுறை நிரப்பினால்கூட 190 மில்லியன் கன அடி தண்ணீர்தான். ஆற்றின் நீர்வரத்தைப் பார்த்தால், 136 மில்லியன் கன அடி தண்ணீர்தான். தோவாளை சேனல் பகுதிக்கும் உங்களுக்கும் தருவதற்கு மிச்சம் தண்ணீர் இருக்கிறதா என்பது அணை கட்டி முடிந்த பிறகுதான் தெரியும்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் இதோடு சேர்த்து சந்தடிசாக்கில் ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார். புத்தன்தருவைக்குத் தண்ணீர் தருவதற்கு—திசையன்விளையிலிருந்து - சட்டத்தில் இடமில்லை என்றாலும், அந்தப் பகுதி மக்கள் வறட்சியால் வாடுகிறார்கள் என்பதற்காக 1989-ல் கலைஞர் ஆட்சிக்கு வந்தபோது, அந்தப் பகுதிக்கு மணிமுத்தாறிலிருந்து தண்ணீர் தந்தார்கள். மீண்டும் தருவதற்கு ஏற்பாடு செய்ய இருக்கிறோம். கருணை அடிப்படையில் கொடுக்கிறோம். ஆனால் பாசனதாரர்கள் மறுக்கிறபோது, அவர்களுக்குச் சமாதானம் சொல்கிறோம். எனவே இந்த அரசு சட்டத்தின்படி செய்ய வேண்டிய



1998 மார்ச் 21]

வேலைகளைச் செய்கிறது; கருணை அடிப்படையில் செய்ய வேண்டியவற்றையும் கருணையோடு அணுகி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 51....(குறுக்கீடு) திரு. மு. அப்பாவு உட்காருங்கள், நீங்கள் நீளமான கேள்வி கேட்டீர்கள், அமைச்சர் அவர்களும் நீளமான பதிலைத் தந்திருக்கிறார்கள், ஆகவே உட்காருங்கள்.

முற்பகல் 10-15

**திரு. மு. அப்பாவு:** குடிக்கத் தண்ணீர் இல்லை, தயவு செய்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தனியாகப் போய்க் கேளுங்கள். இப்பொழுது நீங்கள் உட்காருங்கள். அடுத்த அமைச்சர் எழுந்துவிட்டார். நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) நான் அனுமதிக்க முடியாது, உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of order எல்லாம் நான் அனுமதிக்க முடியாது. நீங்கள் அமைச்சரிடம் போய்த் தனியாகக் கேளுங்கள்.

வினா எண் 51—திரு. அ.லெ. சுப்பிரமணியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**51—**

**மோட்டார் விபத்து வழக்குகள் தீர்ப்பாயம் அமைத்தல்.**

***6750—திரு. அ.லெ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கி திருநெல்வேலியில் தனியாக ஒரு மோட்டார் விபத்து வழக்குகள் தீர்ப்பாயம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1998 மார்ச் 21

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மோட்டார் விபத்து வழக்குகள் நீண்ட நாட்களாகத் தீர்ப்பு வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளன. 1992ஆம் ஆண்டு வழக்குகள்கூட நிலுவையில் உள்ளன. எனவே, குடும்பத்தினரையோ, உறுப்பினரையோ இழந்து வருவாய் இல்லாமல் வறுமையில் வாடும் அத்தகைய குடும்பங்களின் அவல நிலையைப் போக்க, தேங்கிய வழக்குகளை விரைந்து முடிக்கும் வகையில் நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கிய ஒரு தீர்ப்பாயம் அமைக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று கேட்கிறேன். உயர்நீதிமன்றம் ஏற்கெனவே பரிந்துரை செய்து இருக்கிறது என்று அறிகிறேன். எனவே, அரசு மீண்டும் பரிசீலிக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தின்படி, இதுபோன்ற தீர்ப்பாயங்கள் முதலில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டன. அதற்குப் பிறகு, 1994-ல் 1359 எண் உள்ள அரசு நிலை ஆணையில், முதன்மை குற்றவியல் நீதிமன்ற நடுவர்கள், மாவட்ட நீதிபதிகள் மற்றும் துணை நீதிபதிகள் மோட்டார் விபத்து வழக்குகளை விசாரிப்பதற்காக, அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டு இருக்கிறது. குறிப்பாக, இதைப் பயன்படுத்தி சமீபத்தில் பண்ருட்டி, பழனி, விருதுநகர், நாகர்கோவில் ஆகிய அமர்வு நீதிமன்றங்களில் மோட்டார் விபத்து தீர்ப்பாயங்கள் அமைத்து, துணை நீதிபதிகளை வாகன விபத்து தீர்ப்பாயங்களில் உறுப்பினர்களாக நியமித்து ஆணை வெளியிடப்பட்டு இருக்கிறது. பொதுவாக அங்கே தேங்கி இருக்கிற வழக்குகளைக் கணக்கில் கொண்டு இதுபோன்ற தீர்ப்பாயங்கள் நியமிக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதிகளில் அதிக வழக்குகள் தேங்கி இருக்குமானால், இதுபோன்ற தீர்ப்பாயங்கள் அமைத்து, அவற்றிற்குச் சிறப்பு நீதிபதிகள் மூலமாகத் தீர்ப்பு வழங்கப்படும்.



1998 மார்ச் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 52, திரு. டி. சுதர்சனம். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**52—**

## மண்டலப் போக்குவரத்து கழகம் அமைத்தல்

***8550—திரு. டி. சுதர்சனம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூந்தமல்லியில் மண்டலப் போக்குவரத்து அலுவலர் (R.T.O.) அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம் சென்னையை ஒட்டி இருக்கிறது. அதற்கு R.T.O. அலுவலகம் திருவள்ளூரிலே இருக்கிறது. நிறைய வாகனங்கள் சென்னையை ஒட்டி இருக்கின்ற புறநகர்ப் பகுதிகளில் இருக்கின்றன. அதனாலே, ஏதாவது சிறு விபத்து ஏற்பட்டால்கூட சென்னையின் புறநகர்ப் பகுதியிலே இருந்து திருவள்ளூருக்கு அந்த வாகனத்தைக் கொண்டு சென்று ஆய்வு செய்ய வேண்டிய ஒரு நிலை இன்றைக்கு இருக்கின்றது. ஏற்கெனவே ஆலந்தூரிலே அந்த அலுவலகம் இருந்தது; மாவட்டம் பிரிந்த காரணத்தினாலே, அந்த அலுவலகம் மாற்றப்பட்டு இருக்கிறது. அதனால், புறநகர்ப் பகுதியை ஒட்டி இருக்கின்ற பூவிருந்தவல்லியிலே R.T.O. அலுவலகம் இல்லை என்று சொன்னாலும் கூட, ஒரு யூனிட் அலுவலகமாவது அரசு அமைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி மாவட்டமாகப் பிரிக்கப்பட்டதற்குப் பிறகு

[1998 மார்ச் 21

27-6-1997-லிருந்து திருவள்ளூரில் புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் இயங்கி வருகின்றது. பூவிருந்தவல்லி தாலுக்காவில் 1,467 போக்குவரத்து வாகனங்களும், 12,200 போக்குவரத்து அல்லாத வாகனங்களும் உள்ளன. அங்கே அதிக வாகனங்களும் இல்லை. பக்கத்திலே 27 மைல் தொலைவிலே திருவள்ளூரில் இந்த அலுவலகம் அமைந்து இருக்கிறது. ஆகவே, இப்போது பூவிருந்தவல்லியில் அலுவலகத்தை அமைக்கிற சாத்தியக்கூறு எதுவும் இல்லை. அரசினுடைய நிதிநிலையைப் பொறுத்து, வருங்காலங்களில் வேண்டுமானால் உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 53, திரு.பி.வி.எஸ். வெங்கடேசன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**53—**

**திராவிட மொழிகள் வளர்ச்சிக்குப் பல்கலைக்கழகம் ஏற்படுத்துதல்**

***5807—திரு பி.வி.எஸ். வெங்கடேசன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திராவிட மொழிகள் வளர்ச்சிக்குப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கு, எப்போது ஏற்படுத்தப்படும்?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தற்போது இல்லை.

**திரு. பி. வி. எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத்' தலைவர் அவர்களே, திராவிட மொழிகள் வளர்ச்சிக்கு நம்முடைய அரசு நல்லமுறையில் பாடுபடுகின்றது என்று இருந்தாலும்கூட, அதற்கான தனிப் பல்கலைக்கழகம் சென்னையிலோ அல்லது



1998 மார்ச் 21]

தமிழ்நாட்டையொட்டி இருக்கின்ற border நகரங்களிலோ அமைத்தால் நல்ல முறையில் இருக்கும் என்று நாங்கள் நினைக்கின்றோம். ஆகவே, அரசு இது குறித்து நடவடிக்கை எடுத்து செயல்படுத்துமா? மேலும், நம்முடைய தமிழ் மொழி வளர, இந்தியாவின் தேசிய மொழிகளில் ஒன்றாக வளர நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினருடைய மூல வினா தமிழகத்தில் ஒரு திராவிட மொழிப் பல்கலைக் கழகம் தொடங்கப்படுமா என்பது. அந்த அடிப்படையில்தான், 'தற்போது இல்லை' என்ற விடை தெரிவிக்கப்பட்டது. ஆனால் ஏற்கெனவே மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களோடு தொடர்புகொண்டு ஆந்திர மாநில முதல்வர் திருமிகு சந்திரபாபு நாயுடு அவர்கள், அவருடைய தொகுதியில் குப்பம் பகுதியில் திராவிடப் பல்கலைக் கழகத்தைத் தொடங்கியிருக்கிறார்கள் என்ற செய்தியை நான் அறிவிக்க விரும்புகிறேன். அப்படித் தொடங்கப்பட்ட அந்தப் பல்கலைக்கழகம், திராவிட மொழிகளுடைய மேம்பாட்டுக்காக இயங்கவேண்டுமென்ற அடிப்படையில் நடுவண் அரசினுடைய உதவித் தொகையோடு, தென் மாநிலங்களாகிய நான்கு மாநில அரசுகளின் உதவித் தொகையோடுதான் இப்போது இயங்குகிறது. அந்த வகையில் ஆந்திர முதல்வர் அவர்கள் நம்முடைய முதல்வர் அவர்களுக்கு மடல் எழுதி, இதற்கென இரண்டு கோடி ரூபாய் தாங்கள் வழங்கவேண்டுமென்று கேட்டபோது, செய்தியைப் பார்த்த அடுத்த நொடியிலேயே முதல் தவணையாக ரூ. 50 இலட்சம் தமிழக அரசால் ஆந்திராவில் இருக்கிற திராவிடப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது. பிற மாநிலங்கள் வழங்கியதைவிட, இதுதான் வழங்கப்பட்ட தொகைகளிலேயே மிகப் பெரிய தொகை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது மட்டுமல்லாமல் திராவிட மொழிகளை ஆய்வு செய்வதற்காக ஏற்கெனவே பன்னாட்டுத் திராவிட மொழியியல் கழகம் என்ற அமைப்பு தற்போது திருவனந்தபுரத்தில் இருக்கிறது. அதற்கும் நம்முடைய தமிழக அரசு ரூ. 10 இலட்சம் உதவி செய்து இருக்கிறது. ஒரு காலத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தினுடைய துணை வேந்தராக இருந்த முனைவர் வா.அய். சுப்பிரமணியம்

[1998 மார்ச் 21

அவர்கள்தான் ஆந்திராவில் இருக்கின்ற திராவிடப் பல்கலைக் கழகத்தினுடைய இணை வேந்தராக இருக்கின்றார்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு.பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon.Speaker Sir, May I know from the Hon. Minister through the Hon. Speaker, whether Telugu, Kannada and Malayalam are also included in Kuppam University? May I also know from the Hon. Minister, the steps taken for improving these languages?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றை நினைவில் கொள்ளவேண்டும். திராவிட மொழிகள் என்றாலே திருந்திய மொழிகளாகிய கன்னடமும், களிதெலுங்கும், கவின் மலையாளமும், துளுவும் எல்லாம் இணைந்த மொழிகள்தான். எனவே, ஆந்திராவில் இருக்கின்ற திராவிடப் பல்கலைக்கழகத்தில் எல்லா மொழிகளுக்கும் தனித் தனித் துறைகள் இருக்கின்றன. அங்கே ஆய்வுகள் நடைபெறுகின்றன. நீங்கள் நினைப்பதுபோலவே அந்தத் திராவிடப் பல்கலைக்கழகம் உங்களுடைய மொழியை வலுப்படுத்துவதற்கு முழு முயற்சிகளுக்கு ஏற்பாடு செய்யும். இன்னும் சொல்லப்போனால், அவர் சார்ந்திருக்கிற, விரும்பிக் கேட்கிற தெலுங்கு மொழி மேம்பாட்டுக்கு உதவும் வகையில் அந்தப் பல்கலைக்கழகமே ஆந்திர மாநிலத்தில்தான் இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் அளிக்கிறபோது, கன்னடமும், களிதெலுங்கும், கவின் மலையாளமும் துளுவும் திராவிட மொழிகள் என்று சொன்னார்கள். இத்தனை மொழிகளுக்கும் தாய் மொழியாக இருப்பதே தமிழ் மொழிதான். தமிழ்த்தாயின் வயிற்றிலிருந்து பிறந்ததுதான் கன்னடமும், களிதெலுங்கும் என்று சொல்லப்பட்டு, பல்லுயிரும் பலவுலகும் படைத்தளிக்கும், என்று சொல்லப்படுகிற மனோன்மணீயம் சுந்தரனார் பாடலில் வருகிறபோது, தமிழின் வயிற்றிலிருந்து பிறந்த இந்த மொழிகளுக்கு இங்கே முக்கியத்துவம் அளித்து ஆந்திர மாநிலத்தில் திராவிட மொழிப் பல்கலைக் கழகம்



1998 மார்ச் 21]

அமைத்திருக்கிறபோது, தமிழ் வளர்ச்சிக்கு என்று தனித் துறையும் தனி அமைச்சரும் இங்கே வைத்திருக்கிற நேரத்தில், ஏன் திராவிட மொழிப் பல்கலைக்கழத்தை இங்கே துவக்கக்கூடாது? ஏன் அதற்கான வளர்ச்சிப் பணியில் நாம் அக்கறை செலுத்தக்கூடாது? ஆந்திர முதல்வர் கடிதம் எழுதிக் கேட்டார், நாம் 50 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறோம் என்று சொல்கிறபோது, அந்தப் பணத்தை இங்கே நாம் முதலீடு செய்து அதுபோல் இங்கே ஒரு பல்கலைக்கழகத்தைத் தொடங்கமுடியாதா? தாய்மொழியாம் தமிழ் மொழியின் வயிற்றிலிருந்து பிறந்த மற்ற மொழிகள் எல்லாம் கிளைத்து எழுந்து முன்னுரிமை பெறுகிறபோது, ஏன் தமிழ் மொழி கீழே போக வேண்டும்? அதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்கள் சொல்கிறபோது, திராவிடப் பல்கலைக்கழகம், குப்பத்திலே இருப்பதைப் பற்றி விளக்கம் சொன்னார்கள். ஆனால் உண்மையில் தஞ்சையிலே நடைபெறுகிற தமிழ்ப் பல்கலைக்கழகமே திராவிடப் பல்கலைக் கழகம்தான். திராவிடப் பல்கலைக்கழகத்தில் தமிழ் முதன்மையாகக் கருதப்படவேண்டுமென்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் சொன்னபோது, தமிழுக்காக அமைக்கப்பட்ட பல்கலைக் கழகமும் திராவிடப் பல்கலைக் கழகம்தான் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்தப் பண்பாட்டு நோக்கம், கலாச்சார நோக்கம் மற்ற மாநிலங்களில் இருப்பதற்கு வாய்ப்பாக ஆந்திராவின் முன்னாள் முதலமைச்சர் மறைந்த என்.டி.ஆர். அவர்கள் அப்படியொரு நோக்கத்தை எடுத்துச் சொன்னபோது, உடனடியாக நம்முடைய கலைஞர் அவர்கள்தான் அதற்கு அதரவு தெரிவித்தார்கள். அந்த ஆதரவின் அடிப்படையில் அவர்கள் ஒரு நல்ல முயற்சியையும் மேற்கொண்டிருக்கிறார்கள். ஆனால் பெரிய வளர்ச்சியை எதிர்காலத்தில்தான் அது பெறவேண்டும். அப்படி அமைக்கப்பட்ட குப்பத்தில் உள்ள பல்கலைக்கழகத்தை, தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களுக்கு நெருக்கமான இடமாகப் பார்த்துத்தான் தேர்ந்தெடுத்து அமைத்து இருக்கிறார்கள். ஆதி திராவிடம் என்று சொல்லப்படுகிற அந்தக் கருத்துக்கு ஆந்திரத்திலே ஒரு வளர்ச்சியும், எழுச்சியும் ஏற்படுவதற்கு நல்ல வாய்ப்பு ஆகும்.

[1998 மார்ச் 21

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய மொழிகளைத் தவிர, வேறு எந்த மொழிகளை நாம் திராவிட மொழிகள் என்று ஏற்றுக் கொண்டிருக்கிறோம்? அதுகுறித்து ஏதாவது குறிப்பு இருக்கிறதா? அப்படியென்றால் மராட்டி மொழிகூட திராவிட மொழிகளிலே ஒன்றுதான் என்று சொல்கிறார்கள். எனவே, அதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மராட்டிய மொழியும் ஒரியா மொழியும் ஏறத்தாழ 1500 ஆண்டுகளுக்கு முன்னால் ஆரிய மொழி அடிப்படையிலே அவர்கள் தந்த கொள்கைப்படி பஞ்ச திராவிடத்திலே இணைக்கப்படக் கருதப்பட்டது. ஆனால் நடைமுறையில் 400 ஆண்டுகளாகத்தான் மராட்டிய மொழிக்கு பெரிய வளர்ச்சி. அந்த வளர்ச்சி அடைகிற காலகட்டத்தில் அது அதிகமாக ஆரிய சார்புடையதாக, இந்திய சார்புடையதாக உரம் பெற்று வளர்ந்து இருக்கிற சூழ்நிலையில் இப்போது திராவிட மொழி இலக்கணத்தின்படி அமைந்திருக்கவில்லை என்று அந்த மொழி இலக்கணத்தில் அதைச் சேர்க்க மொழிப் புலமை உடையவர்கள், இன்னும் சொல்லப்போனால், ஒப்பியல் மொழி அறிஞர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய மொழியில் ஒன்றாக நம்முடைய தமிழை எந்த அளவுக்கு டெல்லி அரசாங்கம் செயல்படுத்துகிறது என்பதை நம்முடைய அரசு தெரிவிக்குமா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் எந்த மாநிலத்திலேயும் ஆட்சி மொழியாக இருக்கிற அல்லது அதிகமாக மக்கள் பேசுகிற மொழியாக இருக்கிற மொழிகள் எல்லாம், தேசிய மொழிகளாக 19 மொழிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. தேசிய மொழி என்ற பெயர்



1998 மார்ச் 21]

இந்திக்கே சிறப்பாக வழங்கப்பட்ட ஒரு காலம் உண்டு. ஆனால் அதுமட்டும் தேசிய மொழி அல்ல. இந்தியாவில் உள்ள மொழிகளில் அதிக அளவில் வழங்கப்படுகிற மொழிகள் எல்லாம் தேசிய மொழிகள் என்ற கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு 19 மொழிகள் இடம் பெற்றிருக்கின்றன; அதிலே தமிழ் ஏற்கெனவே இடம் பெற்றிருக்கின்றது. மத்திய ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பது நியாயமான ஒரு கருத்து; அது தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசு விரைவிலே செவிசாய்க்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 54, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**54—**

## அமுதம் அங்காடி அமைத்தல்

***9848-திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், புதுப்பட்டினம் ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியில் அமுதம் அங்காடி ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) தஞ்சை மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், புதுப்பட்டினம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் புதுப்பட்டினம் நியாய விலைக் கடையானது கீழ்வஸ்தா சாவடியில் 391 குடும்ப அட்டைகளுடன் இயங்கி வருகிறது. இதில் புதுப்பட்டினம் கிராமத்தைச் சேர்ந்த 71 குடும்ப அட்டைகளும் அடங்கும். புதுப்பட்டினம் கிராமத்தில் மொத்தம் 71 குடும்ப அட்டைகளே உள்ளதாலும், நியாய விலைக் கடைக்கும், புதுப்பட்டினம் கிராமத்திற்கும் இடையே 1½ கிலோ மீட்டர் தூரம் மட்டும் உள்ளதாலும் அக்கிராமத்தில் புதிய முழு நேரக் கடையோ அல்லது பகுதி நேரக் கடையோ அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1998 மார்ச் 21

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு அதிகாரிகள் தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள். புதுப் பட்டினம் என்று சொல்லப்படுவது, சூரக்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்தது. நான் சொல்கிற புதுப்பட்டினம் ஊராட்சி என்பது பலவகையான இடங்களைச் சேர்ந்தது; தில்லை நகர், கலைஞர் நகர், நாவலர் நகர் என்று பலவகையான இடங்களைக் கொண்டதாகும். ஆனால் இதில் தவறான தகவலை அதிகாரிகள் தந்திருக்கிறார்கள். புதுப்பட்டினம் ஊராட்சியைச் சேர்ந்த மக்கள், நாஞ்சிக்கோட்டை சாலையில், நாஞ்சிக்கோட்டையில் இருக்கிற அங்காடிக்கு 3, 4 கிலோ மீட்டர் தூரம் சென்று பொருட்களை வாங்குகிறார்கள். ஆகவே 4 கிலோ மீட்டர் தூரம் இருக்கிற அங்காடிக்குச் செல்வதற்குப் பதிலாக, புதுப்பட்டினத்திலே, பல்வேறு நகரங்களை உள்ளடக்கிய அந்தப் பகுதியிலே ஒரு அங்காடியை அமைத்தால் நன்றாக இருக்கும் என்று கருதித்தான் இந்த வினா எழுப்பப்பட்டது. புதுப்பட்டினம் ஊராட்சியிலே தனியாக ஒரு அங்காடி அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அளித்த விவரப்படித்தான் இங்கு இந்தப் பதில் தரப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே நேரடியாகக் கடிதம் மூலமாக எனக்குத் தெரிவித்தார்கள்; அந்த விவரத்தைத் தெரிவித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டபடி அப்படி அதிக தூரம் இருக்குமானால், உரிய முறையில் நடவடிக்கை எடுத்து தனியாக ஒரு பகுதி நேரக் கடை அமைப்பதற்குரிய அத்தனை முயற்சிகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 55, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**55—**

### தொழிற் பயிற்சிப் பள்ளி அமைத்தல்

***7651—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மார்ச் 21]

(அ) நிலக்கோட்டைத் தொகுதியில் பெண்களுக்கென தொழிற் பயிற்சிப் பள்ளி (I.T.I.) துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) எழவில்லை.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டகாலமாக அந்தப் பகுதிக்கு ஏதாவது வேண்டும் என்று கேட்டுக் கேட்டு அலுத்துப் போய்விட்டேன். உடம்பும் தளர்ந்து போய்விட்டது. மிகவும் மனம் நொந்துதான் இந்தச் சட்டமன்றத்திலே நான் நின்று கொண்டிருக்கிறேன். இந்தச் சட்டமன்றத்திலே இருக்கலாமா, வேண்டாமா என்ற நிலைமைகூட எனக்கு ஏற்பட்டுவிட்டது. காரணம், பல ஆயிரக்கணக்கான பெண்கள், படித்துவிட்டு வேலையும் கிடைக்கவில்லை, கல்லூரியிலே சேருவதற்கு இடமும் இல்லை. இந்தச் சூழ்நிலையிலே அங்கே தொழில் கல்வியையாவது ஆரம்பிக்க வேண்டும் என்று நினைத்துத்தான் இந்தக் கேள்வியை நான் போட்டு வைத்தேன். அதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்று சொல்லிவிட்டார்கள். எங்கள் பகுதியில் உள்ள அமைச்சர் அவர்கள், ஆகையினாலே, இந்தக் கேள்விக்கு எனக்குப் பதிலே சொல்ல வேண்டாம். நான் இத்தோடு நன்றி சொல்லி, உட்கார்ந்து கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியானால், எதற்கு ஒரு சொற்பொழிவு, துணை வினா இல்லை என்றால், உட்கார்ந்து இருக்க வேண்டியதுதானே!

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** வேறு வழி இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன வழி இல்லை? இப்படியே பேசி, முதலமைச்சரிடம் ஒரு அணைத் திட்டத்தை வாங்கி விட்டீர்கள் (சிரிப்பு.)

[1998 மார்ச் 21

முற்பகல் 10-30

பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 56, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

56—

**சிறைத் துறையில் நன்னடத்தைப் பிரிவைத் தனிப் பிரிவாக்குதல்**

***10773—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைத்துறையின் கீழ் செயல்படும் நன்னடத்தைப் பிரிவை தனிப் பிரிவாக அமைத்து செயல்படுத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையை உங்களுடைய அனுமதியோடு கூறுகிறேன்.

(அ) சிறைத் துறையின்கீழ் செயல்படும் நன்னடத்தைப் பிரிவை, தனியாக, தனிப் பிரிவாக அமைத்திட முதலிலே செயற்குறிப்பு இருந்தது. அது கைவிடப்பட்டது.

(ஆ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைத் துறையின்கீழ் செயல்படும் நன்னடத்தைப் பிரிவு மூலமாக சமூகத்தில் உள்ள அடித்தளத்து மக்களுக்கு சமூக நீதி வழங்குகிற திட்டமாக இதைச் செயல்படுத்துவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. குற்றவாளிகளை நான்கு சுவர்களுக்குள்ளே அடைத்து, திருத்துகிற முறை சிறையிலே நடைபெறுகிறது. சூழ்நிலை காரணமாக குற்றவாளிகளாக இருக்கக்கூடியவர்களை—வெளியில் வைத்தே திருத்துவதற்கான வாய்ப்புகள் இந்தத் துறையின் மூலமாக



1998 மார்ச் 21]

நடைமுறைப்படுத்தப்படுகிறது. குறிப்பாக 1995-ஆம் ஆண்டு கணக்கின்படி, நன்னடத்தைச் சட்டத்தின்கீழ் 29,266 நபர்கள் விடுதலை செய்யப்பட்டதாகக் கணக்குச் சொல்லப்படுகிறது. அதேபோல் ஒரு கைதிக்கு சிறையிலே ஆகிற செலவு ஒரு நாளைக்கு 67 ரூபாய் என்று சொல்லப்படுகிறது. இப்படி விடுதலையான கணக்கை வைத்துப் பார்க்கும்போது ஒரு நாளைக்கு 20 இலட்சம் ரூபாயை மீதப்படுத்து வதற்கான வாய்ப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. ஆகவே, சிறைத் துறையின் மூலமாகச் செயல்படுகிற இந்த நன்னடத்தைப் பிரிவை தனியாகச் செயல்படுத்துவதற்கான அறிவுரைகள் வழங்கப்பட்டு இருப்பதைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு, மீண்டும் அரசு பரிசீலனை செய்து, அதைத் தனித் துறையாகச் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நன்னடத்தைப் பிரிவு சிறைத் துறையின் கீழே செம்மையாக செயல்படுகிறது; பயன் அளிப்பதாக விளங்குகிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போன்று, எந்த அளவிற்கு அது சமுதாயச் சீர்திருத்தத்திற்குத் துணை புரிகிறது என்பதை, புள்ளிவிவரம் திட்டவட்டமாக எடுத்துக்காட்டுகிறது. எனவே, அதைத் தனியாகப் பிரித்து நிர்வாகச் செலவை அதிகரிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 57, திரு. ஜி. சொக்கலிங்கம், மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

57—

**அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு சுற்றுலாப் பயணிகள் வருகை**

***3803—திரு. ஜி. சொக்கலிங்கம்:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு சுற்றுலாப் பயணிகள் வருகை குறைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1998 மார்ச் 21

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம், அரசு அறியும்.

(ஆ) அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் வந்து சென்ற பயணிகள் விவரம்:

1992-93ஆம் ஆண்டில் 8,10,054 பேர்களும், 1993-94ஆம் ஆண்டில், 5,23,391 பேர்களும், 1994-95ஆம் ஆண்டில் 6,89,163 பேர்களும், 1995-96-ஆம் ஆண்டில், 7,54,821 பேர்களும் 1996-97ஆம் ஆண்டில், 5,70,313 பேர்களும், 1997-98ஆம் ஆண்டில் மார்ச் 20 வரை 6,69,248 பேர்களும் இந்தப் பூங்காவிற்கு வந்து சென்றுள்ளனர். மேற்கண்ட புள்ளிவிவரங்களைப் பார்க்கும்போது, அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு வருகைதரும் பார்வையாளர்களின் எண்ணிக்கை சற்றுக் குறைந்து வருவதாகத் தெரிகிறது.

**திரு. ஜி. சொக்கலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் விளக்கத்தைச் சொன்னமைக்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவானது நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால், 1978ஆம் ஆண்டு கிட்டத்தட்ட 1100 ஏக்கரில் உருவாக்கப்பட்டது. அது உருவாக்கப்பட்டதிலிருந்து அதன் வளர்ச்சி குறைவாக இருக்கின்றது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஏற்றுக் கொண்டிருக்கிறார். இந்த உயிரியல் பூங்காவிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளினுடைய எண்ணிக்கை நாளுக்குநாள் மிகவும் குறைந்து கொண்டே வருகிறது. இதைப்பற்றி நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நேரடியாகக் கூறி, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அங்கே பார்வையிட்டபின், இப்போது கொஞ்சம் வளர்ச்சி அடைந்து இருக்கிறது. அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், நான் தெரிவித்துக்கொள்வதெல்லாம் பக்கத்திலே இருக்கிற கிஷ்கிந்தா என்கிற தனியாருடைய சுற்றுலாப் பூங்காவிற்கு அதிகமான அளவில் பயணிகள் செல்கிறார்கள்.

முற்பகல் 10-35

தனியாருக்கு ஊக்கம் அளிப்பதை விட்டுவிட்டு அரசுக்கு வருமானம் வருகின்ற இந்த உயிரியல் பூங்கா அறிஞர் அண்ணா அவர்கள் பெயரில் உருவாக்கப்பட்டு, நமது தலைவர் கலைஞர் அவர்கள் இந்த உயிரியல் பூங்காவிற்கு வருகை தந்த அன்றையதினத்திலிருந்து கொஞ்சம் வளர்ச்சி அடைந்தது. அதற்குப் பிறகு இன்றைக்கு சுணங்கப்பட்டு விட்டது. இந்த உயிரியல் பூங்காவில் பணிசெய்கிறவர்களை...



1998 மார்ச் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா என்ன?

**திரு. ஜி. சொக்கலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மிகப் பணிவன்போடு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த உயிரியல் பூங்காவில் பணியாற்றுகின்ற கிட்டத்தட்ட 45 தொழிலாளர்கள் நிரந்தரப்படுத்தப்படாமல் இருக்கின்றனர், கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்கும் மேலாக. ஏற்கெனவே நமது முதல்வர் அவர்கள் முதலமைச்சராக வந்த அன்றைக்கு 75 பேர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கினார்கள். இந்த 45 பேர்களையும் நம்முடைய ஆட்சிக் காலத்தில் முதல்வர் அவர்கள் நிரந்தரமாக்கவேண்டும். அவ்வாறு நிரந்தரமாக்கப்படுவார்களா? இந்த உயிரியல் பூங்கா மேலும் வளர்ச்சியடைவதற்கு, திட்டங்கள் வகுக்கப்படுமா என்பதை அமைச்சர் மூலமாகக் கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் ஏற்கெனவே உள்ள பகுதிகளில் கடந்த சில ஆண்டுகளாக அதிநவீன வசதிகளுடன் கூடிய தனியார் பொழுதுபோக்குகளான கிஷ்கிந்தா, எம்.ஜி.எம். மற்றும் கோல்டன் பீச் போன்ற நிறுவனங்கள் பொதுமக்களையும், பார்வையாளர்களையும் கவரக்கூடிய விதத்தில் நிறுவப்பட்டுள்ளதால், பார்வையாளர்கள் மேற்காணும் இடங்களுக்கு அதிகமாகச் செல்வதால் உயிரியல் பூங்காவிற்கு வரும் பார்வையாளர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்து வருகின்றது. ஆகவே இந்த அரசு, ஆண்டுத் திட்டங்களின்கீழ் இப்பூங்காவின் வளர்ச்சிப் பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்து, இப்பூங்காவினை பார்வையாளர்களை ஈர்க்கும் வண்ணம் மேம்படுத்தும் முயற்சிகளில் இறங்கியுள்ளது.

1996-97ஆம் ஆண்டு இவ்வுயிரியல் பூங்காவின் வளர்ச்சி மற்றும் பராமரிப்புகளுக்காக ரூ.111.75 இலட்சங்களும், மைய உயிரின காட்சி சாலையின் 50 விழுக்காடு உதவிபெறும் திட்டத்தின்கீழ் ரூ.13.75

[1998 மார்ச் 21

இலட்சமும் ஒப்படைக்கப்பட்டு இப்போது பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தப் பணியாளர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 58, திரு. என்.ஆர். அழகராஜா, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**58—**

**குமாரசுவாமிராஜாவின் நூற்றாண்டு விழா**

***8597—திரு. என்.ஆர். அழகராஜா:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்தில் முதல்வராகவும், ஓரிசா மாநிலத்தில் ஆளுநராக பணியாற்றியவரும், சுதந்திரப் போராட்ட வீரருமான மறைந்த திரு. பி.எஸ். குமாரசுவாமிராஜா அவர்களின் நூற்றாண்டு விழாவை 8-9-1997-ல் கொண்டாட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அவர் பிறந்த ஊரான இராஜபாளையத்தில் விழா நடக்க ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சென்னை மாநிலத்தின் முன்னாள் முதல்வர் மற்றும் ஓரிசா மாநில முன்னாள் ஆளுநர் திரு. பி.எஸ். குமாரசுவாமிராஜா அவர்களின் நூற்றாண்டு விழா 8-7-1997-ல் கொண்டாடப்படவில்லை.

(ஆ) வினா எழாது.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் கூறியதுபோல் இல்லை. அவருடைய நூற்றாண்டு விழா 8-7-1998-ஆம் நாளன்று வருகிறது. ஆகவே இந்த ஆண்டு கொண்டாடப்படுமா என்பதை அறிய விரும்புவதோடு,



1998 மார்ச் 21]

அவருடைய நினைவாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1989-90-ஆம் ஆண்டு விருதுநகர் மாவட்டத்தினுடைய தலைமையகத்திற்கு குமாரசுவாமிராஜாவினுடைய வளாகம் என்ற பெயரை வைத்திருக்கிறார்கள் என்பதாலும், குமாரசுவாமிராஜா அவர்கள் 1934ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராகவும், அதற்குப் பின்னர் 1946-47ஆம் ஆண்டு இங்கே விவசாயத் துறை அமைச்சராகவும், 1949ஆம் ஆண்டு முதல் 1952ஆம் ஆண்டு வரை சென்னை ராஜ்யத்தின் முதல்வராகவும், 1954 முதல் 1956ஆம் ஆண்டு வரை ஓரிசா மாநில ஆளுநராகவும் இருந்தவர் என்பதாலும், அவருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடுவதற்கும், அவர் பிறந்த இடமான இராஜபாளையத்தில் ஒரு நினைவாலயம் கட்டுவதற்கும் அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகராஜா அவர்கள் தன்னுடைய மூலக் கேள்வியில் அவர் பிறந்த ஊரான இராஜபாளையத்திலே விழா நடக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்டிருக்கிறார். ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அழகராஜா அவர்களுடைய கேள்வியிலே 'நூற்றாண்டு விழா 8-7-1997 அன்று கொண்டாட' என்றுதான் கேட்டிருக்கிறார். இப்போதுதான் 1998 என்று சொல்கிறார்

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தாப்பட்டுள்ள கேள்வியில் நூற்றாண்டு விழா 8-9-1997-ல் கொண்டாட அரசு நடவடிக்கை எடுக்குமா என்று வருகிறது. பதிலில் 8-7-1997-ல் கொண்டாடப்படவில்லை என்று இருக்கிறது. இரண்டுமே முரண்பாடாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராஜபாளையத்தில், அந்தப் பகுதியிலுள்ள பொதுமக்கள் எல்லாம், மதிப்பிற்குரிய முன்னாள் முதல்வர் குமாரசுவாமிராஜாவினுடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாட வேண்டுமென்று, அந்த மாவட்டத்திலுள்ள மக்களே ஆர்வமாக இருக்கிறார்கள்.

[1998 மார்ச் 21

முற்பகல் 10-40

அதனால், வருடமோ, மாதமோ வித்தியாசமாக இருந்தாலும், அந்தப் பகுதியிலுள்ள மக்கள் கொண்டாட வேண்டுமென்று நினைக்கிறார்கள். ஆகவே, அவருடைய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, அவருடைய பெயரில் தபால்தலை வெளியிடப்படுவதற்கு மாநில அரசு மத்திய அரசிற்கு சிபாரிசு செய்யுமா? அதுமட்டுமல்லாமல் சென்னை போன்ற நகரில் அவருடைய பெயரில் சிலை வைப்பதற்கோ அல்லது மாவட்டங்களைப் பிரிக்கும்போது அவருடைய பெயரில் மாவட்டத்தை அமைப்பதற்கோ வேண்டிய ஏற்பாட்டை அரசு செய்யுமா? ஏனெனில், அவர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தவர். அதனால் சென்னையிலோ அல்லது விருதுநகரிலோ பெரிய அளவிலே விழா கொண்டாடுவதற்கு மத்திய அமைச்சர்களையோ, பிரதமரையோ அழைத்து நல்லமுறையில் நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா? நிதியை நல்லமுறையில் ஒதுக்கி பெரிய விழாவாகக் கொண்டாட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்தப் பெயரை திரு. அழகராஜா தட்டிக்கொண்டு போய்விடக் கூடாது என்பதற்காகவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் ஒரு நீளமான கேள்வியை இங்கு கேட்டிருக்கிறார்கள். குமாரசுவாமிராஜா அவர்கள் முதலமைச்சராக இருந்தார் என்பதையே தமிழ்நாட்டிலுள்ள பல பேர் மறந்துவிட்டிருந்த சூழ்நிலையில் திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் 1989ஆம் ஆண்டு விருதுநகரிலுள்ள மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தினுடைய வளாகத்திற்கு குமாரசுவாமிராஜாவினுடைய பெயரைச் சூட்டியது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அவர் பிறந்த ஊரில் நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்படும் என்பதையும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி கூறியதைப்போல அந்த விழாவிற்கு அப்போது யார் பிரதமராக இருக்கிறாரோ அவர் அழைக்கப்படுவார் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு)

**திரு. இரா. தாமரைக்கனி:** நிரந்தரப் பிரதமர் வாஜ்பாய்தான். வாஜ்பாய்தான் பிரதமராக இருப்பார், அவரை அழையுங்கள்.



1998 மார்ச் 21]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இருந்தால் அழைப்பதற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. அதுவும் அப்போது யார் பிரதமராக இருக்கிறாரோ அவரை அழைப்பேன் என்று சொன்னேன். பிரதமராக இல்லாதவரை எப்படி அழைக்க முடியும்? அதனால்தான் அப்போது யார் பிரதமராக இருக்கிறாரோ அவர் அழைக்கப்படுவார். வாஜ்பாயாக இருந்தால் அவரும் அழைக்கப்படுவார். நீங்கள் தடுக்காமல் இருக்க வேண்டும். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 59, திரு. எஸ்.எஸ். மணி நாடார், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**59—**

### திருமண உதவித்தொகை எண்ணிக்கையை உயர்த்துதல்

***8302—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமண உதவித்தொகை ஒரு ஒன்றியத்திற்கு இருபத்திரெண்டு பேருக்கு என்று வழங்கப்பட்டு வருவதை ஐம்பதாக உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருமண உதவித்தொகை, ஒரு ஒன்றியத்திற்கு 22 பேருக்குத்தான் வழங்கப்பட்டு வருகிறது என்றும், அதை 50-ஆக உயர்த்திட அரசு ஆவன செய்யுமா என்றும் கேள்வி எழுப்பப்பட்டு இருக்கிறது. இந்தக் கேள்வி காலதாமதமாக சபைக்கு வந்திருக்கின்றது என்று நான் கருதுகிறேன். நம்முடைய முதல்வர் திருமண உதவித் தொகை வழங்குவதை கடந்த ஆண்டு 10 ஆயிரம் பெண்களுக்கு என்று நிர்ணயித்து 10 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். அதன் பிறகு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும், பொதுமக்களும் வேண்டுகோள் விடுத்ததற்கு இணங்க, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு 20 ஆயிரம் பெண்களுக்கு அந்த உதவித்தொகை வழங்குவதாக அறிவிப்பு செய்து 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள்.

[1998 மார்ச் 21

கடந்த ஆண்டு நிலுவையில் இருந்த 16.145 பேருக்கும் உதவித்தொகை வழங்குவதற்குக் கூடுதலாக நிதியை வழங்கினார்கள். எனவே, கடந்த ஆண்டு 10 ஆயிரம் பெண்களுக்கும், இந்த ஆண்டு 20 ஆயிரம் பெண்களுக்கும், கடந்த ஆண்டு நிலுவையில் இருந்த 16.145 பேருக்கும் இந்தத் திருமண உதவித்தொகை வழங்கப்பட்டிருக்கின்றது. எனவே, ஒன்றியத்திற்கு 22 பேர் என்றிருப்பது தற்போது நடைமுறையில் இல்லை. தகுதியுள்ள, சான்றிதழ் சரியான முறையில் தருகின்ற அத்தனை ஏழைப் பெண்களுக்கும் இந்த உதவித்தொகை வழங்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 60, திரு. டி. மணி, மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

**60—**

**பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனங்களுக்கு உதவி**

***8642—திரு. டி. மணி:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில, மாவட்ட பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனங்களுக்காக, மத்திய கதர் குழுவால் 1992 முதல் 1997 வரையிலான ஆண்டுகளுக்கு வழங்கப்பட்ட கடன் மற்றும் மானியத் தொகையை வழங்காதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அத்தொகையைப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனங்களுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மும்பை கதர் ஆணைக் குழுவின் சார்பாக கதர் வாரியத்திற்கு நிதி வழங்கப்பட்டிருக்கிறது. 1997-98-ல் பனைப்பொருள் வாரியத்தின் மூலம் 75 இலட்சம் ரூபாய் கடன் உதவி வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-லேயிருந்து ஆரம்பித்து 1997 வரையிலேயும் மத்திய அரசிடமிருந்து



1998 மார்ச் 21]

மாநில அரசுக்கு வந்த தொகை எவ்வளவு? இதில், இந்தப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனங்களுக்கு, குறிப்பாக, குமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய சம்மேளனங்களுக்கு எவ்வளவு வழங்கப்பட்டது? இன்னமும் வரக்கூடிய தொகை இருக்குமானால் அது எவ்வளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 முதல் 1995 வரை மும்பை கதர் ஆணைக் குழுவின் சார்பாக 3,384.14 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. கதர் வாரியத்தின் மூலமாக பனைப் பொருள் வாரியத்திற்கு ரூ.110.24 இலட்சம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், கழக அரசு வந்ததற்குப் பிறகுதான் 1997-98-ல் 75 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. 1-10-1997-ல் 25 இலட்சமும், 9-12-1997-ல் 25 இலட்சமும், 13-2-1998-ல் 25 இலட்சமும் தலா 3 தவணையாக 75 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைப்பொருள், பனைக் கூட்டுறவு மேன்மை அடைய இதற்கு ஒரு தனி இலாக்கா அமைத்துக் கொடுப்பாரா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைப் பொருள் வாரியம் 1992 முதல் 1995 வரை அவசரக் கோலத்தில் அமைக்கப்பட்டது. அதற்கான நிதியாதாரங்கள் முழுவதுமாக அளிக்கப்படவில்லை. இருப்பினும், கழக அரசு வந்ததற்குப் பிறகுதான் இந்த வாரியத்திற்கென்றே கூடுதல் அதிகாரி நியமிக்கப்பட்டு, இந்த வாரியத்தினுடைய முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு பல்வேறு நிலைகளில் அரசு நிதி அளித்து இந்த வாரியத்தினுடைய வளர்ச்சிக்காக முயற்சி எடுத்து வருகிறது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த பனைப் பொருள்

[1998 மார்ச் 21

பனைத் தொழிலாளர்களுக்கு 1989ஆம் ஆண்டு 60 இலட்சம் ரூபாய் கடனாக வழங்கப்பட்டது. தற்போது அது வட்டியும், முதலுமாகச் சேர்ந்து 2 கோடி ரூபாயாக இருக்கிறது. மிகப் பெரிய வறட்சியில் பனையே இல்லாமல் பனையேறும் தொழிலாளர்கள் மிகவும் நலிந்துவிட்டார்கள். ஆகவே, அந்தக் கடனைத் தள்ளுபடி செய்வதுபற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்தில் இருப்பதாக அறிகின்றேன். தயவு செய்து அந்த 2 கோடி ரூபாயை ஏழை பனைத் தொழிலாளர்களுக்குத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று தங்கள் மூலம் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மும்பை கதர் ஆணைக் குழு, கதர் வாரியத்திற்கும் பனைப்பொருள் வாரியத்திற்கும் நிதி வழங்கிக் கொண்டு வந்தது. தற்போது, அந்த ஆணைக் குழு ஒரு முடிவு எடுத்து, நிதியினை நிறுத்திவிட்டார்கள். நேரடியாகவே வங்கிகள் மூலமாக பனைப்பொருள் வாரியத்தின் வளர்ச்சிக்காகக் கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. கதர் வாரியத்திலும் பனைப்பொருள் வாரியத்திலும் நிதிநிலை நெருக்கடி இருக்கிறது. இருப்பினும், மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கலந்தாலோசித்து மாண்புமிகு உறுப்பினருடைய பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. ஆவுடையப்பன்.

**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டமும், தூத்துக்குடி மாவட்டமும் இரண்டாகப் பிரிக்கப்பட்டு 10 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் மாவட்டப் பனைவெல்லக் கூட்டுறவு சங்கத்தைப் பொறுத்தமட்டில், நெல்லை மாவட்டத்திற்கும் தூத்துக்குடி மாவட்டத்திற்கும் சேர்ந்து ஒன்றாகத்தான் இயங்கி வந்து கொண்டிருக்கிறது. அந்த இரண்டையும் தனித்தனி மாவட்ட அமைப்பாகப் பிரித்துக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைப்பொருள் வாரியத்தின் நிதிநிலை நெருக்கடி அதிகமாக இருக்கிறது. அப்படி ஒரு பனை வாரிய சம்மேளனம் நிறுவப்பட்டால் அதற்கு நிதியாதாரங்கள், அலுவலர்கள் அதிகமாகத்



1998 மார்ச் 21]

தேவைப்படுகிறது. அதற்கு நிதி அதிகமாகத் தேவைப்படுகிறது. தற்போது இந்தச் சம்மேளனம் நிறுவுவது பற்றிப் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மத்திய அரசு தரவேண்டிய தொகையில் ஒரு பகுதி தரப்பட்டாலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு தாலுக்காவில் செயல்படுகின்ற பனைவெல்லக் கூட்டுறவு மையத்தில், கடந்த 6 மாதங்களாக அதில் பணி ஆற்றுகின்ற ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படவில்லை என்றும் அதற்குப் பின்னால் அந்தக் கூட்டுறவு மையங்களிலிருந்து கடன் கொடுத்ததை வசூலித்தால்தான் அந்தச் சம்பளம் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டு அந்தச் சம்பள பாக்கி கொடுக்கப்படாமல் உள்ளது. எனவே சம்பளத்தைக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைப்பொருள் வாரியத்தில் நிறைய நிதிநிலை நெருக்கடி இருப்பினும், அவ்வாரியத்தினுடைய வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு இந்த வாரியத்திற்குக் கதர் வாரியத்தின் சார்பாக 25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்குவது என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10-50

அதேமாதிரி, பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றுகின்றவர்கள் அந்த வாரியத்தின் மூலம் வழங்கப்படுகின்ற கடன் உதவிகளை வசூல் செய்யாமல் தங்களுக்குக் கொடுக்கப்படுகின்ற நிதி ஆதாரங்களை முழுமையாக, சம்பளத்திற்கு எடுத்துக்கொள்கிறார்கள். ஆகவே, கொடுக்கப்படுகின்ற கடன் உதவிகளை வசூல் செய்வதற்கும் கொடுக்கப்படுகின்ற நிதி ஆதாரங்களை வாரியத்தினுடைய வளர்ச்சிக்காகச் செலவு செய்வதற்கும் உரிய அறிவுரைகள் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெறாதது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிக்கைகள் அளித்தல்

### பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. கே.எம். விஜயகுமார், குழுவின் தலைவர்.

**திரு. கே.எம். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1997-98ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 27 முதல் 30 வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.





ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்".

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[1998 மார்ச் 21

## 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் இன்று முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட வேண்டும். திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. தமிழகத்தில் குறிப்பிட்ட 107 ஜாதி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள 20 சதவிகித இட ஒதுக்கீட்டினை மாற்றியமைத்து 30% இட ஒதுக்கீடு அல்லது அதற்கு மேலும் வழங்குவது குறித்தும், தனியார் தொழிற்சாலை முதல் அனைத்து நிலைகளிலும் இட ஒதுக்கீடு அமலாக்குவது குறித்தும்;

2. நீண்ட நாள் கோரிக்கையான தர்மபுரி மாவட்டம் முழுவதும் பயன்படக்கூடிய ஒகேனக்கல்-காவேரி குடிநீர்த் திட்டம் குறித்தும்;

3. படித்த, வேலைவாய்ப்பில்லாத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டங்கள் குறித்தும்

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய கட்சி உறுப்பினர் யாராவது ஒருவர் அதை வழிமொழியவில்லை என்றால் அது தீர்மானம் கிடையாது. திரு. ஐ. கணேசன், என்ன வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதை வழிமொழிகிறேன்.

## 5. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வரும் திங்கட்கிழமை 23-3-1998 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் ஒத்திவைக்கப்படுவது குறித்த தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.



1998 மார்ச் 21]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 23-3-1998 அன்று தளர்த்தி அந்த நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்,"

என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை'. என்க

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

*திங்கட்கிழமை 23-3-1998 அன்று வினாக்கள்-விடைகள் நேரமில்லை.*

## 6. விதி 110-ன்கீழ் சட்ட அமைச்சரின் அறிக்கை

### முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மீது தொடுக்கப்பட்ட வழக்குகள் குறித்து மத்திய சட்டம் மற்றும் நீதித் துறை அமைச்சர் அளித்துள்ள பேட்டியில் தெரிவித்த கருத்துக்கு மறுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் விதி 110-ன் கீழ் ஓர் அறிக்கையை அவைக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு அனுமதி அளிக்கிறேன். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டப் பேரவை விதி 110-ன் கீழ் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினை குறித்து இந்த அவையில் தங்களின் அனுமதியோடு ஓர் அறிக்கையை அளிக்கிறேன்:

'மத்திய அரசின் சட்டம் மற்றும் நீதித் துறை அமைச்சர் பொறுப்பினை ஏற்றிருக்கும் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. தம்பிதுரை அவர்கள் 20-3-1998-ல், பத்திரிகையாளர்களுக்கு சென்னை விமான நிலையத்தில் பேட்டி அளித்த போது—I quote —

"அ.தி.மு.கழக தலைவி ஜெயலலிதாமீது பல பொய்யான வழக்குகளை தி.மு.கழக அரசு தொடுத்துள்ளது. மத்தியில் அமைந்துள்ள புதிய அரசு இந்த ஊழல் வழக்குகள் குறித்து கவனம் — will examine, look into—செலுத்தும்" என்று தனது பேட்டியில் கூறியிருக்கிறார்.

மத்திய அமைச்சர் திரு. தம்பிதுரையின் பேட்டி, தமிழக அரசின் மீது பழி சுமத்துவதாக அமைந்திருப்பது மட்டுமல்ல; நீதி நிர்வாகத்தில் தயக்கமின்றித் தலையிட முற்படுவதாகவும் அமைந்திருக்கிறது.

முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மீது தி.மு.கழக அரசுக்குத் தனிப்பட்ட முறையில் எந்த விரோதமும் குரோதமும் கிடையாது. அவர் மீது எந்தப் பொய்யான வழக்கினையும் தொடுக்கவில்லை என்பதை இந்த அவைக்குத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

அவர் மீது தமிழக அரசால் எட்டு வழக்குகள் தொடுக்கப் பட்டிருக்கின்றன. ஆறு வழக்குகளில் குற்றப்பத்திரிகைகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் இரண்டு வழக்குகள், அதாவது நிலக்கரி இறக்குமதி ஊழல் வழக்கு, வருவாய்க்கு மீறி ரூ.66 கோடி சொத்து சேர்த்த வழக்கு ஆகிய இரண்டு வழக்குகளையும் பொறுத்தவரையில் ஜனதாக் கட்சித் தலைவர் திரு. சுப்பிரமணியசுவாமி அவர்களால் நீதிமன்றத்தில் புகார் செய்யப்பட்டு, அதன் மீது நீதி மன்றம் பிறப்பித்த ஆணையின்படி புலன் விசாரணை செய்யப்பட்டு குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டவையாகும்.

தன் மீது தொடுக்கப்பட்ட வழக்கில் ஜெயலலிதா அவர்கள், முன் ஜாமீன் கேட்டு உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அந்த மனுவினை விசாரித்த உயர் நீதிமன்றம் "Having regard to the averments made in the complaint and the materials collected by the respondent (Police) so far, it is not proper to come to the conclusion that the cases are filed due to political vendetta, or on extraneous consideration.`` அதாவது `காவல் துறையில் கூறப்பட்டுள்ள புகாரில் இதுவரை கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள், வாதங்கள் ஆகியவற்றின்படி இந்த வழக்குகள் அரசியல் பகையின் காரணமாகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ தொடுக்கப்பட்ட வழக்குகள் என்று முடிவுக்கு வர இயலாது' என்று தீர்ப்பில் கூறப்பட்டிருக்கிறது.





திரு. சுப்பிரமணியசுவாமி கொடுத்த மனுவின் மீது மறைந்த ஆளுநர் டாக்டர் சென்னா ரெட்டி அவர்கள் டான்சி ஊழல் மற்றும் நிலக்கரி இறக்குமதி ஊழல் தொடர்பாக வழக்கு தொடர அனுமதி வழங்கினார். ஆளுநர் அளித்த அனுமதியை எதிர்த்து செல்வி ஜெயலலிதா அவர்கள் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். உயர் நீதிமன்றம் அவரது மனுவைத் தள்ளுபடி செய்தது. எனினும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து ஜெயலலிதா மீண்டும் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். அவரது மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம், "there appeared to be a prima facie case against the appellant under the concerned provisions`` அதாவது சம்பந்தப்பட்ட சட்டத்தின் பிரிவுகளின்படி மேல்முறையீடு மனுதாரரான ஜெயலலிதா மீது வழக்குத் தொடர பூர்வாங்க ஆதாரம்—prima facie case—உள்ளது என்று அளித்த தீர்ப்பு தெளிவுபடுத்துகிறது.

ஸ்பிக் நிறுவனத்தில் இருந்த, டிட்கோவுக்கு உரிய பங்குகளைக் குறைந்த விலைக்கு விற்றதில் நடந்த ஊழல் தொடர்பாகத் தொடுக்கப்பட்ட வழக்கில், அரசுக்கு ஏற்பட்ட இழப்பு ரூ. 28.29 கோடி ஆகும். இதற்கு ஜெயலலிதா காரணம் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டிருப்பதுடன், இழப்பினை ஈடுகட்ட அவர் பணம் கட்ட வேண்டும் என்று தீர்ப்பில் குறிப்பிட்டிருப்பதுடன், அரசு பங்குகளைக் குறைந்த விலைக்கு விற்றதில் அதிகாரத்தை முன்னாள் முதலமைச்சர் தவறாகவும், பொது நலனுக்கு எதிராகவும் பயன்படுத்தியுள்ளார் என்று கூறப்பட்டிருப்பதுடன், இதுகுறித்து மத்திய அரசு புலனாய்வுத் துறை விசாரிக்க வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் ஆணை பிறப்பித்திருக்கிறது. எனவே, செல்வி ஜெயலலிதா மீது தொடுக்கப்பட்ட வழக்குகள் உண்மையானவை, ஆதாரபூர்வமானவை என்று உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கும் விவரம் மத்திய அமைச்சர் திரு. தம்பிதுரைக்குத் தெரியாமல் இருக்க முடியாது. தனது கட்சித் தலைவியை ஊழல் வழக்குகளிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவே அவர் திட்டமிட்டு நீதி நிர்வாகத்தில் தலையிட முற்படுகிறார். நீதித் துறையின் சுதந்திரத்தில் குறுக்கிடுகிறார் என்று இந்தப் பேரவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டத் துறை அமைச்சரே இதுபோன்று நீதித் துறையில் குறுக்கிடுவது சட்டத்தின் ஆளுகையை (Rule of Law) குந்தகப்படுத்துகிற தவறான செயலாகும். இந்தத் தவறான போக்கினை பிரதமர் திரு. வாஜ்பாய்

[திரு. ஆலடி அருணா] [1998 மார்ச் 21

அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். மத்திய சட்ட அமைச்சர் திரு. தம்பிதுரையின் தவறான போக்கினைக் கண்டிப்பார் என்றும் எதிர்பார்க்கிறேன்.

மத்திய அரசில் தனது கட்சிக்கு நீதித் துறை வேண்டும் என்று ஜெயலலிதா ஏன் நிர்ப்பந்தம் செய்தார் என்று இப்போதுதான் நாட்டுக்கு அம்பலமாகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மத்திய சட்ட அமைச்சரின் தலையீட்டுக்குப் பணிந்து தலையாட்டும் அளவுக்கு இந்தியாவின் நீதித் துறை பலகீனமானது அல்ல என்றும் நிமிர்ந்து நிற்கும், நீதியைச் சொல்லும், நிர்ப்பந்தத்துக்குப் பணியாது என்றும் கூறி என் அறிக்கையைச் சமர்ப்பிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவரவர்களே,........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றைக்கே சொல்லியிருக்கிறேன். 110-லே விவாதம் கிடையாது. நீங்கள் அடுத்தாற்போல் பேசப் போகிறீர்கள். உங்கள் கருத்தை அப்போது சொல்லிக் கொள்ளுங்கள். இப்பொழுது அனுமதி கொடுக்க முடியாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** கொடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதை நான் உங்களுக்கு ஞாபகப்படுத்தினேன். நான் முறையாகச் சொல்கிறேன், நீங்கள் முறையாக நடந்து கொள்ளுங்கள். நீங்கள் அடுத்தாற்போல பேசப் போகிறீர்கள். என்ன கருத்தைச் சொல்ல வேண்டுமோ அதை அப்போது சொல்லுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவரவர்களே,..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நீங்கள் அப்பொழுது பதில் சொல்லுங்கள். விதி 110-ன்கீழ் அறிக்கை அளிக்கும்போது அதிலே விவாதம் கிடையாது என்று இருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடு) நேற்றைக்கும் இதைத்தான் சொன்னேன். நேற்று கேட்டபொழுது, கொடுக்க முடியாது என்று சொன்னேன். தினமும் நீங்கள் கேட்டுக்கொண்டிருப்பீர்கள், நான் கொடுத்துக்கொண்டிருக்க



1998 மார்ச் 21]

வேண்டுமா? நேற்றைக்கு தவறு செய்தேன். நீங்கள் கேட்டதற்காகப் பல தவறுகள் செய்திருக்கிறேன். உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** நினைத்து நினைத்து ...........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நினைத்து நினைத்து அல்ல. அது அரசாங்கத்தின் உரிமை. நீங்கள் உட்காருங்கள். அனுமதி கொடுக்க முடியாது. நீங்கள் உட்காருங்கள். நீங்கள் பேசும்பொழுது உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

## 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். திரு. பா. வேல்துரை துவக்கி வைப்பார்.

முற்பகல் 11-00

**திரு. பா. வேல்துரை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த உங்களுக்கு எனது இதயபூர்வமான நன்றியை முதலில் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

இந்த ஆட்சி தமிழகத்திலே ஏற்பட்ட காலத்திலிருந்து இன்று வரை சிறப்பான ஆட்சியைத் தர வேண்டும், நல்ல நிருவாகத்தைத் தர வேண்டும், தமிழக மக்களுக்கு நல்ல பாதுகாப்பைத் தர வேண்டும் என்று நல்ல திட்டங்களையெல்லாம் செயல்படுத்திக் கொண்டிருக்கிற நேரத்தில், தமிழ்நாட்டில் வெடிகுண்டுக் கலாச்சாரம், அரசு இயந்திரம் முழுமையாக இயங்காமை, போன்ற பல குறைகளின் காரணமாக பல குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகின்றதை எண்ணிப்பார்க்கும்போது ரொம்ப வேதனையாக இருக்கிறது.

இன்றைக்கு நாட்டிலே எங்கு பார்த்தாலும் வெடிகுண்டுக் கலாச்சாரம். இந்த வெடிகுண்டுக் கலாச்சாரம் எதற்காக ஏற் பட்டிருக்கிறது; எப்படி ஏற்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் நமது அரசு உன்னிப்பாகக் கவனித்து உடனடியாக சரியான

[திரு. பா. வேல்துரை] [1998 மார்ச் 21

நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றைக்கு மக்களெல்லாம் வெடிகுண்டுக் கலாச்சாரத்தின் காரணமாகவே வெளியே செல்ல முடியாமல், வீட்டில் இருக்க முடியாமல் பயந்து கொண்டிருக்கின்ற ஒரு மோசமான நிலையிருக்கின்ற காரணத்தினால், எங்கிருந்து, யாரால் இந்த வெடிகுண்டுக் கலாச்சாரம் ஏவப்படுகிறது என்பதை இந்த அரசு உடனடியாக கண்டிப்பாகக் கண்டுபிடித்து, உலகுக்கு வெட்ட வெளிச்சமாகக் காட்ட வேண்டுமென்று இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைக்கு வெடிகுண்டுகளோடு திரிபவர்களை, காவல் துறையினர் பிடித்துக்கொண்டு போய் கேஸ் போடுகிறார்கள். இது மிகவும் மோசமான நிலை. வெடிகுண்டுகளோடு ஒருவரைப் பார்க்கிறபோது உடனடியாக சுட்டுத்தள்ள வேண்டும். வெடிகுண்டை வைத்திருப்பது அடுத்தவரை கொல்வதற்கு. எனவே, வெடிகுண்டு வைத்திருப்பவர்களைப் பிடித்துக்கொண்டு போய், கோர்ட்டுகளிலே கேஸ் போட்டு வாக்குவாதம் செய்துகொண்டிருந்தால் எப்படி நியாயமாகும்?. கண்டிப்பாக சட்டங்களை திருத்தம் செய்து, ஒருவர் வெடிகுண்டு வைத்திருந்தால், அவரைப் பொது மக்கள் முன்னிலையில் சுட்டுக்கொல்ல வேண்டும். அப்படிப்பட்ட நடவடிக்கையை இந்த அரசு கண்டிப்பாக எடுக்க வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக உணவுப் பொருள் வழங்கல் திட்டத்தில், இரண்டு ஆண்டு காலமாகிவிட்டது, ரேஷன் கார்டுகள் கொடுக்கப்படவில்லை. எல்லா ஊர்களிலும் ரேஷன் கார்டுகள் எப்போது, ரேஷன் கார்டுகள் எப்போது என்று கேட்கிறார்கள். இரண்டு வருடங்களாக ரேஷன் கார்டுகள் கொடுக்கப்படவில்லை. இது ஒரு பெரிய குறை. இது ஒரு சாதாரண நிகழ்ச்சி. ஆனால் கார்டுகள் கொடுக்கப்படவில்லை. கடந்த ஆட்சிக் காலத்திலே 500 ரூபாய் கொடுத்தால், 1000 ரூபாய் கொடுத்தால் ரேஷன் கார்டு வாங்கிக் கொடுத்துவிடுவார்கள். இப்போது அதுவும் இல்லை. நாம் நல்ல நிருவாகத்தைக் கொடுக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறோம். ஆகவே ரேஷன் கார்டுகளைச் சீக்கிரம் கொடுக்க வேண்டும். எவ்வளவு நாட்களில் ரேஷன் கார்டுகளைக் கொடுக்கப்போகிறோம், பழைய ரேஷன் கார்டுகளை மாற்றி புதிய கார்டுகள் கொடுக்கப்போகிறோம் என்பதை இந்த மாமன்றத்தில் . . .



1998 மார்ச் 21]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிய ரேஷன் கார்டுகள் கொடுப்பது பற்றித்தான் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், உணவுத் துறை அமைச்சர் அவர்களும் ஏற்கெனவே பல முறை விவாதித்து, மே மாதத்திலிருந்து வழங்கப்படவிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். புதிய ரேஷன் கார்டுகள் வழங்கப்படும் என்று சொன்ன காரணத்தினாலேயே தமிழ்நாட்டிலே ரேஷன் கார்டுகளே இல்லையென்று அர்த்தமில்லை. ஏற்கெனவே வழங்கப்பட்ட ரேஷன் கார்டுகள் அனைவரிடத்திலும் இருக்கின்றன. அந்த ரேஷன் கார்டுகளைப் பயன்படுத்திக்கொண்டு பொருட்களை வாங்கிக் கொள்ளலாம். புதிய ரேஷன் கார்டுகளில் சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அதற்காகத்தான் அந்தப் புதிய ரேஷன் கார்டுகளே தவிர, வேறல்ல. உதாரணத்திற்குச் சொல்கிறேன் ; மத்திய அரசாங்கம் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்குக் குறைந்த விலையில் அரிசி விநியோகம் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அந்த அடிப்படையில் யார் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள், யார் மேலேயிருக்கிறார்கள் என்பதையெல்லாம் கண்டறிந்து புதிய ரேஷன் கார்டுகள் தயாராகிக் கொண்டிருக்கின்றன. எனவே, ஏற்கெனவே அமலில் இருக்கக்கூடிய கார்டுகள் மூலம் தமிழ்நாட்டு மக்கள் ரேஷன் பொருட்களை வாங்கிக்கொள்ளலாம் என்பதுதான் இன்றைய நடைமுறை.

**திரு. பா. வேல்துரை :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். ரேஷன் கார்டுகள் கொடுக்கப்போகிறோம். என்று இரண்டு வருடங்களாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். இதை உடனடியாக நாம் கொடுக்க வேண்டும். இதற்கு மேலேயும் காலதாமதப்படுத்திக் கொண்டிருந்தால் மக்களைப் போய்ச் சந்திக்க முடியாது. அவ்வளவு மோசமான நிலை. ரேஷன் கார்டுகூட எம்.எல்.ஏ.-வால் வாங்கித்தர முடியவில்லையென்று மக்கள் வருத்தப்படுகிறார்கள். ஆகவே, ரேஷன் கார்டுகள் உடனடியாக வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆடுகள் நீல நாக்கு நோயினால் தாக்கப்பட்டு ஏகப்பட்டவை இறந்தன. என்னுடைய தொகுதியில் அதிகமாக இறந்திருக்கின்றன. அந்த ஆடுகளுக்கு நஷ்டஈடு தேர்தலுக்கு முன்பு

[திரு. பா. வேல்துரை] [1998 மார்ச் 21

வழங்கியிருக்கலாம். நஷ்டஈடு வழங்குவதற்கும் தேர்தலுக்கும் சம்பந்தம் கிடையாது. ஆனால், தேர்தல் முடிந்தவுடன் வழங்குவோம் என்று நமது அரசு அறிவித்துவிட்டது. அதுவே நமக்கு ஒரு பெரிய குறையாக ஆகிவிட்டது. எனவே, இறந்த ஆடுகளுக்கு உடனடியாக நஷ்டஈடு வழங்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தொற்று நோயின் காரணமாக இறந்த ஆடுகளுக்கான இழப்பீட்டுத் தொகையை வழங்குவதற்கு, யாரும் கோரிக்கை வைக்காமலேயே, உடனடியாக அரசு அறிவித்து அதற்கான செயல்பாடுகளைக் கவனிக்கும்போது, ஆயிரம் ஆடுகள் இறந்திருந்தால் அது திடீரென்று, 10 ஆயிரம் ஆடுகளாக உடனடியாக மாறிவிட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்படி ஆயிரம், 10 ஆயிரமாக ஆகி, பணம் கொடுக்கிறார்கள் என்றவுடன் 10 ஆயிரம், இலட்சமாக ஆயிற்று. அந்த அளவிற்கு நிலைமை முற்றிப்போனதும், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களேகூட ஒரு நல்ல யோசனையைச் சொன்னார்கள். அதிகாரிகள் மூலமாகக் கொடுப்பதால் ஏற்படுகிற சிக்கலைத் தவிர்க்க, இந்த ஆடுகள் சம்பந்தமான சங்கங்கள் இருக்கின்றன, அவர்களை அணுகி அவர்கள் மூலமாக இதை வழங்கலாம் என்ற ஒரு யோசனையைச் சொன்னார்கள். அந்த யோசனையையும் அவர்களிடத்திலே அமர்ந்து பேசி, அந்தக் கருத்தையும் பெற்று அதற்குப் பிறகு அந்த இழப்பீட்டுத் தொகையை வழங்கலாம் என்று அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி. அடுத்தபடியாக, கைத்தறி நெசவாளர்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே கல்லிடைக்குறிச்சி, வீரவநல்லூர், சேரன்மகாதேவி, எடைகால் போன்ற கிராமங்களில் எல்லாம் கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக வாழ்கின்றார்கள். அந்தப் பகுதியிலே உற்பத்தி செய்த பொருட்களை அவர்களால் விற்கமுடியவில்லை. அதேபோன்று, உற்பத்தி செய்வதற்கு வேண்டிய மூலப்பொருட்கள் கிடைக்காத நிலையிலே மிகுந்த கஷ்டத்திற்குள்ளாகி, பலர் ஊரையே காலி செய்துவிட்டு வேறு ஊர்களுக்குச் சென்று கூலி வேலைகள்



1998 மார்ச் 21] [திரு. பா. வேல்துரை]

செய்யக்கூடிய அளவிற்கு மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

அதேபோன்று, நாம் இலவச வேஷ்டி—சேலை வழங்குகிறபோது, அதனை முழுமையாகக் கொடுத்துவிடலாம். என்னுடைய ஊரிலே, கல்லிடைக்குறிச்சியிலேகூட 30 சதவீதம் இலவச வேஷ்டி—சேலை கொடுத்திருக்கிறார்கள். வேஷ்டி கொடுத்தால் சேலை இல்லை; சேலை கொடுத்தால் வேஷ்டி இல்லை. அந்த அளவிற்கு அதிலே முறைகேடுகள் நடந்திருக்கிறதா, இல்லையா எனத் தெரியவில்லை. அதிலே மிகுந்த சிரமமாக இருக்கிறது. மக்கள் எல்லாம் போய்க் கேட்கும்போது இலவச வேஷ்டி—சேலை முழுமையாகக் கொடுக்கவில்லை, முழுமையாகக் கொடுக்கவில்லை என்று மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இலவச வேஷ்டி—சேலைகளைக் கூடுதலாகக் கொடுத்தால், கைத்தறித் துறையிலேயிருந்து கூடுதலாக purchase பண்ணலாம். அதனாலே கைத்தறித் துறைக்கு அது இலாபமான காரியம்தான். அது ஒரு உதவியையும் செய்வது மாதிரி இருக்கும். ஆகவே, இலவச வேஷ்டி—சேலை முழுமையாக வழங்க வேண்டும் என்று பணிவோடு இந்தச் சபையின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், நன்றாக, சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குடிநீர்த் திட்டத்திற்கெல்லாம் விரைந்து செயல்படுத்துவதற்கு நிறையப் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். நிறையத் திட்டங்களெல்லாம் ஆய்வு செய்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதிக்குட்பட்ட கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் ஐந்து பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. பாப்பாக்குடி கிராமத்திலேயெல்லாம் திட்டம் ரெடி ஆகிவிட்டது. ஆனால், இன்னமும் அனுமதி கிடைக்கவில்லை. இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. சுத்தமாகக் குடிக்கத் தண்ணீர் கிடையாது. அந்தக் கிராமங்களிலே தண்ணீர் கிடையாது. ஆகவே, உடனடியாக இந்த ஆண்டே எப்படியாவது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதனை நிறைவேற்றித் தருவதற்கான ஆணையைப் பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, உள்ளாட்சித் துறையிலே, E.A.S. திட்டம் இருக்கிறது. அந்த மாதிரி பல வளர்ச்சித் திட்டங்கள் இருக்கின்றன. I.R.D.P..

திட்டமெல்லாம் இருக்கிறது. நாம் எல்லாம் ஊர் ஊராகப் போய் மக்களைச் சந்திக்கும்போது கோரிக்கை மனு கொடுக்கிறார்கள். அவர்கள் I.R.D.P. கடன் கேட்கிறார்கள். 'எங்கள் ஊரிலே ரோடு போடுங்கள்; பாலங்கள் கட்டுங்கள்' என்று சொல்கிறார்கள். ஊராட்சி ஒன்றியத்திலே நம்முடைய கோரிக்கைகள் எதையுமே அவர்கள் ஏற்றுக்கொள்கிற மாதிரியில்லை. மிகுந்த மோசமான நிலையுள்ளது. ஒரு திட்டம் வந்தால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எவ்வளவு திட்டங்கள் கொடுக்கலாம், என்று பார்த்து ஒரு கோடி ரூபாய்க்குத் திட்டம் வந்தால் 50 இலட்சம் ரூபாய்க்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் திட்டங்களைக் கொடுங்கள். இல்லையென்றால் நாம் மனு கொடுத்தவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டாமா? என்ன பதில் சொல்வது? சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உண்மையிலேயே இரண்டு வருடமாக வேலையே கிடையாது. 4 மாதம், 5 மாதம் கழித்து சட்டமன்றக் கூட்டம் நடைபெறுகிறது. இதற்கிடையிலே என்ன வேலை இருக்கிறது? ஒரு வேலையும் கிடையாது. ஒரு ஆபீஸ் கிடையாது. ஒரு ஆபீஸிலே உட்கார்ந்து வேலை பார்ப்பதற்கு வழி இல்லை. பொதுமக்களுடைய கோரிக்கைகளுக்குப் பதில் சொல்ல முடியவில்லை. அரசு அதிகாரிகளிடம் சொன்னால், கேட்கமாட்டேன் என்கிறார்கள். கலெக்டர் ஆபீஸிலே சரியான மரியாதை சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கிடையாது. வளர்ச்சி மன்றக் கூட்டங்களை எடுத்துவிட்டிருக்கிறீர்கள். ஏதாவது திட்டம் நடக்கவில்லை என்று சொன்னால், வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் இருந்தாலாவது நமது கோரிக்கையை அங்கு சொல்லலாம். முதலிலே இரண்டு, மூன்று கூட்டங்களை அமைச்சர்கள் எல்லாம் வந்து நடத்தினார்கள். அதிகாரிகளை நன்றாக வேகப்படுத்திவிட்டுச் சென்றார்கள். வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் இல்லையென்று சொன்னவுடனே, விரைவுபடுத்துவதற்கே வாய்ப்பில்லை. இப்போது பேசவே முடியாது. எந்தத் திட்டம் நடக்கவில்லையோ, அந்தத் திட்டம் என்ன ஆயிற்று என்று அதிகாரிகளிடம் கேட்க முடியவில்லை. அந்த வகையில் வளர்ச்சி மன்றக் கூட்டம் கண்டிப்பாக அவசியம். இல்லையென்றால், துறைவாரியாக கருத்தரங்கு மாதிரி, சின்னச் சின்னக் கூட்டம் மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூட்டி என்ன காரியம் நடத்தியிருக்கிறார்கள். என்ன செயல்பட்டிருக்கிறது என்பதையாவது சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோன்று. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு. டவுன் பஞ்சாயத்திலே வீடு கிடையாது என்று சொல்கிறார்கள். டவுன் பஞ்சாயத்து. கிராமப் பஞ்சாயத்து இவை இரண்டும் கிட்டத்தட்ட ஒன்றாகத்தான் இருக்கின்றன. இதிலே 3,000 ஜனத்தொகை இருக்கிறது: டவுன் பஞ்சாயத்திலே 5,000 ஜனத்தொகை இருக்கிறது. டவுன் பஞ்சாயத்துக்கு I.R.D.P. கடன் கிடையாது என்று சொல்கிறார்கள். அதையெல்லாம் கொஞ்சம் மாற்றியமைத்து, தாழ்த்தப்பட்டவர்களுக்கு இலவச வீடு......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்திலே பேசி முடியுங்கள்.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முக்கியமான விஷயம் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறேன். ஒரு நிமிடம் காணாது.

அதனாலே, டவுன் பஞ்சாயத்திலே இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவச வீடு கண்டிப்பாகக் கொடுக்க வேண்டும். I.R.D.P. கடன் டவுன் பஞ்சாயத்திலே இருக்கிற ஏழைகளுக்கும் கொடுக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதே போல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கல்லிடைக்குறிச்சிக்கு வந்திருந்தபோது, கோரையாற்றுப் பாலம், பச்சையாற்றுப் பாலத் திட்டங்கள் ஆகியவை அங்கே இந்த ஆண்டு கண்டிப்பாக நிறைவேற்றப்படும் என்று சொன்னார்கள். அந்தத் திட்டங்கள் என்ன நிலையில் இருக்கின்றன என்று தெரியவில்லை. இந்த ஆண்டு உடனடியாக அந்த இரண்டு பாலங்களையும் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வருவாய்த் துறையைப் பொறுத்தவரையிலே, இலவச வீட்டுமனைப் பட்டாவிற்கு விண்ணப்பித்து இரண்டு வருடம் ஆகிறது. நாங்கள் எல்லாம் பரிந்துரை பண்ணிக் கொடுத்து இரண்டு வருடம் ஆகிறது. அது வரவேமாட்டேன் என்கிறது. ஆனால், கடந்த ஆட்சிக் காலத்திலே சில ஆட்கள் திட்டம் போட்டு புரோக்கர்கள் மாதிரி இருந்து செயல்பட்டார்கள், அவர்கள் எப்படியோ போய் வாங்கிக் கொண்டு வந்துவிடுகிறார்கள். ஆனால், நமது அரசு நேர்மையாகச் செய்ய வேண்டும் என்று நினைக்கிறது. நாம் நேர்மையாகப் போய்ச் சொல்கிறோம், மனு கொடுக்கிறோம். இலவசப் பட்டா வழங்கப்படுவதேயில்லை, கிடைக்கமாட்டேன் என்கிறது. சட்டமன்ற

உறுப்பினர் பரிந்துரை செய்தால் இலவசப் பட்டா மூன்று மாதத்திலேயோ, 6 மாதத்திலேயோ கொடுக்க வேண்டும். அல்லது பட்டா கொடுக்க முடியாது என்பதற்கான சரியான காரணத்தையாவது சொல்லவேண்டும். அப்படிச் சொல்கிறபோது நமக்கும் ஒரு திருப்தி ஏற்பட்டுவிடும். இது செய்ய முடியாது, இது செய்யப்படும் என்பதையாவது மக்களுக்கு நாம் திருப்பிச் சொல்லலாம். (மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 11-10

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

இரண்டு துறைகளைப் பற்றி மட்டும் பேசிவிட்டு முடித்துவிடுகிறேன். எனக்கு இது முதல் சந்தர்ப்பம்.

பொதுப்பணித் துறையைப் பொறுத்தவரையில், மழைக்காலங்களில் ஆற்றில் வெள்ளம் வரும்போது அந்தத் தண்ணீர் கடலில் சென்று கலந்துவிடாமல் தடுத்து நிறுத்துவதற்கு ஏதாவது புதிய திட்டத்தை இந்த அரசு உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் போல, நெல்லை கடனாநதி விரிவாக்கத் திட்டத்தையும் உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மணிமுத்தாறு அணையிலிருந்து புத்தன்தருவைக்குத் தண்ணீர் கேட்கின்றார்கள். மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆற்று நீர் நிறைய வீணாகப் போய்விடுகிறது. எனவே, 118 அடி உள்ள அணையின் உயரத்தைக் கூட்டினால், மேற்கொண்டு தண்ணீர் கூடுதலாகப் பிடிக்கும். எனவே, மணிமுத்தாறு அணையின் உயரத்தை 10 அடி உயர்த்துவதற்கு முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வனத் துறையைப் பொறுத்தவரையில், மேற்குத் தொடர்ச்சி மலையில் மின்வேலி அமைக்கப்படும் என்று சொல்லப்பட்டது. அந்தப் பணி எந்த நிலையில் உள்ளது என்று தெரியவில்லை. அந்த வேலி அமைக்கப்படுமா என்பது தெரியவில்லை. எனவே, அதற்கான நடவடிக்கையை அரசு உடனடியாக எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று பொதுப்பணித் துறையின் சார்பாகத் தண்ணிக்கால் திட்டம் என்ற மிகப் பெரிய திட்டம் தீட்டப்பட்டது. குளங்களில் தண்ணீர் இல்லாமல் பாதிக் குளங்கள் காய்ந்துவிட்டன. எனவே,



அந்தத் தண்ணிக்கால் திட்டத்தை உடனடியாக பொதுப்பணித் துறை செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. பா. வேல்துரை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல திட்டங்கள், 3 மாதமாக estimate sanction ஆகாமல், தேர்தல் வந்துவிட்ட காரணத்தால் நிறுத்தப்பட்டன. அந்தத் திட்டங்களையெல்லாம் அடுத்த ஆண்டிற்குக் கொண்டு வரக்கூடாது. அது கடந்த ஆண்டு பட்ஜெட்டிலே ஒதுக்கப்பட்ட திட்டம். புதிய திட்டங்களை மட்டும்தான் புதிய பட்ஜெட்டிலே எடுத்துக்கொள்ள வேண்டும். நடைமுறைப்படுத்தாத திட்டங்களையெல்லாம் நிறைவேற்ற, அதற்கும் சேர்த்து நிதியை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மிக முக்கியமானது என்னவென்றால், பட்ஜெட்டிலே கடந்த ஆண்டு ஒவ்வொரு துறைக்கும் நிதி ஒதுக்கப்பட்டது. அந்த நிதியில் ஒவ்வொரு துறையும் எவ்வளவு செலவு செய்துள்ளது. மீதமுள்ளது எவ்வளவு, எந்தெந்தத் துறை சிறப்பாகச் செயல்பட்டுள்ளது என்பதற்கான அறிக்கையை இந்த மன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்: அப்பொழுதுதான் பட்ஜெட்டிலே ஒதுக்கப்படும் நிதி செலவாயிற்றா, இந்த ஆண்டு spill-over ஆக வருகின்றதா என்பது தெரியும். எனவே, ஒவ்வோர் ஆண்டும் பட்ஜெட்டில் எவ்வளவு செலவானது, எவ்வளவு செலவாகவில்லை, எவ்வளவு செலவு மேற்கொண்டு ஆகும் என்ற கணக்குகளை இந்த மன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்போது Performance Budget என்று பெரிய புக் ஒன்றை வைப்பார்கள். அதில் எல்லாம் தெரியும்.

**திரு. பா. வேல்துரை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் :** எதற்கு நன்றி ?

[1998 மார்ச் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்துரை, அமைச்சரின் விளக்கத்திற்கு நன்றி என்று சொல்கிறார். அவருக்குத் தெரியாத தகவலை அமைச்சர் சொன்னதற்கு நன்றி சொல்கிறார்.

**திரு. பா. வேல்துரை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மகாதேவி ஊருக்குள் ரோடு முழுவதும் பழுதடைந்துவிட்டது. கிட்டத்தட்ட 3½ கி.மீ. தூரத்துக்கு heavy traffic இருக்கிறது. பஸ் போக்குவரத்து இல்லை. அந்த அளவுக்கு ரோடு மோசமாகிவிட்டது. பழுதுபார்க்க ரூபாய் 30 இலட்சம், 40 இலட்சம் ரூபாய் செலவு ஆகும் என்று சொல்கிறார்கள். எனவே, உடனடியாக அந்தப் பணத்தைக் கொடுக்கவில்லையென்றால் ஊருக்குள் போக முடியாது. அது தொகுதியின் தலைமையிடமாக உள்ளது. எனவே சேரன்மகாதேவி சாலையை உடனடியாகப் பழுதுபார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அரசுக்கும் அதிகாரிகளுக்கும் இடையே பெரிய இடைவெளி இருக்கின்றது. இந்த நிலை போகவேண்டும். அதிகாரிகள் அரசுடன் ஒத்துப் போவதில்லை. அரசு நல்லது செய்யவேண்டுமென்று நினைக்கின்றது. நல்ல பல திட்டங்களையெல்லாம் பட்ஜெட்டிலே அறிவிக்கின்றது. ஆகவே, இந்தத் திட்டங்களெல்லாம் விரைந்து செயல்பட அதிகாரிகள் அரசுடன் முழு அளவில் ஒத்துழைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த நல்ல வாய்ப்பை அளித்த இந்த மன்றத்திற்கு நன்றி கூறி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பா. வேல்துரை, நீங்கள் தலைவருக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். அடுத்து, திரு. இரா. தாமரைக்கனி.

முற்பகல் 11-15

***திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் நிலையான ஆட்சி அமைவதற்கு, மாண்புமிகு திரு. வாஜ்பாய் அவர்கள் பிரதமராக வருவதற்கு வாக்களித்த, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக்கு வாக்களித்த பெருமக்களுக்கு இந்த



1998 மார்ச் 21] [திரு. இரா. தாமரைக்கனி]

நேரத்திலே அவையின் மூலமாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு கவர்னர் உரையில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன்.

தேர்தல் முடிவு வெளிவந்தவுடன் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் 'தமிழ்நாடு சட்டசபைக்குப் பொது மக்கள் என்னை விரும்புகிறார்கள். மத்தியில் நிலையான ஆட்சி வருவதற்கு வாஜ்பாயை விரும்புகிறார்கள்' என்று தனது கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். கவர்னர் உரையிலே அரசாங்கத்தினுடைய கருத்தைத்தான் கவர்னர் சொல்லலாம். ஆனால் ஒரு அரசியல் கட்சியினுடைய கருத்துக்களை எல்லாம் சேர்த்து கவர்னர் உரையாற்றுவது, அவ்வாறு அவரை உரையாற்ற வைப்பது என்பது கவர்னரை கொச்சைப்படுத்துவதற்குரிய அறிகுறியாகும். இது கண்டிக்கத்தக்கது என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 'கவர்னரைக் கொச்சைப்படுத்துவது' என்ற வார்த்தையைப் பயன்படுத்தாதீர்கள். எந்த ஆளுநர் உரையை எடுத்துக்கொண்டாலும் அரசாங்கக் கொள்கைகளைத்தான் ஆளுநர் மூலமாக சொல்வார்கள். ஆகவே, அது ஒன்றும் கொச்சைப்படுத்துவது அல்ல.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) உள்ளாட்சித் துறை அமைச்சர் சொல்வதுபோல 'இது கண்டிக்கத்தக்கது' என்று வைத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதுகூட முறையல்ல. நீங்கள் எத்தனையாவது தடவை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள் ?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டிக்கிறேன் என்றுகூடச் சொல்லக்கூடாது என்றுதான் சொன்னேன். நான் இந்த அவையில் ஏற்கெனவே இருந்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. தாமரைக்கனி, நீங்கள் 5-வது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். நான்கூட சட்டமன்றப் பவள விழாவிலே நீங்கள் 5-வது முறை தேர்ந்தெடுக்கப்பட்டதாகப் பெருமையாகச் சொன்னேன். ஆளுநர் அவர்கள் அரசாங்கத்தின் கொள்கைகளைத்தான் படிக்கிறார்கள். அதை நீங்கள்

'கொச்சைப்படுத்துவது' என்று சொன்னால் என்ன அர்த்தம்? ஆளுநரைப் பற்றிச் சொல்லலாமா?

**திரு. இரா. தாமரைக்கனி :** இதை ஆளுநர் சொல்லலாமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இரண்டு இடங்களில் நடைபெற்ற இடைத் தேர்தலில் வெற்றி பெற்ற காரணத்தால் தமிழ்நாட்டு மக்கள் இந்த ஆட்சியை ஆதரிக்கிறார்கள் என்ற கருத்தை ஆளுநர் உரையில் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி :** அதைப்பற்றிப் பின்னால் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் பேசுங்கள். உங்களுக்குப் பேச்சுச் சுதந்திரம் உண்டு. முறையாகப் பேசுங்கள். கவர்னரை வம்புக்கு இழுக்காமல் பேசுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி :** கவர்னர் உரையில் எந்தப் புதுமையும் இல்லை. ஒரு பெண் கவர்னர் உரையாற்றியிருக்கிறார்கள், அவ்வளவுதான். மக்களுக்குத்தான் நல்வாழ்வுத் திட்டங்களோ, மாநில வளர்ச்சித் திட்டங்களோ, வேலைவாய்ப்புத் திட்டங்களோ, எந்தத் திட்டமும் கவர்னர் உரையில் குறிப்பிடும்படியாக இல்லை.

இரண்டு அனல் மின் நிலையங்கள் அறிவித்திருக்கிறீர்கள். எண்ணூரில் 1000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையம், தூத்துக்குடியில் 500 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையம் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இப்போது தமிழ்நாடு மாநிலத்தில் பகலிலும், இரவிலும் அமல்படுத்தப்பட்டுள்ள மின்சார வெட்டைத் திசை திருப்புவதற்காகவே இந்த அறிவிப்பு என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

ரேஷன் கார்டுகள். மாநில மக்களுக்கு உணவுப் பொருள்கள்தான் சரியாக விநியோகிக்கப்படுவதில்லை. புது கார்டுகள் குறிப்பிட்டபடி வழங்கப்பட வேண்டும். நீங்கள் ஆட்சிக்கு வந்து 1½ வருடம் ஆகிறது. இன்னும் கார்டுகள் வழங்கப்படவில்லை. பச்சை, சிவப்பு, மஞ்சள் வண்ணங்களில் கார்டுகள் வழங்குவதாகச் சொன்னீர்கள். டாக்டர் கலைஞர்கூட கோபாலபுரத்திலே அதை அமல்படுத்தும் விழாவெல்லாம் நடத்தினார்கள். ஒரு நிருபர்கூட வாங்கிக்கொண்டு சென்றார்.



இதையெல்லாம் நான் பத்திரிகையிலே பார்த்தேன். இப்போது சிவப்பு, மஞ்சள் நிறத்திலே கார்டுகள் வழங்குவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். கோயம்புத்தூரில் ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவங்களால், பச்சை நிறத்தில் அதிர்ச்சி அடைந்து, பச்சை நிறத்தில் கார்டுகளை வழங்கவில்லையா ? மொத்தத்தில் நீங்கள் ஆட்சியில் இருக்கும்போது கார்டுகளை வழங்க மாட்டீர்கள் என்பது என்னுடைய எண்ணம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வழங்கினால் என்ன செய்வீர்கள் ?

**திரு. இரா. தாமரைக்கனி :** கார்டுகள் 1½ வருடமாக வழங்கப்படவில்லை.

கோவையிலே குண்டு வெடிப்புச் சம்பவங்கள் 13 இடங்களிலே நடந்திருக்கின்றன. 100-க்கும் மேற்பட்டவர்கள் இறந்திருக்கின்றார்கள். தமிழக போலீஸும், தமிழக உளவுத் துறையும் என்ன செய்தன ? மற்ற மாநிலங்களில் ஒன்றிரண்டு இடங்களில்தான் இதுபோன்ற சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அவ்வளவுதான். ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, திட்டமிட்டு, பயங்கரச் சதித் திட்டத்தோடு, அத்வானியைக் கொலை செய்கிற முயற்சியாக, தமிழ்நாட்டைச் சுடுகாடாக மாற்றுவதற்கான சதி வேலை நடந்திருக்கிறது. என்னவென்று தெரியவில்லை, தி.மு.க. ஆட்சி என்றாலே தீவிரவாதிகள் உள்ளே வந்துவிடுகிறார்கள். முன்பு தி.மு.க. ஆட்சியில் இருக்கும்போது விடுதலைப்புலிகள் தமிழ்நாட்டில் நுழைந்தார்கள். இதை நான் சொல்லவில்லை. ஜெயின் கமிஷன் அறிக்கை சொல்கிறது. இப்போது ஆட்சிக்கு வந்திருக்கும்போது தீவிரவாதிகள் வந்திருக்கிறார்கள். குண்டு வெடிப்புகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். வெடிகுண்டு வெடிப்புகள் எல்லாம் கோவையில் நடந்ததன் காரணம் என்ன ? தேர்தல் நேரத்தில் சுவரொட்டி ஒட்டினீர்கள். ஏற்கெனவே முடிந்துவிட்ட பாபர் மசூதி இடிப்புப் படங்களைத் தொடர்ந்து தேர்தல் விளம்பரங்களாக தி.மு.க. மற்றும் த.மா.கா. முழு பக்க அளவில் வெளியிட்டன. இஸ்லாமியத் தீவிரவாத இளைஞர்களின் மனதில் வன்முறையைத் தூண்டுகிற, மத துவேஷத்தை உருவாக்குகிற முயற்சியைச் செய்தீர்கள் என்பது உண்மையா, இல்லையா ? அந்த மாதிரி போஸ்டர்களைத் தேர்தல் நேரத்திலே ஒட்டினார்கள். அது மட்டுமல்லாமல், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், வடக்கேயுள்ள பண்டாரம், பரதேசிகள் எல்லாம் தமிழ்நாட்டில் ஜெயலலிதா அவர்கள் வருவதற்கு ஊக்குவிக்கிறார்கள் என்று பேசினார்கள். இப்பொழுது

பாருங்கள் ; முருகன் கோவிலுக்குப் போகிறவர்கள் ; மீனாட்சி அம்மன் கோவிலுக்குப் போகிறவர்கள் ; ஐயப்பன் கோவிலுக்குப் போகிறவர்கள் எல்லாம் பண்டாரம் பரதேசிகளா ? அவர்களுடைய மனது புண்படுகின்ற அளவிலே, ஏதோ பாரதீய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்து இஸ்லாமிய மக்களுக்குப் புறம்பான ஆட்சி நடத்தப் போகிறது என்பது மாதிரி, இந்து மக்களின் மனது புண்படுகின்ற வகையிலும், இஸ்லாமிய இளைஞர்களைத் தீவிரவாதிகளாகத் தூண்டிவிடுகிற அளவிலும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேசியிருந்த காரணத்தினால்தான் கோவையில் குண்டு வெடிப்பதற்கு, இஸ்லாமியத் தீவிரவாதி குண்டு வைப்பதற்குக் காரணமாக இருந்தது.

முற்பகல் 11-20

அதுமட்டுமல்லாமல், சென்னை சேத்துப்பட்டிலே ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்திலே குண்டு வெடித்தது. அதுசம்பந்தமாக, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே பாட்சா என்ற அல்-உம்மா இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதியைக் கைது பண்ணினோம். ஆனால் நீங்கள் ஆட்சிக்கு வந்த மூன்று மாதத்திலேயே அந்தத் தடா கைதியை வெளியேற்றினீர்கள். இது என்ன நியாயம்? மூன்று மாதத்திலேயே வெளியேற்றிவிட்டீர்கள். சென்னையின் மத்தியப் பகுதியான அண்ணா சிலைக்குப் பக்கத்திலே அவருடைய வீடு இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான ஒரு விளக்கத்தை இந்த அவைக்குக் கொடுக்கக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். பாட்சா என்பவரை ஏதோ இந்த அரசாங்கம் தடா வழக்கிலேயிருந்து விட்டுவிட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது உண்மையல்ல. தடா கைதியாக இருந்த அவரை வெளியே விட்டது நீதிமன்றம். அரசாங்கத்திற்கும், அதற்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்லாமல் கோயம்புத்தூரிலே குண்டு வெடித்தது. அதுபோல, இங்கே பாட்சாவினுடைய வீட்டிற்கும், அவருடைய அலுவலகத்திற்கும், அதேபோல கோயம்புத்தூரிலே இருக்கின்ற அவருடைய வீட்டிற்கும் heavy யாக போலீஸ் போடப்பட்டிருக்கிறது. குண்டு வெடித்த உடன் பாட்சாவைக் கைது பண்ணப் போகிறார்கள். அப்படிப் போகும்போது வீட்டிற்குள்ளே என்ன இருக்கிறது ?



பயங்கரமான ஆயுதங்கள், வெடிகுண்டுகள் எல்லாம் இருக்கின்றன. போலீஸ் காவலில் இருக்கும்போது இவையெல்லாம் எப்படி அங்கே வந்தன ? D.S.P. அலுவலகமும் பக்கத்திலேதான் இருக்கிறது. இதெல்லாம், தீவிரவாதிகளை நீங்கள் ஊக்குவிப்பதாகவே தெரிகிறது.

அதுமட்டுமல்லாமல், பாட்சா Jail Superintendent-ஐ மிரட்டி இருக்கிறார். அவர் சென்னை மத்திய சிறையிலே இருக்கிறார். எனவே, அதிகாரிகளெல்லாம் அவரை வேலூர் சிறைக்கு மாற்ற வேண்டுமென்று அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். ஆனால், நீங்கள் அவரை வேலூர் சிறைக்கு மாற்றவில்லை. இராஜ உபசாரமாக, ஒரு கைதி மாதிரி இல்லாமல், இந்த அரசு அவரை நடத்திக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

முதல்வர் அவர்கள் நேற்று சட்டசபையிலே பேசும்போது கூறினார்கள் ; கோவையிலே குண்டு வைத்தது எங்களுக்குத் தெரியாது என்று. ஆனால், இங்கே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் கருப்புத் துணியைக் காட்டினார்கள், பேனரைக் காட்டினார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். மத்திய அரசு, தீவிரவாதிகளினால் தமிழ்நாட்டில் குண்டு வெடிக்கும் ஆபத்து இருக்கிறது என்று சொல்லி இரகசியக் கடிதம் எழுதவில்லையா? அது உங்களுக்குத் தெரியாதா ? மத்திய சர்க்கார் உங்களுக்குச் சொல்லவில்லையா என்பதை நான் இந்த நேரத்தில் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்லாமல், தேர்தல் கமிஷனில் இருந்து, 7 மாநிலங்களில் தேர்தலை சீர்குலைப்பதற்காக பயங்கர சக்திகள் உருவெடுத்துள்ளதாக எச்சரிக்கை விடுத்தார்கள். இதெல்லாம் முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது மாதிரி நேற்று சட்டசபையிலே சொன்னார்கள். கோவையிலுள்ள check post-ஐ நீங்கள் ஏன் எடுத்தீர்கள்? தீவிரவாதிகளால் வெடிகுண்டுச் சம்பவங்கள் நிகழப் போகின்றன என்று இந்த அரசுக்கு மத்திய அரசு இரகசியக் கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். அதை நீங்கள் இல்லையென்று சொல்கிறீர்கள், பரவாயில்லை. பல வழக்குகளிலே சம்பந்தப்பட்டவர்களை, S.P., Collector ஆகியோர் பரிந்துரை செய்வதன்பேரிலே தேசிய பாதுகாப்புச் சட்டத்திலே ஜெயிலில் போடுகிறார்கள். நீங்கள் ஆட்சிக்கு வந்த உடனே தடா கைதிகளை ஏன் வெளியே விட்டீர்கள் ? அதனால்தானே தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு நிம்மதியான வாழ்க்கை இல்லை.

[திரு. இரா. தாமரைக்கனி] [1998 மார்ச் 21

எங்குபார்த்தாலும் ஒரு அச்ச உணர்வு இருக்கிறது. அவர்களை ஏன் வெளியே விட்டீர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

தீவிரவாத இளைஞர்களை உருவாக்குவதற்கு, தமிழ்நாட்டில் குண்டுக் கலாச்சாரத்தை ஏற்படுத்துவதற்கு பல மாநிலங்களும், வெளிநாடுகளும் நிதியுதவியெல்லாம் செய்கிறார்கள். உங்கள் காவல் துறையை வைத்து அவற்றையெல்லாம் நீங்கள் ஆய்வு செய்தீர்களா என்று கேட்க விரும்புகிறேன். தீவிரவாதிகளுக்குப் பயிற்சி கொடுப்பதற்கு வெளிநாட்டிலேயிருந்து தமிழ்நாட்டிற்கு உங்களுக்குத் தெரியாமல் எப்படி வந்தார்கள் என்று கேட்க விரும்புகிறேன். வாஜ்பாய் அவர்கள் பதவியேற்ற நாளன்று குண்டு வெடிக்கவில்லை என்று சொல்லி, 86,000 காவல் துறை அதிகாரிகளுக்கு ரூ. 9 கோடி வரை அள்ளிக் கொடுத்திருக்கிறீர்கள். இன்னும் நிறையக் கொடுங்கள். அது பாராட்டப்பட வேண்டியதுதான். ஆனால், இதுவரை குண்டு வெடிப்பில் பலியானவர்களுக்கு யார் பொறுப்பு ஏற்பது? அது உங்களுடைய ஆட்சியில்தானே நடந்தது.

நான் முதலமைச்சர் அவர்களிடம் சில கேள்விகளையும் கேட்க விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், சில கோரிக்கைகளையும் விடுக்க விரும்புகிறேன். என்னவென்றால், நான் ஒரு எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்தான். தமிழ்நாட்டு மக்கள் நிம்மதியாக வாழும் நிலை, அச்சமில்லாமல் வாழும் நிலை ஏற்பட வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போலீஸ் துறைக்கும் அமைச்சராக இருக்கிறார்கள். போலீஸ் துறையினுடைய நிர்வாகம் முடங்கிப் போகாத அளவிலே அவர்களை free-யாக விட்டு, அவர்கள் வேலை செய்வார்களென்றால் இந்திய மட்டத்திலே நம்முடைய போலீஸ் மாதிரி எந்தப் போலீஸும் கிடையாது. ஆனால், நீங்கள் குற்றவாளிகளைப் பிடிக்கக்கூடாது என்று சொல்லி போலீஸுக்கு வாய்மொழி உத்தரவிட்ட காரணத்தினால்தான், இந்த வேலைகள் எல்லாம் நடக்கின்றன. அதுமட்டுமல்ல; இந்த ஆட்சி வருவதற்கு முன்பு, எத்தனை தடா கைதிகள் சிறையில் இருந்தார்கள்; எத்தனை பேர் இந்த ஆட்சியில் விடுதலை செய்யப்பட்டார்கள் என்ற விவரத்தை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர் பேசும்போது, தெரியப்படுத்தினால் போதும்.



1998 மார்ச் 21] [திரு. இரா. தாமரைக்கனி]

முற்பகல் 11-25

அடுத்து, அல்-உம்மா தலைவர் பாட்சா, ஏறத்தாழ 500 பேருக்கு, ஆண்கள், பெண்கள் உட்பட, பயிற்சி கொடுத்தது உண்மையா? அதில் பிடிபட்டவர்களைத் தவிர, மீதிப் பேரைப் பிடிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? அல்-உம்மா தவிர, வேறு வெளிநாட்டுச் சக்திகள் குண்டு வெடிப்பில் ஈடுபட்டு இருக்கிறார்களா? அதைக் கண்டறிய மத்திய அரசின் உதவியை, இந்த அரசு நாடியிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

குண்டு வெடிப்பைத் தடுக்க, தனி போலீஸ் படை,—தனி D.G.P. தலைமையில் போலீஸ் படை—அமைக்க அரசு ஆவன செய்யுமா? கோவை குண்டு வெடிப்பில், சென்னையில் கைப்பற்றப்பட்ட குண்டுகள், தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் பிடிபட்ட தீவிரவாதிகள் உட்பட அனைத்தையும் விசாரிக்க C.B.I. விசாரணைக்கு ஏன் மறுக்கிறீர்கள் என்பதை நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

அல்-உம்மா இயக்கத்தின் நடவடிக்கையை ஏன் இந்த அரசு கண்காணிக்கவில்லை என்று உங்கள் மீது நான் குற்றம் சாட்டுகிறேன். சட்டசபையில், ஓட்டுக்காக, தடா கைதிகளை, உங்களுடைய தோழமைக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், 'அப்பாவி இஸ்லாமியர்கள் ' என்று சொல்லி, 'அவர்களை விட்டுவிடுங்கள் ' என்று சொன்னதற்காக, ஏன் தடா கைதிகளை வெளியே விட்டீர்கள்? அதனால்தானே இந்தக் குண்டு வெடிப்பு? உங்கள் ஆட்சியில், நீங்களே சட்டம்-ஒழுங்கைக் கெடுக்கிறீர்களே? மக்கள் அச்சத்துடன் வாழ வழிவகுக்கிறீர்களே? தீவிரவாதிகளை ஆதரிக்கிறதா இந்த அரசு என்பதை உங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

கோவை குண்டு வெடிப்பில் தேடப்பட்ட தீவிரவாதிகள் 10 பேர், கேரளா கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டார்கள். ஆனால், அவர்கள் ஜாமீனில் விடப்பட்டார்கள். தமிழக அரசுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டும், தமிழக அரசு எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை. தீவிரவாதிகளைப் பிடிக்கும் எண்ணம் உங்களுக்கு இல்லை. அந்த 10 பேரையும் கைது செய்தீர்களா? அவர்களைப் பிடிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள்? இன்றைக்குக்கூட அதுபற்றி பத்திரிகையிலே போட்டிருக்கிறார்கள். கேரளாவிலே, 2 முக்கிய தீவிரவாதிகளைப் பிடித்திருக்கிறார்கள். ரஸாக்

சையத், ரசூல் ஆகிய இரண்டு பேரைக் கைது செய்திருக்கிறார்கள். மேலும், வெடிகுண்டுச் சம்பவத்தில் தளபதிகள் என்று அழைக்கப்பட்ட காஜா உசேன், மதுரை சுபேன், கோவை கவுண்டர்பாளையம் காஜா மொஹைதீன், சையத் அலி, சித்திக் ஆகியோர் வெடிகுண்டு தயாரித்தல் மற்றும் அதை இயக்குதல்—இவர்கள் இடத்திற்கு இடம் தனித்தனியாகப் போய் அதை இயக்குபவர்கள்—இவர்களைப் பிடிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே, இந்தத் தீவிரவாதிகளை, கலைஞர் அவர்கள் ஒடுக்குவதற்கு முழு முயற்சி எடுக்க வேண்டும். ஏனென்றால், உங்கள் கூட்டணிக் கட்சிக்காரர்கள் சிலபேர், அந்தத் தீவிரவாதிகளை விட்டு விடவேண்டுமென்று சொல்கிறார்கள். நீங்கள் மனிதாபிமானப்பட்டு, அவர்கள் நல்லவர்கள் என்று நினைத்து, விட்டுவிட்டீர்கள். உங்கள் மீது ஒன்றும் தவறில்லை. நீங்கள் ஏன் பார்க்கவா போகிறீர்கள்? ஆனால் இருக்கிற ஆட்கள் பூராவும் அந்தமாதிரி இருக்கிறார்கள். அவர்களைத் தடா கைதிகளாகப் போட்டீர்கள் என்றால், S.P.. Collector ஆகியோர் பரிந்துரை செய்துதானே போட்டீர்கள்? அதனை விசாரிக்குமாறு அதற்கு என்று ஒரு கமிட்டி போட்டீர்கள். அவர்கள் நீங்கள் சொல்வதைத்தானே கேட்கப்போகிறார்கள்? அதனாலே, தமிழ்நாட்டிலே . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் அரசின் மேலே குற்றச்சாட்டுச் சொல்லுங்கள். ஆனால், தடா நீதிமன்றம் அரசாங்கம் சொல்வதைத்தான் கேட்கிறது என்று சொல்வது, நீதிபதிகளைக் குறை சொல்வதாக அமையும்.

**திரு. இரா. தாமரைக்கனி :** இந்த ஆட்சி வந்த பிறகு, விடுதலைப் புலிகளுக்கு, டீசல், பெட்ரோல் ஆகியவை தாராளமாகக் கிடைக்கின்றன. இராமேஸ்வரம் கடற்கரைப் பகுதிக்கு அவர்கள் வருகிறார்கள். அவை தாராளமாகக் கிடைக்கின்றன. வாங்கிக் கொண்டு போகிறார்கள். சொந்த வீட்டுக்கு வருவதுபோல வந்து போகிறார்கள். விடுதலைப் புலிகளினுடைய ஊடுருவல் அதிகமாகி இருக்கிறது. அதைத் தடுப்பதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

அதேமாதிரி, திருப்பத்தூரிலே ஆயிரம் கோடி ரூபாய் பெறுமான சந்தன மரங்களை, தீ வைத்துக் கடத்திப் போய்விட்டார்கள் என்று ஹைக்கோர்ட்டே சொல்லியிருக்கிறது. அந்தப் பகுதி எம்.எல்.ஏ. சண்முகம் தலையிட்டிருக்கிறார் என்றும் சொல்கிறார்கள். அந்த



எம்.எல்.ஏ. மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? இதற்கெல்லாம் நடவடிக்கை எடுத்திருப்பீர்கள் என்றால், நியாயமாக இருக்குமென்று சொல்லலாம்.

முற்பகல் 11-30

இன்னொன்று, தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி. இந்த மெர்கன்டைல் வங்கி குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் முன்னிலையில் — இது பிற்படுத்தப்பட்டோர் சமுதாயத்திற்காக உள்ள வங்கி ; எல்லாக் கட்சித் தலைவர்களும், எல்லா சமுதாயத் தலைவர்களும், இந்த வங்கி, பிற்டுத்தப்பட்ட சமுதாயமான நாடார் சமுதாய மக்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று உண்ணாவிரதம் இருந்ததை மற்றவர்கள் எல்லாம் வாழ்த்தியிருக்கிறார்கள். டாக்டர் கலைஞர் அவர்களை முதலமைச்சர் என்ற முறையிலே சென்னை கோட்டையிலே வந்து சந்தித்தார்கள். சுகாதாரத் துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்களும் இருந்தார்கள். அவர்தான் draft எல்லாம் போட்டுக் கொடுத்தார். போட்டுக் கொடுத்து என்ன பேச்சுவார்த்தை நடத்தினார்கள் என்றால், 24-6-1997-ல் நம்முடைய மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சரே வந்து, 24-6-1997 மாலை தமிழக முதலமைச்சர் கலைஞரிடம், மெர்க்கன்டைல் வங்கியின் ஷேர்களை மீண்டும் நாடார் சமுதாயத்திற்குப் பெற்றுத் தர வேண்டுமென திரு. ராமச்சந்திர ஆதித்தன் அவர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று எஸ்ஸார் நிறுவனத்தின் உரிமையாளர், சசிகாந்த்ரூயா அவர்களுடன் முதல்வர் கலைஞர் பேச்சுவார்த்தை நடத்தினார். எஸ்ஸார். நிறுவனத்தின் உரிமையாளர், அந்த ஷேர்களை 135 கோடி ரூபாய்க்கு விற்றுவிட்டதாகவும் அந்தப் பணத்தைத் திருப்பித் தந்தால் மொத்த ஷேர்களையும் திருப்பி வாங்கித் தருவதாகவும் தெரிவித்தார். முதலமைச்சர் அவர்கள் அந்த அளவுத் தொகையை நாடார் சமுதாயத்தால் வசூல் செய்யமுடியாது என்றும், 100 கோடி ரூபாய் அளவுக்கு திரு. ராமச்சந்திர ஆதித்தன் அவர்களும் மற்றவர்களும் முயற்சி எடுத்து வசூல் செய்வது என்றும், 1997 டிசம்பருக்குள் இந்தப் பணத்தை வசூல் செய்துவிட்டால் மறுபடியும் முதலமைச்சரைச் சந்தித்து அவர் முடிவு செய்யும் விலைக்கு ஷேர்களைத் திருப்பித் தருவது என்றும் எஸ்ஸார் நிறுவனத்தின் உரிமையாளர் இசைவைத் தந்தார் என்று முதலமைச்சர் முன்னிலையில் தீர்ப்புக் குழுவினர் பேசி முடித்தாகிவிட்டது. டிசம்பர் 1997-க்குள்ளே பேசி ரூபாயைக்

கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அதற்கிடையிலே எஸ்ஸார் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் சிவசங்கரனுக்கு ஷேர்களை விற்றுவிட்டதாகச் சொல்லி அறிக்கை விட்டார்கள். கரெக்ட்டான நேரத்திலே அந்தத் தீர்ப்புக் குழுவினர் வந்தார்கள். அப்போது ஷேர் யாரிடம் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சிவசங்கரன் யார்? நான் சொல்கிறேனே என்று வருத்தப்படாதீர்கள். பொதுமக்கள் மத்தியிலே பேசுகிறார்கள். இந்த சிவசங்கரன் அருமைக்குரிய ** என்று சொல்லுகிறார்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, சொல்கிறார்கள் என்று சொல்லக்கூடாது. பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். 'என்னால் அந்த ஆதாரத்தைக் காட்டமுடியாவிட்டால் எந்த நிபந்தனைக்கும் கட்டுப்படுகிறேன்' என்று சொல்லி பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும். (குறுக்கீடு)** எல்லாம் அங்கே தான். ** என்பது இங்கே யாரும் வைத்துக்கொள்வது கிடையாது. சிவசங்கரன் யாருக்கு ** இதுவரையில் சொல்லிக் கொண்டிருந்தீர்கள் கதை. சரியானக் கதைதான் சொல்லிக் கொண்டிருந்தீர்கள். தலைவர் அவர்களே, அவர் சொன்ன கதையை நான் ஏற்றுக்கொள்கிறேன். முதலில் எஸ்ஸார்-ஐக் கூப்பிட்டுப் பேசினோம். மெர்க்கன்டைல் வங்கியை அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான் விற்றார்கள். எஸ்ஸார் கிட்டே 135 கோடி ரூபாய்க்கு நாடார் சமுதாயத்தைச் சேர்ந்த பெருமக்கள் சில பேர்தான் விற்றார்கள். விற்ற பிறகு அதை வாங்க வேண்டும் என்ற முயற்சியிலே பெரியவர் ராமச்சந்திர ஆதித்தனார் ஈடுபட்டார் என்பது உண்மை. அவரையும் வைத்துக் கொண்டு, நான், அமைச்சர் வீராசாமி மற்றும் எஸ்ஸார் நிறுவனத்தினுடைய அதிபர் எல்லோரும் உட்கார்ந்து பேசினோம். 1997 டிசம்பர் 31ஆம் தேதிக்குள் அந்தப் பணத்தை, 100 கோடி ரூபாயை வசூலிப்பது, பிறகு என்னிடத்திலே உட்கார்ந்து பேசுவது, எஸ்ஸார் கூறியது 135 கோடி; அது 100 கோடியா, 135 கோடியா அல்லது அதற்கிடையிலே உள்ளதா, அந்தத் தொகையை நான் முடிவாகச் சொல்வது, அதை இருவரும் ஏற்றுக் கொள்வது என்று ஒரு எளிதான ஒப்பந்தம். இங்கே படித்துக் காட்டினாரே. அது கையெழுத்துப் போடாமல் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம். இரு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



சாராரும் கையெழுத்துப் போடவில்லை. ராமச்சந்திர ஆதித்தனும் கையெழுத்துப் போடவில்லை. எஸ்ஸாரும் அதில் கையெழுத்துப் போடவில்லை. அப்படி ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது உண்மை. ஆனால் அதற்கிடையிலே அவர் வசூலித்துக் கொண்டிருக்கும்போதே எஸ்ஸார் அதை சிவசங்கரனுக்கு விற்றுவிட்டார். அதற்குப் பிறகு யாரிடத்திலே அதைப்பற்றிப் பேசுவது என்பதுதான் பிரச்சினையாகிவிட்டது. என்ன செய்ய முடியும்? தாமரைக்கனியே அதற்கு ஒரு யோசனை சொல்லட்டும். அவர் ஒப்பந்தத்தை மீறி விற்றுவிட்டார் என்றால் அவர் மீது வழக்குப் போட முடியுமா? அதற்கு ஏதாவது கையெழுத்து போட்ட ஒப்பந்தம் இருக்கிறதா? இது ஒரு மரியாதையாக, கௌரவமாகப் போட்டுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தம்தான். அதை மீறி நடக்கும்போது எஸ்ஸார் மீது என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்பதைத் தெரிவிக்க வேண்டும். அல்லது சிவசங்கரன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர், அவரிடத்திலே வாங்கியிருக்கிறார். 'நான் அவரிடத்திலே வாங்கியிருக்கிறேன். எனக்கு 135 கோடி ரூபாய் செலவாகியிருக்கிறது. அதைக் கொடுங்கள்' என்று அவர் சொல்கிறார். இந்தப் பிரச்சினையில் அரசாங்கம் என்ன செய்ய முடியும்? இப்போதும் அரசு இந்தப் பிரச்சினையிலே தன்னால் முடிந்ததைச் செய்வதாகத்தான் உறுதி அளித்திருக்கிறது. முடிந்ததை நாங்கள் செய்வோம். முடித்தே தீருவோம் என்று சொல்ல இயலவில்லை. எடுக்கப்படுகிற எல்லா முயற்சிகளுக்கும் அரசு துணையாக இருக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறோம். அதற்கிடையில் ஏதோ ** சிவசங்கரன் ** என்று கூறுவது அப்பட்டமான, உண்மைக்கு மாறான ஒரு தகவல். அதை மீண்டும் தாமரைக்கனி இங்கே வலியுறுத்துவாரேயானால் அதற்கு அவர் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று சொன்னால் அதை அவைக் குறிப்பிலே இருக்கவிடலாம். இல்லாவிட்டால் அதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி அவர்களுக்கு நான் ஒரு கருத்தைச் சொல்கிறேன். நான் பேரவைத் தலைவர், அரசியல் கருத்துச் சொல்ல முடியாது. ஆனால், வழக்கறிஞர். தனியார்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2 பேருக்குள்ளே இருக்கிற ஒரு பிரச்சினைக்கு அரசாங்கம் தன்னுடைய நல்ல எண்ணத்தைப் பயன்படுத்தலாமேயொழிய, அதிகாரத்தைப் பயன்படுத்த முடியாது. ஆகவே, முதலமைச்சர் அவர்கள் இரண்டு பேர்களுக்குள்ள பிரச்சினைக்கு, ஒரு சமுதாயத்தை, தமிழ்நாட்டில் வாழ்கின்ற ஒரு முக்கியச் சமுதாயத்தைப் பாதிக்கும் என்ற அளவில் தலைமை தாங்கி பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். அதை வெற்றிகரமாக முடித்துக் கொடுங்கள் என்று நீங்கள் சொல்லலாமே ஒழிய, அதிலே ** என்று பேசுவது பிரயோஜனம் இல்லாதது. சரி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) அவர் என்ன பேசுகிறார் என்று கேட்ட பிறகு முடிவு எடுக்கிறேன்.

முற்பகல் 11-35

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சருக்கு முன்னால் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. அதற்கெல்லாம் கையொப்பம் இல்லாமல் Gentlemen Agreement மாதிரி பேசப்படுகிறது. அந்தப் பேச்சு வார்த்தை நடக்கும்போது மத்திய மந்திரி முரசொலி மாறன் கிடையாது. ஏன் அவர் தலையிடுகிறார்? நீங்கள் வேறு Bank ஆரம்பிப்பதற்கு நான் பரிந்துரை செய்கிறேன். இதை சிவசங்கரனுக்கே விட்டுக் கொடுத்து விடுங்கள் என்று அந்த நாடார் சங்கத் தலைவர்களிடம் அவர் சொன்னாரா, இல்லையா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இட்டுக்கட்டிப் பேசப்படுகிறது. சில பத்திரிகைகளிலே இதுபோன்ற சில செய்திகள் வெளியிடப்பட்டன உண்மைதான். நடந்தது என்னவென்றால், அன்றையதினம் முதலமைச்சர் என்கின்ற முறையில் சில தொழிற்சாலைப் பிரச்சினைகளைப் பற்றிப் பேச முரசொலி மாறனிடத்திலே நேரம் குறிப்பிடப்பட்டிருந்தது. பகல் 1½ மணிக்கு முரசொலி மாறன், மத்திய தொழில் அமைச்சர் என்னைச் சந்திப்பதற்கு நேரம் குறிப்பிடப்பட்டிருந்தது. நாங்கள் 12 அல்லது 11½ மணிக்கு இந்தப் பிரச்சினை பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது கிட்டத்திட்ட இரண்டு மணிகூடக் கடந்து விட்டது. அப்போது,

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



முரசொலி மாறன் வந்து காத்திருக்கிறார் என்று சொன்னார்கள். பரவாயில்லை. இந்தப் பிரச்சினைதானே, அதில் கலந்து கொள்ளலாம் என்று உள்ளேயே வந்து அமரச் சொன்னேன். அவர் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார். அப்போது சிவசங்கரன், அதிகப்படியான தொகையை, 185 கோடி ரூபாய் தரப்பட வேண்டுமென்று கட்டாயப்படுத்திச் சொன்னபோது, முரசொலி மாறன் சொன்ன வார்த்தை, சிவசங்கரன் மீது கோபமாகச் சொன்ன வார்த்தை, 'இவரிடத்திலே பணத்தைப்பற்றி பேசி 185 கோடி ரூபாய் கொடுப்பதைவிட நீங்கள் வசூலித்திருக்கிற 100 கோடி ரூபாய்க்கு நாமே ஒரு பாங்கை ஆரம்பித்துவிடலாம்' என்று சிவசங்கரன் மீது கோபமாகச் சொன்ன வார்த்தையே தவிர, வேறு விகாரமாக அல்லது விரசமாகச் சொல்லப்பட்ட வார்த்தைகள் அல்ல. சிவசங்கரன் மீது கோபித்துக் கொண்டு, இவ்வளவு ரூபாய் கேட்பதற்கு நாங்களே ஒரு பாங்க் ஆரம்பித்துவிடலாம் என்றுதான் அவர் சொன்னார். இது ஒன்றும் பெரிய குற்றம் அல்ல. அதற்காக அவர் வரவும் இல்லை. அவர் குறித்த நேரத்திற்கு அரசுப் பிரச்சினைகளைப் பற்றிப் பேச, தொழில் பிரச்சினைகளைப் பற்றி பேச வந்தார். அவர் அப்போது அங்கே அமர்ந்திருந்தார். அதைத் தவிர, அதற்கும் அவருக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்திலே, சிவகாசி, விருதுநகர், கோவில்பட்டி, ராஜபாளையம் போன்ற இடங்களுக்கு வந்து, தேர்தல் பிரச்சாரத்திற்காக பொதுக்கூட்டங்களில் பேசியபோது, 'நான் சாவதற்குள்ளாக அந்த வங்கியை மீட்டு நாடார் சமுதாய மக்கள் மத்தியில் கொடுப்பேன்' என்று சொல்லி, அது பத்திரிகைகளில் செய்தியாக வந்திருக்கிறது அல்லவா? தேர்தல் நேரத்தில் முதலமைச்சர் அவர்களே இவ்வாறு சொல்லியிருக்கிறார்கள். அது குறித்து பத்திரிகைகளிலே போட்டிருக்கிறார்கள். நான் உயிரோடு இருக்கிற காலத்திற்குள் அந்த வங்கியை மீட்டு இந்தச் சமுதாய மக்களிடம் கொடுப்பேன் என்று சொல்லி, அது பத்திரிகைகளில் செய்தியாக வந்திருக்கிறது அல்லவா? அதற்கு என்ன செய்யப்போகிறீர்கள்?

[1998 மார்ச் 21

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எல்லா முயற்சிகளுக்கும் அரசு ஒத்துழைப்பு தரும் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறேன். நானே பொறுப்பேற்றுக்கொண்டு மீட்டுத் தருவேன் என்று சொல்லவில்லை. மீட்டுத் தருவதிலே—தாங்கள் குறிப்பிட்டதைப்போல, ஒரு நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே அரசும் உதவிகரமாக இருக்கும், ஒத்துழைக்கும் என்றுதான் உறுதி அளிக்கப்பட்டிருக்கிறதே அல்லாமல் வேறு அல்ல. அவர் பிரச்சினையை விட்டுவிட்டு வேறு எங்கோ போய்க் கொண்டிருக்கிறார். தாங்கள் இதற்கு மேலும் அதை அனுமதிக்க மாட்டீர்கள் என்று கருதுகிறேன். ** சிவசங்கரன் ** என்று சொன்ன அதற்கு அவர் பொறுப்பேற்றுக் கொள்கிறாரா என்பதுதான் நான் நேரடியாக விடுக்கும் கேள்வி. அதற்குப் பதில் சொல்லிவிட்டு அவர் அடுத்த வார்த்தைக்குச் செல்லலாம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பத்திரிகையில் வந்த செய்தி. அந்தச் சமுதாயத் தலைவர்கள், பெருமக்கள், அந்தச் சமுதாய மக்கள் மத்தியில் உள்ள பிரச்சினை இது. ஏற்கெனவே சிவசங்கரனும் அருமைக்குரிய பெரியவர் முரசொலி மாறனும் பல தொழில்களைக் கூட்டாகச் செய்கிறார்கள். இதுவும் ஒரு கூட்டுத் தொழில் என்று அல்லவா அவர்கள் நினைக்கிறார்கள் ?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** எந்தத் தொழிலை கூட்டாகச் செய்கிறார்கள் என்று சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரு பிரச்சினைக்கே, மக்கள் மத்தியில் பேசுகிறார்கள் என்று சொல்லிவிட்டு, பிறகு ஆதாரம் இல்லாமல் அதை 10 பிரச்சினைகளாக ஆக்காதீர்கள். நீங்கள் ** என்று சொன்னதற்குப் பொறுப்பேற்றுக் கொள்கிறீர்களா என்று முதலமைச்சர் கேட்கிறார். உண்டா, இல்லையா என்று சொல்லுங்கள். அதை விட்டுவிட்டு, கூட்டாகச் செய்கிறார்கள் என்றால் எப்படி ?

**திரு. இரா. தாமரைக்கனி:** நான் சொல்கிறேன். பொதுமக்கள் பெயரில் சொல்கிறேன். நீங்கள் இல்லை என்று சொல்லிவிட்டீர்கள். இல்லை என்றால் விட்டுவிடுங்கள். அதை எதற்காக சபைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்?





1998 மார்ச் 21]

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமரைக்கனிக்குச் சொல்கிறேன். நன்கு சுமுகமாகத்தான் பேசிக் கொண்டிருக்கின்றோம், அதனாலே சொல்கின்றேன். ஒரு மரபு தமிழ்நாடு சட்டமன்றத்திலே இருக்கிறது. அது என்னவென்றால் ஒரு உறுப்பினர் குற்றச்சாட்டுச் சொல்கிறார்—முதலமைச்சரே வேண்டாம்—குற்றஞ்சாட்டப்பட்ட இன்னோர் உறுப்பினர் அது இல்லையென்று சொன்னால் "நீங்கள் இல்லையென்று சொன்னால் நான் ஏற்றுக் கொள்கிறேன்", 'நான் திரும்பப் பெறுகிறேன்' என்று சொல்வதுதான் மரபு. வங்கியை நீங்கள், எப்படியாவது மீட்டுத் தாருங்கள் என்கின்ற கருத்தை நான்கு தடவை வலியுறுத்திச் சொல்லுங்கள். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் ** கிடையாது என்று சொன்ன பிறகு, நான் அந்தக் கருத்தைத் திரும்பப் பெறுகிறேன் என்று நீங்கள் சொல்ல வேண்டும். அல்லது நான் அதை அவைக்குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டிய அவசியத்தை எனக்கு ஏற்படுத்தாதீர்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் 'கிடையாது' என்று சொல்கிறார்கள். அது நாட்டு மக்களுக்குத்தான் தெரியும். அதனால் நான் சொன்னதைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். (கூச்சல்) இல்லை, அந்தப் பகுதியிலுள்ள பொது மக்களுக்குத் தெரியும். அவர்களுக்கும் தெரியும்...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இப்படியே சொல்லிக்கொண்டு போனால் இந்தத் தரப்பிலேகூட, தாமரைக்கனி கூட எஸ்ஸாருக்கு ** என்று யூகமாகச் சொல்லப்படும். சொல்லிவிட்டு நாட்டு மக்கள் சொல்லிக்கொள்கிறார்கள், பத்திரிகையிலே வந்தது என்று சொல்லிவிட்டுப் போகலாம். அப்படிப்பட்ட கூற்றுகளை தாமரைக்கனி ஏற்றுக்கொள்வாரா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. சொன்னதைக் கண்ணியமாகத் 'திரும்பப் பெறுகிறேன்' என்று சொல்லுங்கள். 'இந்த

நாட்டு மக்களுக்கு உண்மை தெரியும். அதனாலே நான் திரும்பப் பெறுகிறேன், என்று சொல்வதில் என்ன இருக்கிறது? 'திரும்பப் பெறுகிறேன்' என்ற வார்த்தை மாத்திரம் இருக்கும் தொடர்ந்து பேசுங்கள், 25 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. இரா. தாமரைக்கனி:** ரிசர்வ் வங்கியிலேயிருந்து இந்த மாதிரி அந்த பாங்க்-ஐ எங்களுக்குச் சொந்தமாக்க வேண்டும், ஷேர்கள் எல்லாம் கொடுத்து வாங்கி இருக்கிறார்கள். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி திரும்பவும் வந்து.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது அதிகாரம் உங்களிடம் வந்துவிட்டதே, அதை நீங்களே எடுக்க வேண்டியதுதானே?

**திரு. இரா. தாமரைக்கனி:** ஐயா, அதைச் செய்ய மாட்டேன் என்று சொல்லிவிடுங்கள், நாங்கள் தேர்தலில் வாக்குறுதி கொடுத்திருக்கிறோம், வை.கோ. அவர்களும் கொடுத்து இருக்கிறார்கள் என்று சொல்லி உடனே முடிக்கிறோம். நீங்கள் முடியாது என்று சொல்லிவிடுங்கள். நான் அதைத்தானே கேட்க வந்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பிரச்சினையைப் புரிந்துகொள்ளாமல் பேசுகிறீர்கள். நான் உங்களுடைய அரசியலிலே தலையிடவில்லை. ரிசர்வ் வங்கி நிதி அமைச்சகத்திடம் வருகிறது. உங்களுடைய கட்சி சார்பிலே நிதியமைச்சகத்திலே ஒரு அமைச்சர் இருக்கிறார் என்ற அந்தக் கருத்தைத்தான் சொன்னேன். நீங்கள் பேசுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** இதுவரைக்கும் நீங்கள்தானே மத்தியிலும், மாநிலத்திலும் ஆண்டீர்கள். உங்கள் கட்சிக் கூட்டணியினர்தானே நிதியமைச்சராக இருந்தார்கள். பெரியவர் இராமச்சந்திர ஆதித்தன் கூட, டாக்டர் கலைஞரிடம் இந்த விஷயத்தில் தலையிடலாமா? வேண்டாமா? என்று கேட்டுவிட்டுத்தானே போனார்கள். ஏமாற்றிவிட்டீர்களே, கேட்டுப் போனதற்குப் பிறகு ** அதனாலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அ.தி.மு.க. சார்பிலே பேச வேண்டுமேயொழிய இராமச்சந்திர ஆதித்தன் சார்பிலே இங்கே பேசக்கூடாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** எல்லாக் கட்சித் தலைவர்களும், எல்லோரும் வந்து வாழ்த்தியிருக்கிறார்கள்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் மெதுவாகப் பேசுங்கள். இதை ஒன்றும் பெரிதுபடுத்திப் பேச வேண்டாம். அடுத்த கருத்தைப் பேசுங்கள். இன்னும் மூன்று நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்திலே சொன்ன மாதிரி அதை மீட்டுக் கொடுங்கள். இல்லையென்றால் எங்கள் பொதுச் செயலாளர் மூலம் மத்திய அரசைப் பயன்படுத்தி, அருமை அண்ணன் வை.கோ., பாராளுமன்ற எம்.பி.-ஆக இருக்கிறார்கள், அதைப் பயன்படுத்தி அந்தப் பாங்க்-ஐ அந்தச் சமுதாய மக்களுக்குக் கொடுக்க முடியும் என்பதை ஒத்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, முடியாது என்று சொன்ன பிறகுதான் அவர்கள் முடித்துக் கொடுக்க வேண்டுமென்பதில்லை. அவர்கள் இப்போதே முடித்துக் கொடுத்துவிட்டு என்னுடைய முடியாமையை நாட்டுக்கு வெளிப்படுத்தலாம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மிக்க நன்றி. அது மட்டுமல்லாமல் இந்த மொர்கன்டைல் பாங்க் மீட்பு சம்பந்தமாக சென்னையிலே ஊர்வலம் நடத்தினார்கள், அதிலே பல ரௌடிகள், விஷமிகள் புகுந்துதான் கலாட்டா பண்ணினார்கள் என்று மக்களுக்கு முதலமைச்சரே அறிவித்திருக்கிறார்கள். அதனாலே காயம்பட்டவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். 125 பேருக்கு மேல் வழக்கு போடப்பட்டிருக்கிறது. அந்த வழக்குகளை வாபஸ் வாங்குங்கள். காயம்பட்டவர்களுக்கு நீங்கள் நிதியுதவி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, நிச்சயமாக இந்த பாங்க்-ஐ எங்களுடைய புரட்சித் தலைவி மீட்பார்கள் என்பதை இந்தச் சட்டசபை மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) கத்துங்கள். எங்களுக்கு என்ன. நன்றாகக் கத்துங்கள். உங்களாலே முடியவில்லை. நாங்கள் செய்கிறோம். அதனாலே கத்துகிறீர்கள்.

[1998 மார்ச் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** உங்களைப பார்த்துக் கத்தாமல், என்னைப் பார்த்துக் கத்துகிறார்களே? ஏன் ? (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது நீங்கள் கற்றுக் கொடுத்தப் பழக்கம்தான்? பேசுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** குருநாதர் நீங்கள்தானே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான்தானா?

**திரு. இரா. தாமரைக்கனி:** பிறகு என்ன? நாம் எல்லாம் ஒரே பகுதிக்காரர்கள், தென்பகுதியைச் சேர்ந்தவர்கள்தானே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி நெருக்கடி வந்த பிறகு பேரவைத் தலைவரை ஒருமாதிரி காக்கா பிடிப்பதாகும்.

முற்பகல் 11-45

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் பேரவை விதி 110-ன்கீழ் ஒரு அறிக்கையைத் தந்தார்கள். அதிலே ஏதோ திரு. தம்பிதுரை கேஸ்கள் வாபஸ் வாங்குவதற்கு ஆய்வு பண்ணவேண்டுமென்று சொன்னதாகச் சொன்னார்கள். முன்னாள் முதலமைச்சராக அம்மா ஜெயலலிதா அவர்கள் இருந்தார்கள். அவர்கள் ஆட்சியிலே ஏதோ நிர்வாகச் சீர்கேடு, ஊழல் நடந்ததாகச் சொல்லி இங்கே வந்து ஒரு குற்றச்சாட்டைக் கூறினார்கள். குற்றச்சாட்டைச் சாட்டினார்கள் என்றால் விசாரணைக் கமிஷன் போட வேண்டும். பிறகு அதிலே குற்றம் இருந்தால் நீங்கள் வழக்குத் தொடரலாம். ஆனால், உங்களுடைய லஞ்ச ஒழிப்புத் துறை போலீசை வைத்து நீங்களே குற்றமாக்கி ஜோடித்து, நீங்கள் வழக்கைத் தொடர்ந்து, உயர் நீதிமன்றத்திலே அப்படிச் செய்திருக்கிறது, சுப்ரீம் கோர்ட்டிலே இந்தமாதிரி சொல்லியிருக்கிறது என்று சொல்லி அரசியல் காழ்ப்புணர்ச்சியிலே நீங்கள் கேஸ்கள் போட்டு இருக்கிறீர்கள். அதை நாங்கள் ஆய்வு பண்ணுவோம் என்று மத்திய சட்ட அமைச்சர் திரு. தம்பிதுரை அவர்கள் விமான நிலையத்தில் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி கொடுக்கும்போது சொல்லியிருக்கிறார்கள். நீங்களும் வெளியிலே பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுத்திருக்கலாம். அதைப்போலத்தான் இதுவும். அரசாங்கச் செலவில் எவ்வளவோ பணிகள் நடக்கும்.



1998 மார்ச் 21] [திரு. இரா. தாமரைக்கனி]

அதிலே எவ்வளவோ ரூபாய் எல்லாம் செலவிடப்படும். அதற்கெல்லாம் இங்கே நீங்கள் வந்து பதில் சொல்லுகிறீர்கள். ஆகவே, அரசியல் காழ்ப்புணர்ச்சிக்காகத்தான் இந்த வழக்கு போடப்பட்டுள்ளது. அதை ஆய்வு செய்வேன் என்றுதான் அவர் சொல்லியிருக்கிறார். இதிலே தவறு ஒன்றும் இல்லை. இதை ஒரு குற்றச்சாட்டு மாதிரி சட்டசபையிலே, சட்ட அமைச்சர் அவர்கள் வாசித்து விட்டார்கள். அதனால், அந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வு செய்வேன் என்று மத்திய அமைச்சர் சொன்னதில் தவறு ஒன்றும் இல்லை என்று இந்த நேரத்திலே கூறிக்கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of Order ஒன்றும் கிடையாது. உங்களை நான் பேச அனுமதிக்கவில்லை. உட்காருங்கள். திரு. முகம்மது இஸ்மாயில், நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் புதிய ஆளுநராகப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் விவாதத்தில், 11-வது சட்டமன்றப் பேரவையின் 5-வது கூட்டத் தொடரில் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நான் சார்ந்துள்ள இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பாக நன்றியையும் நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. கு. மனோகரன் தலைமை)*

உள்ளதைச் சொல்வோம், சொன்னதைச் செய்வோம், செய்ததைச் சொல்லிக் காட்டுவோம் என்ற தாரக மந்திரத்திற்குச் சொந்தக்காரராக விளங்கும் தமிழக அரசு, பொதுமக்களுக்கு அவசியமான உணவு, உடை, உறையுள், குடிநீர், சாலைகள், கல்வி, சுகாதாரம் மற்றும் மழைநீர் வடிகால், வாய்க்கால், ஏரிகள் தூர் வாருதல் போன்ற அடிப்படை வசதிகளை விரைந்து வழங்கும் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்து தமிழக அரசு செயலாற்றி வருகிறது என்று மேதகு ஆளுநர் அவர்கள் தமது உரையிலே பாராட்டி உள்ளார்கள்.

[திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்] [1998 மார்ச் 21

ஏட்டளவில், சொல்லளவில், வெறும் விளம்பரத்திற்கு மட்டும் திட்டங்களை அறிவித்துவிட்டு, அவற்றைப் பல ஆண்டுகளாகியும் செயல்படுத்தாமல் இருப்பதைத் தவிர்த்து, கடந்த இரண்டு ஆண்டுகளில் அரசின் பணி முடுக்கி விடப்பட்டு, மக்களுக்கு உரிய நேரத்தில் பயன்படும் நல்ல பல திட்டங்களை அறிவித்து செயலாற்றி வருகின்ற அரசுதான் தமிழக அரசு. அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சமத்துவபுரம், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கிய ரூபாய் 25 இலட்சம், இப்படிப் பல திட்டங்களை அறிவித்து, நகர, கிராம மக்கள் மத்தியில், பணிகளை வெற்றிகரமாகச் செய்து, நல்ல முறையில் செயலாற்றி வருகிறது.

எங்கோ, யாரோ சில சதிகாரர்கள், சண்டாளர்கள் ஏற்படுத்திய வெடிகுண்டுக் கலாச்சாரம் தேர்தல் நேரத்தில் ஏற்பட்டு அமைதிப் பூங்காவான தமிழகத்தில் வாழும் தமிழ்ச் சமுதாய மக்கள், இந்து, கிறிஸ்து, முஸ்லீம் என்று பாராமல் அனைவரும் ஒன்றுபட்ட சமுதாயத்தவர்களாக, அண்ணன் தம்பிகளாக, மாமன் மச்சான்களாக வாழ்ந்து வந்த தமிழகத்தினை இரத்தக் காடாக ஆக்கத் திட்டமிட்டு சதி வேலையில் ஈடுபட்டு விட்டனர்.

யாரோ ஓரிருவர் செய்கிற தவறால், பள்ளிவாசல்களின் தலைமை நிர்வாகிகள், சங்கெமுமிய ஆலிம் உலமா பெருமக்கள், பேஸ் இமாம்கள், ஹஜரத்மார்கள், சாதாரண அப்பாவி மக்கள், வியாபாரிகள் அல்லல்பட்டு, அவதிக்குள்ளாகி, இன்று இஸ்லாமிய சமுதாயத்தைத் தலை குனிய வேண்டிய நிலைக்கு ஆளாக்கியுள்ளார்கள். முஸ்லீம் மக்களின் கண்ணியம் காற்றிலே பறக்க விடப்பட்டிருக்கிறது. தலை நிமிர்ந்து வாழ வேண்டிய இஸ்லாமியர்கள் இன்று தலை குனிய வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்கள். தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும். அவர்கள் மேல் தயவு தாட்சண்யமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். அதில் அரசு கொஞ்சமும் தயக்கம் காட்டக்கூடாது.

அப்பாவி மக்களாக வாழ்ந்து வரும் இஸ்லாமிய மக்கள் குடியிருக்க வீடுகள் கொடுக்க அனுமதி மறுக்கிறார்கள். இருக்கும் வீடுகளைக் காலி செய்யச் சொல்கிறார்கள். அதேபோன்று வியாபாரம் செய்து வரும் தொழில் நிலையங்களைக் காலி செய்யச் சொல்லுகிறார்கள். சிலர், சொத்து, சுகங்களை எல்லாம் விட்டுவிட்டு, பஞ்சைகளாய், பராரிகளாய், ஊர் விட்டு ஊர் பெயர்ந்து சென்று கொண்டிருக்கிறார்கள். பெரும்



1998 மார்ச் 21] [திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்]

வசதியாய் வாழ்ந்தவர்கள் இன்று ஒரு வேளை உணவுக்கு வழியில்லாது பிச்சை எடுக்கின்ற நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு தனது சட்டத்தின் மூலம் முழு முயற்சியையும் மேற்கொண்டு செயலாற்ற உறுதுணையாய் நாங்கள் இருப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-50

அதேபோன்று, தீவிரவாத இயக்கங்கள் மட்டுமல்லாமல், இன்னும் மறைமுகமாகச் செயல்படுகின்ற மற்ற இயக்கங்களையும் காவல் துறை, உளவுத் துறை மூலம் கண்டறிந்து, மதவாத சக்திகள் தமிழ்நாட்டில் தலைதூக்காமல், தலையெடுக்காமல் சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றி, மக்கள் மத்தியில் சுமுகமாக வாழ வழி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தீவிரவாத இயக்கங்கள் தோன்றக் காரணமாக உள்ள மதவெறிப் பேச்சுக்களை மேடைகளில் பேசி முஸ்லீம், இஸ்லாமிய மக்களின் மனதினைப் புண்படுத்துகின்ற தீவரவாத இயக்கங்களைத் தடை செய்ய வேண்டும். அப்படிச் செய்வதால் எதிர்காலத்தில் தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழும் வாய்ப்புள்ளது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், காவல் துறை அதிகாரிகளும் துரித நடவடிக்கை மேற்கொண்டார்கள். காவல் துறை துரித நடவடிக்கை மேற்கொண்டதன் காரணமாக, நேற்றையதினம் தமிழக முதல்வர் அவர்கள் காவல் துறையைப் பாராட்டி 1000 ரூபாய் அன்பளிப்பு வழங்கியுள்ளார்கள். ஆகவே அதையும் பாராட்டி, இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நன்றியையும், பாராட்டுக்களையும், நல்வாழ்த்துக்களையும் காவல் துறைக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நல்லாட்சி நடத்தி வருகின்ற இவ்வரசைப் பாராட்டுவதோடு, எனது தொகுதிக்காக செய்யப்பட்ட சில நல்ல காரியங்களை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆட்சிப் பொறுப்பேற்ற 22 மாத காலத்திலே, எனது தொகுதிக்காக காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை ரூ. 1721 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கித் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நலிவுற்ற நிலையில், இழுத்து மூடப்பட்ட திருச்சிராப்பள்ளி கூட்டுறவு நூற்பாலையைத் திறப்பதற்கு 1 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கி, இன்று அந்த ஆலையைச் செயல்பட வைத்த மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி மக்களின் நலனுக்காக, கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் இரண்டினை அரவக்குறிச்சி தொகுதிக்கு ஒதுக்கிக் கொடுத்த மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, போக்குவரத்தைப் பொறுத்தவரையில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 2 பேருந்து வழித்தடங்களை வழங்கிய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்திலே நெஞ்சார்ந்த நன்றியையும், நல்வாழ்த்துக்களையும் எனது தொகுதி மக்களின் சார்பாகச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் நல்ல பல திட்டங்களை வருகின்ற பட்ஜெட் கூட்டத்தில் அறிவிக்க இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே, தொகுதி மக்கள் சார்பாக சில வேண்டுகோள்களை வைக்க விரும்புகிறேன். வியாபாரிகள் சங்கத்தின் சார்பாக முன் வைக்கப் பட்டிருக்கின்ற தொழில் வரி சம்பந்தப்பட்ட கோரிக்கையினை மறுபரிசீலனை செய்து, சீரமைத்துக் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று அடிப்படை வசதியாக இருக்கக்கூடிய போக்குவரத்துக்கு பஸ் வசதிகளை ஆங்காங்கே இருக்கக்கூடிய கிராமப்புற மக்களுக்கு ஏற்பாடு செய்து கொடுப்பதோடு, தற்போது உயர்த்தியிருக்கின்ற பஸ் கட்டணத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு மறு பரிசீலனை செய்து, பாமர மக்கள் பெறும் கூலியை அனுசரித்து பஸ் கட்டணத்தைக் குறைத்துக் கொடுக்க வேண்டுமாய் பணிவன்போடு இந்த மாமன்றத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கரூர் மாவட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஏழை எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை, ஏறத்தாழ 20000 வீட்டு மனைப் பட்டாக்களை வழங்கியிருக்கிறார்கள். பின்தங்கிய சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த இஸ்லாம் மக்களுக்கும்—பள்ளப்பட்டி, அரவக்குறிச்சி, ஜமீன்நத்தம், ஈசநத்தம், ஜமீன் ஆத்தூர் போன்ற பகுதிகளில் இருக்கக்கூடிய இஸ்லாம் மக்களுக்கும்—



வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களின் ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு தொழிற்சாலை என்ற முறையிலே மாண்புமிகு . தமிழக முதல்வர் அவர்கள் சென்ற கூட்டத் தொடரிலே அறிவித்திருக்கிறார்கள். வருகின்ற நிதியாண்டிலே என்னுடைய தொகுதிக்கு ஒரு தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை எடுத்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு காகித ஆலை, காற்றிலிருந்து மின்சாரம் தயாரிக்கிறது. அது கயத்தாறு பகுதியில் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது. பெருங்குடியில் செயல்பட்டு வருகிறது. அதேபோன்று, தமிழ்நாடு அரசு மின் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு, அரவக்குறிச்சி, தமிழ்நாடு காகித ஆலை நிறுவனம் (T.N.P.L.) நிறுவனத்தை-துணை கொண்டு மின் உற்பத்தி நிலையம் அமைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சத்துணவுப் பணியாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளை எடுத்து வைத்திருக்கிறார்கள். அவற்றைப் பரிசீலனை செய்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, நகராட்சி, உள்ளாட்சி, பேரூராட்சி போன்றவற்றில் பணியாற்றுகின்ற என்.எம்.ஆர். பஞ்சாயத்துப் பணியாளர்களை, நிரந்தர அலுவலர்களாக ஆக்கித்தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இறந்தவர்களுடைய குடும்பத்தில் உள்ள வாரிசுதாரர்களுக்கு வேலை என்ற அடிப்படையில் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

இறுதியாக, நேற்று 20-3-1998 அன்று வந்த செய்திகள். மத்திய சட்ட அமைச்சர், தம்பிதுரை அவர்கள் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் மீதான வழக்குகள் பற்றி ஆய்வு செய்வோம் என்றும் அவை பொய் வழக்குகள் என்றும் குறிப்பிட்டுள்ளார். மத்தியில் ஆட்சியில் பங்கு பெறுவது குறித்து, ஜெயலலிதா நடத்திய பேரம் இன்று வெட்டவெளிச்சத்திற்கு வந்துள்ளது. இந்தப் போக்கை இந்திய

[திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்] [1998 மார்ச் 21

தேசிய லீக் கட்சியின் சார்பாக வன்மையாகக் கண்டிக்கிறேன். கொல்லைப்புறமாக வந்து நீதித் துறையின் சுதந்திரத்தில் தலையிடுவதை விட்டுவிட்டு உண்மைக்கு, நீதிக்குக் கட்டுப்பட்டு அவர்கள் நடந்துகொள்ள வேண்டும். அவர்களின் எதேச்சாதிகாரம் இனிமேல் எடுபடாது என்பதை இந்த நேரத்திலே சொல்லி மேதகு ஆளுநர் உரையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பாக நன்றி கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி பேசும்பொழுது, ** என்ற வார்த்தையைப் பயன்படுத்தக் கூடாது என்று சொன்னேன். ஆகவே, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகின்றேன். திரு. பரிதி இளம்வழுதி.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீது நடைபெறுகின்ற விவாதத்திலே கலந்துகொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை இந்த அவையின் குறிப்பேட்டில் பதிய வைப்பதற்கான நல்லதொரு வாய்ப்பினை எனக்கு வழங்கியமைக்காக, தங்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக ஆளுநர் உரை என்பது ஒரு அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளையும் எதிர்காலத்தில் அரசாங்கம் நிறைவேற்ற உள்ள நல்ல பல திட்டங்களைப் பற்றியும் கோடிட்டுக் காட்டுவது ஆகும். அந்தவகையிலே இந்த அரசாங்கம் ஏற்கெனவே நிறைவேற்றியுள்ள சில சமூக நலத் திட்டங்களையும் எதிர்காலத்திலே நிறைவேற்ற இருக்கின்ற தொலைநோக்குத் திட்டங்களைப் பற்றியும் இந்த உரையிலே குறிப்பிட்டு இருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

இம்மாமன்றத்தின் உறுப்பினர்கள் இந்த ஆளுநர் உரையை வரவேற்றுப் பலரும், விமர்சித்துச் சிலரும், அவரவர் கண்ணோட்டத்தில் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள். உதாரணமாக, வர இருக்கின்ற அற்புதமான பட்ஜெட்டிற்கு ஒரு அருமையான நுழைகின்ற தோரண வாயில் என்று ஒருவர் கூறினார். அதேபோல

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1998 மார்ச் 21] [திரு. பரிதி இளம்வழுதி]

இன்னொருவர், வர இருக்கின்ற பட்ஜெட்டிற்கு கட்டியம் கூறுகின்ற வகையிலே, யானை வரும் பின்னே; மணியோசை வரும் முன்னே என்பதுபோல அமைந்து இருக்கிறது இந்த ஆளுநர் உரை என்று கூறினார். அதேபோல, இன்னொருவர் பேசுகின்றபோது, மழை பெய்வதற்கு முன்னே வீசுகின்ற குளிர் தென்றல் காற்று என்று இந்த ஆளுநர் உரையைப் பற்றிக் குறிப்பிடுகின்ற நேரத்திலே சொன்னார்.

என்னைப் பொறுத்தவரையில் இந்த ஆளுநர் உரையில் உள்ள சிறப்பு அம்சங்களை 1,2,3, என்று பட்டியலிட்டுச் சொல்ல வேண்டுமேயானால், திருவிளையாடல் திரைப்படத்திலே கே.பி. சுந்தராம்பாள் பாடுவது போல—

“ஒன்றானவன்; உருவில் இரண்டானவன்;
உருவான செந்தமிழில் மூன்றானவன்;
நன்றான வேதத்தில் நான்கானவன்;
நமச்சிவாய என ஐந்தானவன்;
இன்பச் சுவைகளுக்குள் ஆறானவன்;
இன்னிசைச் சுரங்களுக்குள் ஏழானவன்;
சித்திக்கும் பொருள்களில் எட்டானவன்;
தித்திக்கும் நவரச வித்தானவன்;
பத்தானவன் நெஞ்சில் பற்றானவன்;
பன்னிருகை வேலவனைப் பெற்றானவன்;
காற்றானவன், ஒளியானவன்;
நீரானவன், நெருப்பானவன்;
நேற்றாகி இன்றாகி என்றைக்கும் நிலையான
ஊற்றாகி நின்றானவன்;
ஆரூர் சோழனாகத் திகழ்ந்தானவன்....” (மேசையைத் தட்டும் ஒலி)

என்று என்னால் படித்துக் கொண்டே போக முடியும், ஆனாலும் கூட, நேரத்தின் அருமை கருதி, இன்னும் பல்வேறு...

[1998 மார்ச் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, பரிதி இளம்வழுதிக்கு என்னை அவன் இவன் என்று சொல்ல ஆசை ஏற்படுகிறது. அதை இப்படித் தீர்த்துக் கொண்டிருக்கிறார். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி (பேரவைத் துணைத் தலைவர்):** ஆண்டவனைத் துதிக்கின்றபோது, பக்தகோடிகள் அப்படிக் குறிப்பிடுவார்கள் என்று நீங்கள்தான் சொல்லி இருக்கிறீர்கள். (சிரிப்பு) அந்த அடிப்படையிலேதான் கூறினேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள், மிகவும் நல்லவர்; உண்மையை மறைத்துப் பேசத் தெரியாதவர்; ஆனாலும்கூட, தன்னுடைய தலைவரின் கோபத்திற்கு ஆளாகக் கூடாது என்று நினைப்பவர். அதனால் இந்த ஆளுநர் உரையைப் பற்றிக் குறிப்பிடுகின்றபோது, இதில் உப்பும் இல்லை; சப்பும் இல்லை என்று சொன்னார். அவர் உண்மையிலேயே, சொல்லாமல் சொல்லி இருக்கிறார். உப்பு அதிகமாக இருந்தால், சாப்பிட முடியாது; அதேபோல, சப்பென்று இருந்தாலும் சாப்பிட முடியாது. அதைத்தான் அவர் 'சொல்லாமல் சொல்லி இருக்கிறார், உப்பு அதிகமாகவும் இல்லை; சப்பென்றும் இல்லை; இரண்டுக்கும் இடையிலே, இதமான பதமான உணவாக (மேசையைத் தட்டும் ஒலி) அமைந்து இருக்கிறது என்று நம்முடைய நண்பர் மணி அவர்கள் இங்கே குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

அதேபோல, நான் இன்னொரு கருத்தையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இங்கே இந்த ஆளுநர் உரையிலே பல்வேறு முக்கிய செய்திகள் எல்லாம் குறிப்பிடப்பட்டு இருக்கின்றன. அதிலே 38-வது பத்தியிலே—

"செயல்படுத்துவதற்குப் பல ஆண்டுகள் ஆகக்கூடிய பெருமிதப் பகட்டான திட்டங்களை மேற்கொள்ளுவதற்கு முன்னுரிமை தருவதை விடுத்து, பொது மக்களுக்கு அவசியமான உணவு, உடை, உறையுள், குடிநீர், சாலைகள், கல்வி, சுகாதாரம் மற்றும் மழைநீர் வடிகால் போன்ற அடிப்படை வசதிகளை விரைந்து வழங்கும் திட்டங்களுக்கே முக்கியத்துவம் அளிப்பது என்ற தலையாய கொள்கை முடிவை இந்த



1998 மார்ச் 21] [திரு. பரிதி இளம்வழுதி]

அரசு எடுத்துள்ளது" என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இதிலிருந்தே இந்த அரசாங்கம் வெறும் அறிவிப்புகளினாலே வாய்ப் பந்தல் போடும் அரசாங்கம் அல்ல; சொன்னதைச் செய்கின்ற அரசு; செய்வதைச் சொல்கின்ற அரசு என்பதை நாம் எல்லோரும் புரிந்துகொள்ள முடியும்.

நண்பகல் 12-00

நான் ஒன்றிரண்டு உதாரணங்களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தினுடைய அரசு வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு, 22 மாதங்களில் அதிகமாக 15,576 கோடி ரூபாய்க்கு தொழில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. உலக வங்கி நிதி உதவியுடன் 1416 கோடி ரூபாய்க்கு சாலைகளையும் பாலங்களையும் மேம்படுத்தும் பணி, அதைப்போல கடல் தொழிலில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்க கடல் மேலாண்மை பயிற்சிக் கழகம், அதேபோல, 301 கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதிகள் செய்து கொடுப்பது, ஆதி திராவிடர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க கணினி, பிளாஸ்டிக் பயிற்சி தர ஏற்பாடு செய்திருப்பது, அதைப்போல, கிராமப்புற பள்ளி மாணவர்களுக்கு அனைத்துத் தொழில் கல்வியிலும் 15 சதவீத இட ஒதுக்கீடு அளிக்க முன்வந்திருப்பது, மூன்று லட்சம் பெண்கள் பயனடையக்கூடிய அளவுக்கு ஏழு மாவட்டங்களில் மகளிர் முன்னேற்றத் திட்டங்கள், இப்படி இன்னும் நான் அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஆனால் இவை எல்லாவற்றையும் விட நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், நாங்கள் எல்லாம் சாதாரண சாமானியக் குடும்பத்திலிருந்து வந்தவர்கள். நான் ஏழை எளிய மக்களின் உணர்வுகளை உணர்ந்தவன். நான் மட்டுமல்ல, இங்கே நேற்று பேசிய உறுப்பினர் கல்யாணம் சொன்னார், லெனின், கிரெம்ளின் அரண்மனையில் உப்பரிகையில் உலவிக் கொண்டிருந்தாலும், சைபீரியப் பாலைவனத்தில் உழுதுகொண்டு இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களைப் பற்றிய சிந்தனையிலேதான் இருப்பார் என்று. அதேபோல எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இந்தக் கோட்டையிலே இருந்தாலும்கூட ஏழை எளிய மக்களுடைய துன்பங்களை உணர்ந்தவர், சாமானிய மக்களுடைய துன்பங்களை உணர்ந்தவர் என்ற காரணத்தால், இன்றைக்குத் தமிழ்நாட்டிலே

பல்லாயிரக்கணக்கான, பல லட்சக்கணக்கான பெண்கள் வயதுக்கு வந்தபிறகும் வசதியின்மை காரணமாகத் திருமணம் ஆகமுடியாமல் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, அவர்களுடைய கஷ்டத்தை எல்லாம் உணர்ந்த மாண்புமிகு கலைஞர் அவர்கள் 1989 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம் என்ற பெயரால் ஒவ்வொரு பெண்ணின் திருமணத்திற்கும், ரூ. 5000 அள்ளி வழங்கினார்கள். ஆனால் அடுத்து வந்த அரசாங்கம் என்ன செய்தது? நீங்கள் 5000 தானே கொடுத்தீர்கள், நாங்கள் பத்தாயிரம் ரூபாயாகக் கொடுக்கிறோம் என்று கொடுத்தார்களா? இல்லையே. அந்தத் திட்டத்தை அப்படியே கிடப்பில் போட்டுவிட்டார்களே. ஆனால் மீண்டும் முதல்வராக நம்முடைய கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றபிறகு, ரூ.5000-த்தை ரூ. 10,000 ஆக உயர்த்திக் கொடுத்து, இன்றைக்கு அந்தத் திட்டத்தின்கீழ் 53,145 ஏழைப் பெண்களுடைய வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்திருக்கிறார்கள் என்றால், நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், இவர் பிள்ளை குட்டி பெற்றவர், குடும்பம் நடத்துகிறவர், தாலியுடைய அருமை பற்றித் தெரிந்தவர் என்ற காரணத்தாலேதான் இத்தகைய சமூக நலத் திட்டங்களை இப்போது வழங்கியிருக்கிறார்கள்.

நான் எண்ணிப் பார்க்கிறேன், ஒரு சில தாய்மார்கள் இருக்கிறார்கள். அபூர்வமாக ஒரு சிலருக்குத்தான் அந்த வாய்ப்புக் கிடைக்கும். ஏதோ ஒரு வளர்ப்புத் தாய் வருவார், ஏதோ ஒரு வளர்ப்பு மகனுக்கு 100 கோடி ரூபாய் செலவில் திருமணம் செய்வார்கள். ஆனால், அந்த வாய்ப்பு எல்லோருக்கும் கிடைக்குமா? கிடைக்காது. அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்கள் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திட்டத்தை இங்கே சிறப்பாகச் செயல்படுத்தி இருக்கிறார்கள்.

இன்னும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே இருந்த அரசாங்கம் பொறுப்பேற்று, ஏதாவது உருப்படியாகச் செய்து இருக்கிறார்களா? சொல்ல முடியுமா? இதே கோட்டை கொத்தளத்தில் அந்த அம்மையார் கொடியேற்றி வைத்திருக்கிறார் என்றால் அந்தக் கொடி ஏற்றுகிற அந்த உரிமையைக்கூட பெற்றுத் தந்தவர் இந்த முதல்வர் டாக்டர் கலைஞர்தானே? அதற்கு ஒரு நன்றியாவது சொன்னாரா? சொல்லவில்லை; அதை நாங்கள் எதிர்பார்க்கவும் இல்லை. ஆனால் அந்தக் கொடியேற்றுகிற நேரத்தில் என்ன



சொன்னார்? கச்சத் தீவை மீட்டே தீருவேன் என்று சொன்னார். மீட்டாரா? ஐந்து வருடங்களாக மீட்டுக் கொண்டே இருந்தார். கடைசியில் மீட்க முடியாமல் வீட்டுக்குப் போய்விட்டார்.

அதேபோல மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினை. காவிரியை மீட்பேன் என்று உண்ணாவிரதம் இருந்தார். ஆகா, அந்த உண்ணாவிரதம் உலக அளவிலே பாராட்டப்படுகின்ற ஒரு மகத்தான உண்ணாவிரதம் என்று சொன்னால் அது மிகையாகாது. எம்.ஜி.ஆர். ஒரு படத்தில் ஒரு பாட்டைப் பாடுவார், 'காற்று வாங்கப் போனேன், ஒரு கவிதை வாங்கி வந்தேன்' என்று. அந்த மாதிரி காற்று வாங்கப் போகிற இடத்தில் கட்டிலும் மெத்தையும் போட்டுக் கொண்டு, ஏ.சி. மிஷினையும் வைத்துக்கொண்டு, அடிக்கொரு தடவை வேனுக்குள் போய் வந்து, அவர்கள் இருந்த உண்ணாவிரதம் இருக்கிறதே, நல்ல வேளை, வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய மகாத்மா காந்தி உயிரோடு இருந்து இந்த அவலநிலையை எல்லாம் பார்க்கக் கூடாது என்பதற்காகத்தான், ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தைச் சேர்ந்த கோட்சே அவர்கள் அன்றைக்கே அவரை மேலுலகத்திற்கு அனுப்பி வைத்துவிட்டார் போல் இருக்கிறது. இல்லையென்றால், எண்ணிப் பாருங்கள், அன்றைக்கு இருந்த உண்ணாவிரதம் பற்றி.

**திரு. சி. வேலாயுதன்:** Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன Point of Order

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாத்மா காந்தி அவர்களைக் கொலை செய்தது ஆர்.எஸ்.எஸ். இல்லை என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு சொல்லி, அந்த இயக்கத்தின் மீதான தடையை நீக்கியிருக்கிறது. அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாது என்று கருதுகிறேன்.

**திரு. பரிதி இளம் வழுதி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்):** மகாத்மா காந்தி அவர்களுக்குத் துப்பாக்கிக் குண்டுகளைப் பரிசாகத் தந்தவர் யார் என்பது நாடு அறிந்த ஒன்று. இதிலே இப்போது விவாதம் ஒன்றும் தேவையில்லை. நான் சொல்ல வந்தது எல்லாம், அடிக்கொரு தடவை அந்த வேனுக்குள் போய் வந்தது பற்றித்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோட்சே என்பதையாவது ஒத்துக்கொள்கிறீர்களா ? அதுவும் இல்லை என்கிறீர்களா ?

**திரு. சி. வேலாயுதன் :** கோட்சேதான் என்பதை ஒத்துக்கொள்கிறேன். அதிலே ஆர்.எஸ்.எஸ். சம்பந்தப்படவில்லை என்பதை உச்ச நீதிமன்றமே தீர்ப்பாகச் சொல்லியிருக்கிறது. அதைத் திரும்பவும் இங்கே சொல்வது உச்ச நீதிமன்றத்தை அவமதிப்பதாக ஆகிவிடும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை விட்டுவிட்டு, அடுத்த பிரச்சினைக்குப் போங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்தாண்டுகளாக இந்த அவையிலே நான் பேசும்போதெல்லாம் அடிக்கடி வெளியேற்றப்பட வேண்டிய நிலை இருந்ததால் என் கருத்துக்களை எல்லாம் சொல்ல முடியாமல் தவித்தேன். இப்போது பேரவைத் துணைத் தலைவராக வந்து, இரண்டு ஆண்டுகளில் இன்றுதான் எனக்குப் பேச வாய்ப்பு கிடைத்திருக்கிறது. வேறு ஒன்றுமில்லை; அந்த வேனுக்குள் போய் வருகின்றபோது அவருடைய உடன்பிறவா சகோதரி*

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த பிரச்சினைக்குச் செல்லுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சிக்கலான அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, மத்தியிலே இருந்து திரு. வி.சி. சுக்லா என்ற மந்திரி வந்தார். அந்த மந்திரி இரண்டு Committee-களைப் போட்டார். ஒன்று Implementation Committee, இரண்டாவது Monitoring Committee. அதற்குப் பிறகு, அந்த அம்மா இரண்டு வருடம் ஆட்சியில் இருந்தார்கள். அந்த இரண்டு வருடத்தில், அந்த Committee என்ன ஆயிற்று என்று எனக்குத் தெரியவில்லை. எனக்கும் தெரியவில்லை. எம்பெருமான் முருகனுக்கும் தெரியாது, இப்போது பொதுப்பணித் துறை அமைச்சராக இருக்கிற, துரைமுருகனுக்கும் தெரியாது என்று நினைக்கிறேன். அந்த அளவுக்கு காவிரிப் பிரச்சினையிலே அன்றைக்கு

* உறுப்பினர் அவர்களால் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றதால் அகற்றப்பட்டது.



அவர்கள் ஒரு நாடகம் நடத்தினார்கள். இப்போது தேசிய செயல் திட்டத்திலே, காவிரி பிரச்சினைக்கு, ஒத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். என்ன ஒத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த அரசு பொறுப்பேற்று கிட்டத்தட்ட 22 மாதங்கள் ஆகின்றன. பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை என்று சொல்லி, ஐந்து முறை நடத்தியிருக்கிறீர்கள். இதுவரை நீங்கள் என்ன சாதித்திருக்கிறீர்கள் என்பதைக் கோடிட்டுக் காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பரிதி இளம்வழுதி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) :** நாங்கள் என்ன சாதித்து இருக்கிறோம் என்பது எல்லோருக்கும் தெரியும். முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது நிச்சயமாகச் சொல்வார். நீங்கள் என்ன சாதித்தீர்கள் என்பதை நான் சொல்கிறேன், கேளுங்கள், நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் இப்போது பேரவைத் துணைத் தலைவர் இல்லை, அவரைப் பார்த்து 'உட்காருங்கள்' என்று சொல்வதற்கு. அதற்குரிய பதில் முதலமைச்சர் உரையில் வரும். சுந்தரம் நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரேயொரு சின்ன விளக்கம். மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்களுக்குத் தெரியாது என்று கருதுகிறேன். காவிரியிலே நமக்கும், கர்நாடகத்திற்கும் பிரச்சினை ஏற்பட்டபோது, இந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரே வழி நடுவர் மன்றம்தான் என்று முதன்முதலாக உச்சரித்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். இப்படி ஒரு பிரச்சினை ஏற்பட்டபோது, காங்கிரஸ் ஆண்டபோதே, பல அணைகளைக் கட்டிக் கொண்டிருந்தபோது இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அன்றைக்கு முதல்வராக இருந்த திரு. வீரேந்திர பாட்டிலோடு முதன்முதலாக அன்றைக்கு பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்து பேசியவரும், இன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான். இந்த மாமன்றத்தில், மத்திய அரசைப் பார்த்து, நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியவரும்

[திரு. துரைமுருகன்] [1998 மார்ச் 21

இன்றைய முதலமைச்சர் அவர்கள்தான். திரு. வி.பி. சிங் அவர்கள் ஆண்டபோது, நடுவர் மன்றத்தைக் கொண்டு வந்தவரும் அவர்தான். கொண்டுவந்த நடுவர் மன்றத்திலே, இடைக்காலத் தீர்ப்பு வேண்டும் என்று அவரிடத்திலே வேண்டிக் கொண்டதும், இந்தக் கலைஞருடைய ஆட்சியில்தான். நடுவர் மன்றத்திற்கு இடைக்காலத் தீர்ப்பு வழங்குவதற்கு அதிகாரம் இல்லை என்று சொன்னவுடன், உச்சநீதிமன்றத்தில் நடுவர் மன்றத்திற்கு அந்த அதிகாரம் உண்டா, இல்லையா என்று கேட்டு, உண்டு என்ற தீர்ப்பை வழங்க வைத்துவிட்டு, அதற்குப் பிறகு எங்களை வெளியே அனுப்பினார்கள், பிறகு வந்தது இந்த ஆட்சிதான்.

அதற்குப் பிறகு, மறுபடியும் வேகமாக, இப்போதும், பலமுறை பேசிப் பார்த்து, முடியவில்லை என்கிறபோது, அந்த இடைக்காலத் தீர்ப்புக்கு ஒரு Legal Mandate வேண்டும் என்பதற்காக 'Inter-State River Water Disputes's Act' 6(ஏ)-ன்கீழ் ஒரு ஸ்கீம் வேண்டும், அதை மத்திய சர்க்கார் தர வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் வாதாடி, அந்த உச்ச நீதிமன்றத்தினுடைய வழக்கறிஞர் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று, நாங்கள் அப்படி ஒரு ஸ்கீமை தருகிறோம் அதை மாநிலங்களுக்கு அனுப்பி, Opinion-ஐப் பெறுகிறோம் என்று பெறவைத்ததும் இந்த முதலமைச்சர் அவர்கள்தான். மார்ச் மாதம் 30-ம் தேதி, அடுத்த வாய்தா உச்சநீதிமன்றத்தில் வருகிறது. வழக்கைத் தொடர்ந்து நடத்துவதும் இந்த முதலமைச்சர் அவர்கள்தான். எனவே, காவிரியில், தலைக்காவிரியில் ஆரம்பித்து, பூம்புகாரில் கலப்பதுபோல் இந்தப் பிரச்சினையிலே ஒன்றி நின்று. ஒவ்வொரு முன்னேற்றத்தையும், செய்து காட்டியவர், எங்களுடைய தலைவர், இந்த மாநிலத்தினுடைய முதல்வர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்ணாவிரதம் இருந்து நடுவர் மன்ற தீர்ப்பின்படி, 14 டி.எம்.சி. தண்ணீரை, காவிரித் தண்ணீரை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வாங்கிக் கொடுத்தார்கள்; இதைக் கொச்சைப்படுத்திப் பேசுகிறார்கள். ஆனால், 1½ வருடங்களாக ஆட்சியில் இருக்கிறீர்கள். உச்ச நீதிமன்றத்திலே, நடுவர்மன்றத் தீர்ப்புப்படிகூட, நீங்கள் ஒரு டி.எம்.சி. தண்ணீர் கூட வாங்க முடியவில்லையே! இந்த Court-ல் இருக்கிறது, அந்த Court-ல் இருக்கிறது, இடைக்காலத் தீர்ப்பு என்று வர்ணனை. கதை. வசனம்தான் இருக்கிறதே தவிர. தண்ணீரைப்



1998 மார்ச் 21] [திரு. இரா. தாமரைக்கனி]

பெறுவதற்கு நீங்கள் என்ன செய்து இருக்கிறீர்கள்? தண்ணீர் வந்து இருக்கிறதா நமக்கு?

பிற்பகல் 12-10

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இன்னமும் அவர் தெரிந்து பேசுகிறாரா, தெரியாமல் பேசுகிறாரா என்று தெரியவில்லை. முன்னாள் முதலமைச்சராக இருந்த அம்மையார் அவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர், அன்றைக்கு வைத்த கோரிக்கைகள் இரண்டு. ஒன்று Monitoring Committe அமைக்க வேண்டும், இரண்டாவது Implementation Committee அமைக்க வேண்டும் என்பதாகும். சுக்லா வந்தார், இரு Committee-களையும் அமைக்கிறேன், எழுந்திருங்கள் உண்ணாவிரதத்தைவிட்டு என்று சொன்னார். எழுந்து போய்விட்டார். ஆனால் அந்த அம்மையார் எந்த இரண்டு Committee-களைக் கேட்டார்களோ, அதிலே ஒரு Committee-யைக் கூட அந்த அம்மையார் ஆட்சியிலே இருக்கிற வரையிலும் பெறவில்லை என்பதை மட்டும் நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இடைக்காலத் தீர்ப்பில் 205 டி.எம்.சி. தண்ணீர் தர வேண்டும் என்று சொன்னதை, நாங்கள் வாங்கிக் கொண்டுதான் இருக்கிறோம். விவரம் வேண்டுமானால் தனியாகக்கூட விவாதிக்கலாம். இல்லை என்றால், தனியாக வேண்டுமானால்கூட விவரம் சொல்கிறேன். 205 டி.எம்.சி. தண்ணீரை நாங்கள் வாங்கிக் கொண்டுதான் இருக்கிறோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதி கொடுக்கவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சுந்தரம், நான் அனுமதி கொடுக்க வில்லை. உங்கள் கட்சித் தலைவர் பேசிவிட்டார். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்):** நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பு இடைக்காலத் தீர்ப்பு . . . . . .

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே. உண்ணாவிரதத்தைப் பற்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். நான் பேச அனுமதி கொடுக்கவில்லை.

D
V211, 31/4/98
NOE·401
218449.

**திரு. பரிதி இளம்வழுதி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்த சம்பவங்களை, பத்திரிகைகளில் வந்த செய்திகளைத்தான் நான் குறிப்பிடுகிறேனே தவிர, நான் இட்டுக்கட்டிச் சொல்லவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், உட்காருங்கள். முதலிலே ஒன்றைத் தெரிந்துகொள்ளுங்கள். நான் அனுமதிக்கவில்லை என்றால் உட்கார வேண்டும். நீங்கள் நின்று கொண்டு பேசக்கூடாது. (குறுக்கீடு) தீர்ப்பு உங்களுக்கு நன்றாக இருந்தால், நல்ல தலைவர் என்று சொல்வீர்கள். தீர்ப்பு வேறு மாதிரியாக இருந்தால், நான் ஒருதலைப்பட்சமாக நடக்கிறேன் என்று நீங்கள் சொல்வீர்கள். இப்போது உட்காருங்கள். நான் நேற்றைக்கே ஒரு கருத்தைச் சொன்னேன். இப்போது துணைத் தலைவர் அவர்களுக்கும் சொல்கிறேன். கொச்சையான வார்த்தைகளை முடிந்த வரையில் பயன்படுத்தாமல் பேசுவது எல்லோருக்கும் நல்லது.

**திரு. இரா. தாமரைக்கனி:** அதை அவைக்குறிப்பிலிருந்து எடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை நான் பரிசீலனை செய்கிறேன். நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் பரிதி இளம்வழுதி அவர்கள் பேசும்போது** என்று சொன்ன அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களாகத் திரும்பப்பெறுங்கள். அல்லது நான் அவைக்குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

**திரு. பரிதி இளம்வழுதி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, நான் குறிப்பிட்ட அந்த வார்த்தைகளை திரும்பப் பெற்றுக்கொள்கிறேன். எனக்கு அதில் ஆட்சேபணை இல்லை. ஆனால், அதேநேரத்திலே, நடுவர் மன்றத் தீர்ப்புதான் சரியான தீர்ப்பு என்று போராடிக்கொண்டிருக்கிற

---

**உறுப்பினர் அவர்களால் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றதால் அகற்றப்பெற்றது.



நேரத்திலே தேசிய செயல் திட்டத்தில், தேசிய நதி நீர்க்கொள்கைகள் வகுக்கப்பட்டபிறகு, அதன் அடிப்படையில்தான் காவிரிப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று ஒத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால், கீழே குப்புறத் தள்ளிய குதிரை குழியைப் பறித்ததைப் போல, எப்போது இந்த தேசிய நதி நீர் கொள்கை வகுப்பது, அதன்பிறகு, எப்போது பேச்சுவார்த்தை நடத்துவது, அதன்பிறகு, எப்போது காவிரிப் பிரச்சினையை முடிப்பது ? ஆகவே, இதிலிருந்து நாம் தெரிந்துகொள்வது, ** என்று இந்த நேரத்திலே நான் குற்றம் சாட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், கர்நாடகத்தின் குரலாகத்தான் இவர்கள் எதிரொலித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். இன்னும் குறிப்பாகச் சொல்லவேண்டுமானால்,' அவர்களுக்கு வேண்டிய வாழப்பாடி ராமமூர்த்தி, அவர்களுடைய பாஷையிலே சொல்லவேண்டுமானால், அவர்கள் ஊதுகுழலாகச் செயல்பட்டிருக்கிறார்கள் என்றுதான் நான் சொல்ல முடியும். ஏன் என்றால் தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவிலே கர சேவையை அனுமதிக்கவேண்டும் என்று ஆதரித்துப் பேசியபோது, இதே வாழப்பாடி ராமமூர்த்தி அவர்கள்தான், பாரதீய ஜனதாக் கட்சியின் ஊதுகுழல் ஜெயலலிதா என்று சொன்னார். ஆனால் அந்த ஊதுகுழலோடு இப்போது இந்த ஊதுகுழலும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு இருக்கிறது. அதுவும் யார் இந்த வாழப்பாடி, காவிரிப் பிரச்சினைக்காகத் தன்னுடைய பதவியை ராஜினாமா செய்தவர். அவரே இப்போது தேசிய நதி நீர்க் கொள்கை வகுக்கப்பட்ட பிறகு, அதன் அடிப்படையில் காவிரிப் பிரச்சினையத் தீர்த்துக் கொள்ளலாம் என்று ஒத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரும், தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுச் சென்ற ** என்று இந்த நேரத்திலே நான் குற்றம் சாட்டுகிறேன். (குறுக்கீடு)

**திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அமைச்சர் வாழப்பாடி ராமமூர்த்தி பற்றி இந்த நாடு அறியும். காவிரி நீர்ப் பிரச்சினைக்காக பதவியை ராஜினாமா செய்தவர். அதனால்தான் சொல்கிறேன். அத்தனை பேர்களும், **என்ற வார்த்தையை பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இன்னும் எம்.பி.க்கள் பதவிப் பிரமாணம்கூட எடுத்துக் கொள்ளவில்லை. இந்தப் பிரச்சினையை அவர்கள் எந்த முறையிலே அணுகுகிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். 5 ஆண்டுகாலம் ஐக்கிய முன்னணி அரசு இந்த நாட்டை ஆண்டது. (குறுக்கீடு) 1½ ஆண்டுக்காலம் ஐக்கிய முன்னணி அரசு இந்த நாட்டை ஆண்டது. (குறுக்கீடு) இந்த நாட்டைத்தான் சொல்கிறேன். இந்த நாட்டை ஆண்டது. இந்தக் காவிரிப் பிரச்சினைக்காக அவர்கள் என்ன செய்தார்கள் என்பதை முதல்வர் அவர்கள் விளக்க வேண்டும்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினை பற்றி ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிற காரணத்தாலும், உறுப்பினர்கள் சிலர் அதைப் பற்றிப் பேசியிருக்கிற நிலையிலும், இன்னும் பல கட்சிகளின் தலைவர்கள் எல்லாம் பேச இருக்கின்ற காரணத்தாலும், என்னுடைய பதிலுரையிலே அதைப்பற்றி விளக்கமாகப் பேசலாம் என்று இருந்தேன். ஆனால் நாளையதினம் பத்திரிகையிலே தவறான செய்திகள் வந்து விடக்கூடாது என்பதற்காக இந்தக் குறுக்கீடுகளுக்கு நான் இப்போதே பதில் சொல்ல வேண்டியவனாக இருக்கின்றேன். விளக்கமாக அல்ல. குறிப்பாக நான் சொல்ல விரும்புகின்றேன்.

இந்த 1½ ஆண்டுகாலத்திலே என்ன செய்தார்கள் என்று கேட்டிருக்கின்றார்கள். இங்கே மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் குறிப்பிட்டதைப்போல உச்ச நீதிமன்றத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்த வழக்கில் உச்ச நீதிமன்றம்தான் தமிழக அரசையும் கர்நாடக அரசையும் கேட்டுக் கொண்டது : மீண்டும் ஒரு முறை பேசுங்கள். பேச்சுவார்த்தையிலே சுமூக சூழ்நிலை ஏற்படாவிட்டால் பிறகு உச்ச நீதிமன்றத்திற்கு வாருங்கள் என்று அவர்கள் சொன்னார்கள். அதைப்பற்றிக்கூட ஆலோசித்தோம். உச்ச நீதிமன்றம் ஒரு தாக்கீதைத் தந்து அந்தக் கருத்தை நாங்கள் ஏற்காவிட்டால் உச்ச நீதிமன்றம், அரசு தன்னை மதிக்காமல் தன்னுடைய பேச்சைக் கேட்கவில்லை என்கின்ற ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டு விடும். அது நமக்கு நல்லதல்ல. அரசுக்கு நல்லதல்ல. தமிழகத்திற்கு நல்லதல்ல, என்பதற்காகத்தான் உச்ச நீதிமன்றத்தினுடைய சொற்படி பேசுவதற்கு நாம் தயாராக இருந்தோம். 2, 3 முறை





மீண்டும் கர்நாடக அரசோடு பேசினோம். அந்தப் பேச்சிலே பயன் ஏற்படவில்லை. அதை உச்ச நீதிமன்றத்திற்கு நாம் தெரிவித்தோம். அப்படித் தெரிவித்த காரணத்தால் நம் பக்கத்திலே நியாயம் இருப்பதை நாம் எடுத்துக்காட்டுகின்ற நிலை நமக்கு இருந்தது. பிறகு உச்ச நீதிமன்றத்திலே நாம் வாதாடியது, இதிலே மத்திய அரசு தலையிட்டு தன்னுடைய கருத்தைச் சொல்ல வேண்டும் என்பதாகும். ஆனால் ஐக்கிய முன்னணி அரசு என்ன செய்தது என்று இங்கே பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் கேட்டார். நான் அவருக்கு சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

ஐக்கிய முன்னணி அரசுதான் உச்ச நீதிமன்றத்திற்கு ஒரு Scheme-ஒரு திட்டத்தைக் கொடுத்திருக்கிறது. 'அந்தத் திட்டம் உச்ச நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்டவுடன் அந்தத் திட்டத்தைப் பற்றிய கருத்தை மாநில அரசுகள் தரவேண்டும் என்று - தமிழகத்திற்கு, கர்நாடகத்திற்கு, பாண்டிச்சேரிக்கு, கேரளத்திற்குச் சொல்லப்பட்டது. தமிழக அரசின் சார்பாக நம்முடைய கருத்தை வெளியிட்டிருக்கின்றோம்., தந்திருக்கின்றோம். ஏறத்தாழ பெரும்பகுதி மத்திய அரசு தந்துள்ள இந்தக் கருத்து நமக்கு ஏற்புடையது என்ற அளவிலே தந்திருக்கின்றோம்.

அதாவது ஒரு 'அத்தாரிட்டி' 'Authority' Cauvery Valley Authority என்ற அமைப்பை ஏற்படுத்தி நடுவர் மன்றத் தீர்ப்பை எப்படி அமல்படுத்த வேண்டும் என்பதை அந்த Authority தான், அந்த ஆணையம்தான் தீர்மானிக்கும் என்ற திட்டமானது அந்தத் திட்டம். அது நமக்கு எவ்வளவு ஏற்புடைய திட்டம் என்பதை யோசித்துப் பார்த்தால் புரிந்துகொள்ளலாம். மத்திய அரசு அப்படி ஒரு திட்டத்தைக் கொடுத்ததுகூட கர்நாடக அரசுக்கு மத்திய அரசு மீதும், ஐக்கிய முன்னணி அரசின் மீதும் சற்று கோபத்தை உண்டாக்கியது என்பது எல்லோருக்கும் தெரியும். கேரள அரசும் நம்மைப் போலவே இந்தத் திட்டத்தை ஆதரித்தது. பாண்டிச்சேரி அரசும் நம்மைப் போலவே இந்தத் திட்டத்தை ஆதரித்தது. கர்நாடக அரசு இதை ஆதரிக்காமல் Authority என்ற ஒன்று இருக்கக்கூடாது. Committee என்றுதான் இருக்க வேண்டும் என்று சொன்னது. அதை நாம் யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. மத்திய அரசும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. Authority என்றால், அதற்குள்ள வலிமைக்கும் Committee என்றால்

அதற்குள்ள வலிமைக்கும் உள்ள வேறுபாடு, முரண்பாடு தெரிந்த காரணத்தால்தான் Authority என்றுதான் இருக்க வேண்டும் என்று நாம் வலியுறுத்தினோம். இப்போதும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசும், ஐக்கிய முன்னணி அரசும் நம்முடைய கருத்துக்குத்தான் செவி சாய்த்தது. அந்தக் கருத்துதான் இன்றைக்கு உச்ச நீதிமன்றத்திலே இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் இந்த வழக்கும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எனவே இந்த அரசு என்ன செய்தது, தமிழக அரசு என்ன செய்தது, ஐக்கிய முன்னணி அரசு என்ன செய்தது என்று எழுப்பிய இந்த வினாவிற்கு இந்த விளக்கத்தை மாத்திரம் நான் தருகின்றேன்.

ஆக, ஒன்றை நம்முடைய பரிதி இளம்வழுதி அவர்களுடைய பேச்சின் மூலமாகத் தங்களுக்கு வேண்டுகோளாக விடுக்கின்றேன். ** என்று சொன்னாரே, அந்தச் சொற்றொடர் இடம் பெறாமல் இருப்பது நல்லது. ஏனென்றால், உள்ளபடியே யாராவது ** செய்தாலும்கூட ** என்று குறிப்பிடுவது நல்லதல்ல. ஆனால், அவர் குறிப்பிட்டதைப்போல இன்னும் அவர்கள் யாரும் முழுமையாகப் பொறுப்பு ஏற்கவில்லை. இந்தச் சூழ்நிலையில் நம்முடைய முன்னாள் முதலமைச்சர் காவிரிப் பிரச்சினையிலே ஒரு தீர்வு காண வேண்டும் என்று வைத்த நிபந்தனை வெளியிடப்பட்டுள்ள அந்தத் தேசிய திட்டத்திலே இடம் பெற்றிருக்கிறதா என்றால் இடம் பெறவில்லை. என்ன இடம் பெற்றிருக்கிறது? கர்நாடக முதலமைச்சர் படேல் எதை வலியுறுத்தியிருக்கிறாரோ அதுதான் இடம் பெற்றிருக்கிறது. படேல் எதை வலியுறுத்தி வருகிறார்? அவர் வலியுறுத்தி வருவது தேசிய நீர்க் கொள்கை வகுக்கப்பட்ட பிறகு இதைப்பற்றிப் பேசலாம் என்கிறார். இப்போது நம்மிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்ற அந்தத் தேசிய திட்டத்தில் என்ன இடம் பெற்றிருக்கிறது என்றால், தேசிய நீர்க் கொள்கை ஒன்று வகுக்கப்படும். அதற்குப் பிறகு அவை நடைமுறைப்படுத்தப்படும் என்று இருக்கிறது. நான் அதிகமாக இந்தப் பிரச்சினையிலே உணர்ச்சியைத் தூண்டும் முறையிலே என்றைக்கும் பேசுகின்றவன் அல்ல.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பிற்பகல் 12-20

நேற்றைக்குக்கூட நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் கேரள மாநிலத்தைப் பற்றிப் பேசும்போது கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார். இது இரண்டு அரசுகளுக்குள்ளே உள்ள பிரச்சினை அல்ல. இரண்டு மாநிலங்களுக்கிடையே உள்ள மக்களுடைய பிரச்சினை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. உணர்ச்சி வசப்பட்டு நாம் பேசுகிற நேரத்தில், தமிழ்நாட்டு மக்களையும் உணர்ச்சிக்கு ஆளாக்கி, கேரளாவிலோ அல்லது கர்நாடகத்திலோ உள்ள மக்களும் உணர்ச்சிக்கு ஆளானால், பாதிக்கப்படுகின்றவர்கள் பெரும்பாலும் நம்மைப் பொறுத்தவரையில் தமிழர்கள்தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஏனென்றால், இங்கு இருக்கின்ற கேரளத்தைச் சார்ந்தவர்கள் குறைவு. அதேபோல, கர்நாடகத்தைச் சார்ந்தவர்கள் குறைவு. ஆனால், கர்நாடக மாநிலத்திலோ, கேரள மாநிலத்திலோ தமிழர்கள் ஏராளமாக இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட உணர்ச்சி வசப்பட்ட பேச்சுக்களினால் விளைவுகள் விபரீதமாகின்ற நேரத்தில் பெரும்பகுதி பாதிக்கப்படுவது தமிழர்களாகத்தான் இருப்போம். யாருக்கு அதிக பாதிப்பு என்பதற்காக அல்ல. இரு மாநில மக்களுக்கிடையே இருக்கிற சுமுகமான சூழ்நிலை இதுபோன்ற பிரச்சினைகளிலே பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. பெரும்பாலும் தமிழகத்திலுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளுடைய கருத்தும் அந்தக் கருத்துதான். அந்தக் கருத்தோடுதான் நானும் ஒத்துப்போகின்றேன். எனவே அந்த நேரத்து ஆதாயங்களுக்காக, தேர்தல் நேரத்து லாபங்களுக்காக, இதுபோன்ற உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு, அதனுடைய விளைவுகள் விபரீதமாகின்ற நேரத்தில் நாம் கவலைப்பட்டுக்கொண்டு இருக்க முடியாது என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே, இப்போது வெளியிடப்பட்டிருக்கின்ற பாரதீய ஜனதா கட்சியினுடைய அல்லது அந்தக் கூட்டணியினுடைய தேசியத் திட்டம், அதிலே இடம் பெற்றிருக்கின்ற நதி நீர்ப் பிரச்சினை காவிரிப் பிரச்சினைக்கு உதவக் கூடியதல்ல. காவிரிப் பிரச்சினைக்கு உதவக் கூடியது இன்றைக்கு உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு. அதை நடைமுறைப்படுத்துவதுதான்.

அதற்கான உறுதிப்பாடு அதிலே காட்டப்படவில்லை. படேலுடைய குரல்தான் அங்கே ஒலிக்கிறது. கருணாநிதியினுடைய குரல் அதிலே ஒலிக்கவில்லை. அதாவது தமிழகத்தினுடைய குரல் அதிலே ஒலிக்கப்படவில்லை என்பதை நான் மீண்டும், மீண்டும் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. பரிதி இளம்வழுதி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சருடைய விளக்கத்தை ஏற்று, இது தமிழகத்தினுடைய உயிர்நாடிப் பிரச்சினை, ஜீவாதாரப் பிரச்சினை, உணர்ச்சிகரமான பிரச்சினை, இதிலே நாம் பேசுகின்றபோது, பயன்படுத்துகின்ற வார்த்தையினால் பாதகமான சூழ்நிலை ஏதும் ஏற்பட்டுவிடக் கூடாது என்கின்ற அந்த எச்சரிக்கை உணர்வின் காரணமாக இத்தோடு இந்தப் பிரச்சினையை விட்டுவிடுகிறேன். எனக்குள்ள வருத்தம் எல்லாம் என்னவென்றால், ஊரை ஏமாற்றுவதற்காக நாடகம் போடுகிறார்கள் என்பதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் நேற்றைய தினம்கூடச் சொன்னேன், கருத்துக்கள் எவ்வளவு ஆழமாக இருந்தாலும் வார்த்தைகள் முறையாக இருக்க வேண்டுமென்று. அது எல்லா உறுப்பினர்களுக்கும் பொருந்தும். எல்லா உறுப்பினர்களைக் காட்டிலும் பேரவைத் துணைத் தலைவருக்கு அதிகம் பொருந்தும். காரணம், பெரும்பாலான நேரம் என்னைக்காட்டிலும் அவர்தான் இந்த இருக்கையில் இருக்கிறார். ஆகவே, முதலமைச்சர் அவர்கள் நமக்கெல்லாம் எடுத்துச் சொன்னதைப் போல அந்த வார்த்தைகளை அவைக்குறிப்பிலிருந்து நீக்குகின்றேன். இந்தப் பிரச்சினையை இத்தோடு முடித்துவிட்டு, மொத்தமாக உங்களுடைய பேச்சை இன்னும் 2 நிமிடங்களுக்குள்ளே முடிக்க வேண்டுமென்று சொல்கிறேன். (சிரிப்பு)

**திரு. பரிதி இளம்வழுதி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோருக்கும் நேரத்தைத் தாராளமாக வழங்குகின்றீர்கள். உங்களில் சரிபாதி நான். எனக்கும் அந்தக் கருணையைக் காட்டுங்கள் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, எனக்குள்ள வருத்தம் எல்லாம் என்னவென்றால் . . . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் 11.54-க்கு ஆரம்பித்தீர்கள். நான் இவ்வளவு நேரம் கொடுத்ததற்குக் காரணமே கடந்த காலத்தில் உங்களுக்கு மிகுந்த கஷ்டங்கள் ஏற்பட்டன. அதனாலே கொஞ்சம் நேரம் அனுமதி கொடுத்தேன். நீங்கள் இதற்குமேலே நேரம் எப்படிக் கேட்க முடியும்?

**திரு. பரிதி இளம்வழுதி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) :** அந்த அனுமதியைக் கொஞ்சம் நீட்டித்துக்கொள்ளுங்கள், வேறு ஒன்றும் அல்ல. எனக்குள்ள வருத்தம் எல்லாம் ஊரை ஏமாற்றுவதற்காக நாடகம் போடுகிறார்கள் என்பதுதான், வேறு ஒன்றும் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சீக்கிரம் பேசி முடியுங்கள். காவிரிப் பிரச்சினையை விட்டுவிட்டு, அடுத்த கருத்துக்கு வாருங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) :** இது அடுத்த கருத்துத்தான். காவிரிப் பிரச்சினையை இத்தோடு முடித்துவிட்டேன். எனக்கு இப்போது வருத்தம் என்ன என்றால், "இதிலே ஹெக்டே என்னைக் கிண்டல் பண்ணிவிட்டார். அவருக்கும், எனக்கும் சண்டை" என்று கூறி ஒரு மாயத் தோற்றத்தை ஊரை ஏமாற்றுவதற்காகத்தான் உருவாக்குகிறார்கள். இதைத் தமிழக மக்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் சொன்னேன். ஏனென்றால், பழி போடுவது, அபாண்டமாகப் பழி சொல்வதெல்லாம் அவர்களுக்குக் கைவந்தக் கலை. ஏற்கெனவேகூட ஆளுநராக இருந்த சென்னா ரெட்டி அவர்கள் என்னிடம் தகாத முறையில் நடந்துகொண்டார் என்று சொன்னவர்கள்தான். ஆனால், அடுத்து வளர்ப்பு மகன் திருமணத்திற்கு நேரிலே போய் அவருக்கு அழைப்பிதழ் கொடுத்தார்கள். அதேபோல், எம்.ஜி.ஆர்-க்கு மோரிலே விஷம் வைத்து அவரை ஜானகி அம்மாள் கொன்றுவிட்டார் என்று அபாண்டமாகப் பழி போட்டார்கள். ஆனால், அதன்பிறகு ஜானகி அம்மாளை நேரில் போய்ப் பார்த்தார்கள். இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன்? ஏன் இந்த ஈனத்தனமான அரசியல்? நியாயமாக நேர்மையாக நடந்து ஒரு நல்ல பெயர் எடுக்கக் கூடாதா? அவர்கள் மேல் உள்ள பாசத்தின் காரணமாக இதைக் கேட்கிறேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் பேச்சை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்):** தலைவர் அவர்களே, 13 கட்சிகள் சேர்ந்து ஆட்சி நடத்திய தேசிய முன்னணி அமைச்சரவையில் 2 பெரும் மாணிக்கங்கள் இடம் பெற்றிருந்தார்கள் என்று சொன்னால் மிகையாகாது. அந்த இரண்டு பெரும் மாணிக்கங்களும் தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழர்கள். அவர்களுடைய அறிவையும், அவர்களுடைய திறமையையும், அவர்களுடைய ஆற்றலையும், அகில உலகத்திலிருந்து வருகின்ற ஆங்கிலப் பத்திரிகைகள் அத்தனையும் எழுதிக் காட்டின. நம்முடைய தொழில் துறை அமைச்சர் அண்ணன் முரசொலி மாறன் அவர்களைப் பற்றி லண்டனிலிருந்து வருகின்ற பத்திரிகை எழுதிக் காட்டுகின்றபோது 'One of the best Industries Ministers in the World' என்று எழுதிக் காட்டினார்கள். அதை உறுதிப்படுத்துகின்றவகையிலே தமிழ்நாட்டிலே இன்றைக்கு ஃபோர்டு கார் நிறுவனம், அதைப்போலவே பில்கிங்டன் கண்ணாடித் தொழிற்சாலை, அதைப்போல, ஹுண்டாய் கார் நிறுவனம், அதைப்போல, ப. சிதம்பரம் அவர்களை எடுத்துக்கொள்வோமானால் V.D.I.S. திட்டத்தின் மூலம் இன்றைக்கு 10,000 கோடி ரூபாய்க்கு மேலே இந்திய அரசாங்கத்திற்கு வருவாயைத் தேடிக் கொடுத்திருக்கிறார்கள் இந்த இரண்டு பெரும் தமிழர்கள். ஆனால் இன்றைக்கு நிலைமை என்ன? Outlook என்ற ஒரு ஆங்கிலப் பத்திரிகை. அந்த ஆங்கிலப் பத்திரிகை தேர்தலுக்கு முன்பு ஒரு குழுவை நியமித்தது. அந்தக் குழுவிலே குல்தீப்சிங் என்கின்ற உச்ச நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி, மாதவ் கோர்ட்போலே என்கின்ற முன்னாள் மத்திய உள்துறை செயலாளர், மராட்டிய மாநில கவர்னராக இருந்த நம்முடைய பெரியவர் சி. சுப்பிரமணியம், அதைப்போலவே சிறந்த சமூக சேவகராக விளங்கிய இன்னொருவர் இவர்கள் எல்லாம் உறுப்பினர்களாக உள்ளார்கள். அந்தக் குழு என்ன செய்தது என்றால் நாடாளுமன்றத்திலே வேட்பாளராகப் போட்டியிட்ட 500 பேர்களை முக்கியமாகத் தேர்ந்தெடுத்து அவர்களுடைய சரித்திரம் என்ன என்பதை ஆராய்ச்சி செய்தார்கள். அப்படி ஆராய்ச்சி செய்ததிலே 72 பேர் கிரிமினல் குற்ற வழக்கிலே சம்பந்தப்பட்டவர்கள் தேர்தலிலே போட்டியிட்டார்கள் என்று ஒரு பட்டியலை வெளியிட்டார்கள்.



அந்தப் பட்டியலிலே தமிழ்நாட்டைச் சேர்ந்த 2 பேர் இடம்பெற்று இருந்தார்கள். தேர்தல் முடிந்த பிறகு மீண்டும் அந்தப் பத்திரிகை இன்னொரு பட்டியலை வெளியிட்டது. அந்த கிரிமினல் வழக்குகளிலே சம்பந்தப்பட்ட 72 பேர்களிலே 27 பேர்கள் வெற்றி பெற்றுவிட்டார்கள் என்று ஒரு பட்டியலை வெளியிட்டது. அந்தப் பட்டியலிலேகூட தமிழ்நாட்டைச் சேர்ந்த இருவர் இடம்பெற்றிருந்தார்கள். அதில் ஒருவர் மத்திய அமைச்சராகவே ஆகிவிட்டார். அவர் வேறு யாரும் அல்ல. நம்முடைய மரியாதைக்குரிய சேடப்பட்டி முத்தையா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆங்கிலப் பத்திரிகையிலே இதோ பாருங்கள் - "Twenty Seven Shades of Shame" அவமானச் சின்னங்கள் என்று எழுதிக் காட்டியிருக்கிறார்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே, சர்க்காரியா கமிஷன் முன்பு குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டவர்கள் எல்லாம் இங்கே ஆட்சி செய்துகொண்டிருக்கும்போது எந்தக் குற்றமும் அவர்மீது நிரூபிக்கப்பட முடியாமல் சேடப்பட்டி முத்தையா அவர்கள் பதவி...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, சர்க்காரியா கமிஷனிலே குற்றவாளிகள் என்று யாரை, எப்போது, எங்கே நிரூபித்திருக்கிறார்கள் என்று அதையும் சொல்ல வேண்டும். எதற்கெடுத்தாலும் பின்பாட்டுப் பாடக்கூடாது. சர்க்காரியா கமிஷனிலே யார் குற்றவாளி என்று எங்கே தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொல்ல வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சேடப்பட்டி முத்தையா அவர்கள் மீது எந்தவிதத்திலே குற்றம் சாட்டுகிறார் என்பதை அவர் தெரிவித்தால் நான் சர்க்காரியா கமிஷனின் குற்றவாதத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. பரிதி இளம்வழுதி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்):** தலைவர் அவர்களே, அந்த வழக்கு சம்பந்தமாக தெளிவாக ஆராய்ந்து அந்தப் பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. 5 ஆண்டு காலத்திற்கு முன்பு, பொறுப்புக்கு வருவதற்கு முன்பு, அவரிடம் இருந்தவை ஒரு வீடு, ஒரு கார் இன்னும் சில ஆயிரக்கணக்கான ரூபாய்கள், அதாவது Bank balance 964 ரூபாய்தான். ஆனால் அதன் பிறகு 1994-லே அவருடைய

Bank balance எவ்வளவு என்றால் ரூபாய் 46.89 இலட்சம். அதைப்போல இன்னும் அவருடைய மனைவி, குடும்பத்தார் பற்றியெல்லாம் அதிலே தெளிவாக வெளியிடப்பட்டிருக்கிறது. ஆக நாங்கள் வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று சொல்லவில்லை. ஆதாரத்தோடுதான் பேசுகின்றோம். அதுமட்டுமல்ல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசுகின்றபோது . . . .

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே, எந்த கோர்ட்டிலே அதை நிரூபித்திருக்கிறார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குற்றவாளிகள் என்று பேசுகின்ற போது, நீதிமன்றத்திலே குற்றவாளி என்று சொல்லப்பட்டவர்கள்தான் குற்றவாளிகள். அதற்கு மேலே மேல்முறையீடு மன்றமும் இருக்கிறது. ஆகையினால், அவர் சொன்ன வார்த்தைகள் எப்படி இருந்திருக்கும் என்றால் அவர் குற்றம் சாட்டப்பட்டு, அந்தக் குற்றத்திலே ஒரு காலத்திலே இவ்வளவு பணம்தான் அவருக்கு இருந்தது, இப்போது இவ்வளவு பணம் அவரிடம் இருப்பதாகக் குற்றம் சாட்டியிருக்கிறார்கள் என்றுதான் சொல்லியிருக்க வேண்டும். பேச்சை முடியுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்):** தலைவர் அவர்களே, நான் இறுதிப் பகுதிக்கு வந்துவிடுகிறேன். இங்கே பேசுகின்றவர்கள் எல்லாம் ஏதோ வெடிகுண்டு வெடித்தது, வெடிகுண்டு வெடித்தது, வெடிகுண்டு வெடித்தது என்று சொல்கிறார்கள். வெடிகுண்டு என்ன இப்போதுதான் வெடித்ததா? மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வெடிக்கவில்லையா? ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் வெடிக்கவில்லையா? இந்து முன்னணி அலுவலகத்தில் வெடிக்கவில்லையா? மருதையாற்றுப் பாலத்தில் வெடிக்கவில்லையா? இதையெல்லாம் சொல்லி நான் நியாயப்படுத்த விரும்பவில்லை. தீவிரவாதிகள் யாராக இருந்தாலும் மனித நேயத்திற்கு ஊறு விளைவிப்பவர்கள் எவராக இருந்தாலும் அவர்களை நடுரோட்டில் நிறுத்தி நாயை அடிப்பது போல கல்லால் அடித்துக் கொல்ல வேண்டும் என்பதிலே எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையான கருத்தும் கிடையாது. ஆனால் முன்கூட்டியே தெரிந்து நடவடிக்கை எடுக்கவில்லை என்று . . .



பிற்பகல் 12-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டப்படி அப்படியெல்லாம் செய்ய முடியாது. (சிரிப்பு) சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்து விடுகிறேன். முன்கூட்டியே தெரிந்து நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். முன்கூட்டியே அவர்களுக்குத் தெரிந்து இருந்த காரணத்தால்தான் இராஜிவ் காந்தி படுகொலை செய்யப்பட்டபோது கிருஷ்ணகிரிக்கு ஓடி ஒளிந்து கொண்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம் வேண்டாம்.

**திரு. பரிதி இளம்வழுதி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்):** கூடவே இருந்தவர்கள் அரை மணி நேரம் காணாமல் போனார்கள். ஒன்றை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். நடந்து முடிந்த தேர்தலிலே சில சறுக்குகள் ஏற்பட்டுவிட்டன என்பதற்காகக் கொக்கரிக்க வேண்டாம். திராவிட முன்னேற்றக் கழகம் யானை; அது படுத்தாலும் குதிரை உயரம். இன்னும் சொல்ல விரும்புகிறேன், சாதாரண யானை இல்லை, படுப்பது போல் படுக்கும், பிறகு 'விர்'ரென்று விண்ணிலே பறக்கும். தேவேந்திரனின் ஐராவதம் யானை என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டு இந்த அளவுக்கு வாய்ப்பு வழங்கியமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** திரு. அத்வானி தமிழ்நாட்டிற்கு வந்தபோது.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். திரு. ஐ. கணேசன் பேசுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய வாக்காளப் பெருமக்களுக்கு எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சி-1 என்ற முறையிலே நன்றி. (சிரிப்பு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல் தமிழ்நாட்டினுடைய இந்த சபை நாயகரின் உத்தரவுக்குக் கட்டுப்பட்டு

அதை நான் சொல்கிறேன். பாட்டாளி மக்கள் கட்சி-1 என்றால் யார் என்று தேர்தல் நேரத்தில் மிகத் தெள்ளத் தெளிவாக பொதுமக்கள் எடுத்துக் காட்டினார்கள். ஒருசிலர் இந்தக் கட்சியிலிருந்து சென்றதை வைத்துக்கொண்டு கொடியை கட்டிக்கொண்டு எத்தனை அமைச்சர்கள் தொகுதிகளிலே நுழைய முடியாமல் திரும்பினார்கள் என்பது நாடு அறிந்த உண்மை. (குறுக்கீடு) வேலூரில், மற்ற பகுதிகளில் இன்னும் எத்தனையோ இடங்களில்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாட்டாளி மக்கள் கட்சி-1 என்று நான் அழைத்ததற்கு உண்டான காரணம் திரு. கணேசன் அவர்களுக்குத் தெரியும். அதிலே என்ன விமர்சனம் தேவை? நீங்கள் வேறு கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே, 'சரிவு வரும்போது அறிவு வேலை செய்யாது' என்று ஒரு பழமொழி உண்டு. அந்த அடிப்படையில்தான் இங்கே பாட்டாளி மக்கள் கட்சி பற்றி பேசியவர்கள் முதல், இந்த நாட்டினுடைய முதலமைச்சர் வரை பாட்டாளி மக்கள் கட்சி என்றால் என்ன என்பதை உணர்ந்து இருக்கிறார்கள். பாட்டாளி மக்கள் கட்சி என்பது டாக்டர் ராமதாஸ் அவர்கள் எந்த இடத்திலே இருக்கிறாரோ அந்த இடத்தில்தான் பாட்டாளி மக்கள் கட்சி இருக்கிறது என்பதை நாடு உணர்த்தியிருக்கிறது என்பதை மட்டும் மிகப் பணிவோடு தெளிவாக உங்களுக்கு எடுத்துச் சொல்கிறேன்.

அதுபோல, டாக்டர் ஐயா அவர்கள் தன்னுடைய தேர்தல் பணிகளைத் தொடங்கிக்கொண்டிருக்கும் போது ஒருசில விஷமிகள் டாக்டர் அம்பேத்கருடைய சிலைக்கு அந்த இனமக்களைக் கொண்டே செருப்பு மாலை போடச் செய்தார்கள். நாட்டில் கொந்தளிப்பு வராதா ; தேர்தலினுடைய வேகம் தணியாதா ; வேறு பக்கம் செல்லாதா ; நாம் வெற்றி அடைந்து விட மாட்டோமா ; என்ற பேராசையின் காரணமாக டாக்டர் அம்பேத்கர் சிலைக்கு செருப்பு மாலை போட வைத்தார்கள். டாக்டர் ஐயா அவர்கள் எந்த இடத்தில் தேர்தலில் பணியாற்றிக் கொண்டு இருந்தாரோ அங்கிருந்து கேள்விபட்ட உடனே ஓடோடி வந்தார். துல்லியமாக விசாரித்தார். செருப்பு மாலை போட்டது யார், எங்கே. எப்படி என்று உணர்ந்து நாட்டு மக்களுக்கு உணர்த்த வேண்டும் என்ற காரணத்திற்காக தேர்தல் முடிந்தவுடன் தேர்தல் பணியில் கிட்டத்தட்ட 40, 50 நாட்களாக அலைந்தபோதிலும்



அதையெல்லாம் விட்டு விட்டு திண்டிவனத்தின் திருவிளக்கு தெரு ஓரத்திற்கு ஓடி வந்தது. டாக்டர் ஐயா அவர்கள் அம்பேத்கர் சிலைக்கு முன்னால் உண்ணாவிரதமாக—எப்படி இங்கே பேசினார்களே உண்ணாவிரதம் என்று அதுபோலவா? சாகும் வரை உண்ணாவிரதம் (பலத்த சிரிப்பொலி) சாகும் வரை உண்ணாவிரதம் என்று இருந்த நெருப்பைப் பொட்டலம் கட்டப் பார்க்கிறார்கள். நாடு தாங்காது; சாகும் வரை உண்ணாவிரதம் என்று ஒரு சொட்டுத் தண்ணீர் கூடக் குடிக்காமல் இரண்டு நாட்களாக திண்டிவனத்தின் திருவிளக்கு திண்டிவனத்தின் தெரு ஓரத்திலே படுத்துக் கிடந்தது. யாராவது அப்பழுக்கு சொல்ல முடியுமா? இந்த நாட்டை ஆண்ட முதலமைச்சரைக் கேட்கிறேன். ஐயா அவர்கள் எங்காவது சென்றாரா? சிறுநீர் கழித்தாரா? ஒரு சொட்டுத் தண்ணீர் குடித்தாரா? பார்த்தீர்களா? ஆனால் எவ்வளவு கேவலப்படுத்தி போஸ்டர்கள் அடித்து வெளியிட்டீர்கள்?

பிற்பகல் 12-35

இலட்சக்கணக்கிலே - ஆயிரக்கணக்கிலே அல்ல - இலட்சக் கணக்கிலே கூடினார்கள். அந்த வழியாக போகக்கூடிய பஸ்களிலே ஐயாவைக் கிண்டல் செய்து, பா.மா.க.வை. கிண்டல் செய்து எவ்வளவு கோரமான வார்த்தைகளோடு wall poster-களை அடித்து வெளியிட்டார்கள்? யாராவது அதைத் தடங்கல் செய்தார்களா?

யார் வழியிலே உண்ணாவிரதம் இருந்தார்? உலக உத்தமன் மகாத்மா காந்தி அவர்கள் கண்ட அந்த உண்ணாவிரதத்தின் நெறிமுறைப்படி ஐயா அவர்கள் உண்ணாவிரதம் இருந்தார். இரண்டு இன மக்களும் ஒருவரையொருவர் அடித்திருந்தால் இந்த நாடு தாங்குமா? இரத்த ஆறு ஓடாதா? சுடுகாடாக ஆகியிருக்காதா? சிந்தித்துப் பார்த்தீர்களா? உண்ணாவிரதத்தினுடைய நேர்மையை டாக்டர் ஐயா அவர்கள் புரிந்துகொண்டு அந்த சத்தியபூர்வமான உண்ணாவிரதத்தின் காரணமாக இரண்டு இன மக்களையும் அமைதிப்படுத்தினார்கள். நாடு மறந்து விடுமா? நல்லவர்கள் நன்றி சொல்கிறார்கள். ஐயா அவர்களுக்கு நல்லவர்கள் நன்றி சொல்கிறார்கள். ஒடுக்கப்பட்ட, அழுத்தப்பட்ட, நசுக்கப்பட்ட மக்களுடைய வாழ்வு வளம் பெறும் வரை தன்னுடைய கழுத்திலே பூமாலை அணிந்து கொள்ள மாட்டேன் என்று சொன்னவர் டாக்டர் ஐயா அல்லவா? அவரைப்பற்றியா இங்கே விமர்சனம்?

இந்த நாட்டிலே தன்னுடைய கட்சி, ஆட்சிப் பொறுப்புக்கு வருவதாக இருந்தாலும் சட்டமன்றத்திலேயோ, நாடாளுமன்றத்திலேயோ என் கால் பதியாது என்று சொன்ன உத்தமன் அல்லவா? இதுவரை ஒரு அரசியல்வாதி — எந்தத் தலைவனாவது இப்படிச் சொன்னதாகச் சொல்ல முடியுமா இன்றைய 20-ஆம் நூற்றாண்டிலே! நான் கேட்கிறேன், என்னுடைய கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால்கூட ஒரு அரிசன குடிமகனை முதலமைச்சராக ஆக்குவேன் என்று சொன்னார். இப்பொழுது 4 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்றிருக்கிறார்கள். ஒரு அரிசனனுக்காக 3 (குறுக்கீடு) நான் கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டவன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** அப்புறம் கன்னா பின்னா என்று நானும் சொல்லிவிடுவேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது என்று சொல்வார்கள். அது ஞாபகம் வந்தது . தயவுசெய்து என்னுடைய பேச்சிலே குற்றம் குறை இருந்தால் எடுத்துச் சொல்லுங்கள். நான் கட்டுப்படுகிறேன். நான் சொல்வதற்கு ஆதாரத்தை வைத்துக்கொண்டிருக்கிறேன். எதுவாக இருந்தாலும் கேளுங்கள்.

எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சி, ஆட்சிப் பொறுப்புக்கு வருவதாக இருந்தால் ஒரு அரிசன குடிமகனை நான் முதலமைச்சராக ஆக்கிக் காட்டுவேன் என்று சொன்னார். இன்றைய நாடாளுமன்றத்திலே 4 உறுப்பினர்கள் – எம்.பி.க்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபொழுது, தன்னுடைய இன மக்கள் 3 பேரைக்கூட ஒதுக்கி விட்டு, சொன்னதைச் செய்யக்கூடிய டாக்டர் இராமதாஸ் அவர்கள் ஒரு அரிசனனுக்கு அமைச்சர் பதவியை வாங்கிக் கொடுத்து இருக்கிறார்கள் என்றால் இந்த நாட்டில் இருக்கக்கூடிய அந்த அரிசன மக்கள் எல்லாம் அவரைப் பாராட்ட வேண்டாமா?

எங்களை எப்படியாவது தூண்டிவிட்டு, அடித்துக் கொல்ல வேண்டுமென்று நினைத்தவர்களுக்குத்தான் நான் இங்கே சொல்கிறேன்.



இன்னொன்றும் சொன்னார்கள். இங்கே கலைத்துப் பாருங்கள் – இது என்ன, மலைத் தேனீ, கொட்டி விடும் என்று சொன்னார்கள். எதற்காக?

நான் இந்த நாட்டினுடைய முதல்வர் கலைஞரைக் கேட்கிறேன், 1980-லே எம்.ஜி.ஆர். ஆட்சியிலே நாடாளுமன்ற இடைத்தேர்தல் வந்தபொழுது, இரண்டே இரண்டு விரலை எம்.ஜி.ஆர். காட்டினார், இரண்டு தொகுதியை இந்த நாட்டு மக்கள் பரிசாக வழங்கினார்கள். இந்த நாட்டினுடைய ஏகோபித்த ஆதரவை இழந்து விட்டார், மனிதாபிமான அடிப்படையிலே அவர் ஆட்சியைக் கலைக்க வேண்டும், இராஜிநாமா செய்ய வேண்டுமென்று இதே நம்முடைய முதல்வர் சொல்லவில்லையா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நான் அப்படிச் சொல்லியிருந்தால் அதை எடுத்துப் படித்துக் காட்டுவது நல்லது.

**திரு. ஐ. கணேசன்:** அதேபோலத்தான்.... (சிரிப்பு) என்ன சொன்னார்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக இருக்க வேண்டும். முதலமைச்சர் 'நான் அப்படிச் சொல்லியிருந்தால் அதைப் படித்துக் காண்பியுங்கள்' என்று சொல்கிறார்கள்.

பிற்பகல் 12-40

**திரு. ஐ. கணேசன்:** 1980-லே wall poster கூட போடப்பட்டது? (குறுக்கீடு) நீங்கள் சொல்லவில்லை என்றால் விட்டுவிடுங்கள். Right. ஆனால், இன்று நான் சொல்கிறேன். அன்று எம்.ஜி.ஆர். அவர்கள் இரண்டு விரல்களைக் காட்டினார், 1980-லே இரண்டு இடம். ஆனால் இன்று 5 விரலைக் காட்டினார் தமிழ்நாட்டிலே 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள், பாண்டிச்சேரியைச் சேர்த்து 6. இது நாட்டு மக்கள் கொடுத்த தீர்ப்பு. ஆகையினால், உண்மையை இந்த நாட்டுக்கு எடுத்துச் சொல்வதற்கு நீங்கள் ராஜிநாமா செய்யுங்கள் என்று சொன்னது அவ்வளவு பெரிய தவறா? 1991-லே இன்றைய மத்திய அமைச்சர் பர்னாலாவிடத்திலே–அப்போது அவர் தமிழக ஆளுநர்– 356-ஐப் பயன்படுத்தி கலைஞர் அவர்களுடைய ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று அவர்கள் கூறினார்கள். ஆனால், பர்னாலா எழுதிக்கொடுக்க மாட்டேன், தி.மு.க. தவறு செய்யவில்லை, எந்தக்

[திரு. ஐ. கணேசன்] [1998 மார்ச் 21

காரணத்தை முன்னிட்டும் நான் எழுதிக் கொடுக்க மாட்டேன் என்று சொல்லியிருக்கிறார். மத்தியிலே இருக்கக்கூடிய காங்கிரஸ்காரர்கள் அவரை மிரட்டி, உருட்டிப் பார்த்தார்கள், ஆனால் பர்னாலா முடியாது என்று சொல்லியிருக்கிறார். அந்த பர்னாலா இந்த மந்திரி சபையில் மந்திரியாக இடம் பெற்றிருக்கிறார்.

நான் தலைவர் மூலமாக அறிந்துகொள்ளக் கேட்கிறேன். அன்றைய ஆட்சியைக் கலைத்தவர்கள் யார்? யாருடைய தூண்டுதல் அந்த சந்திரசேகரைத் தூண்டியது? நாங்கள் காங்கிரசிலிருந்து உறுப்பினர்கள் கொடுத்த ஆதரவைத் திரும்பப் பெற்றுவிடுவோம் என்று சொல்லி மிரட்டியது யார்? நாடு மறந்துவிட்டதா? சிந்தித்துப் பாருங்கள். ராஜிவ் காந்தி சொல்லிச் செய்தார்கள். (குறுக்கீடு) ஜெயலலிதா சொன்னார்; அதைச் செய்தது யார்? அப்போது அதிகாரம் இல்லையே? (குறுக்கீடு) இன்று எப்படி வேண்டுமானாலும் திருப்பிக் கொள்ளலாம், தவறில்லை. இந்த நாட்டிலே இருக்கக்கூடிய நடிகர்களை வைத்து, கவர்ச்சியை வைத்து அரசியல் நடத்திவிடலாம் என்று.... (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு நடிகை கட்சிக்குத் தலைவியாக இருக்கலாம். அது தவறல்ல. அந்த நடிகருக்குச் சீட்டுக் கொடுத்து, அந்த நடிகருக்கு, தன்னுடைய 50 ஆண்டுகால திராவிடப் பாரம்பரியத்திலே, ஈரோட்டுச் சிங்கம், வெண்தாடி வேந்தன், பகுத்தறிவுப் பகலவன் ஈ.வெ.ரா. படம் போடாமல், பேரறிஞர் பெருந்தகை, அறிவுலக மேதை, அறிவுக் கடல் அண்ணா படம் அந்த banner-லே போடாமல் ஒரு நடிகருக்கு... (குறுக்கீடு) துணி பேனரில் படம் போடப்பட்டது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு உறுப்பினர் பேசுவதிலே நாங்கள் குறுக்கிட்டுப் பேச விரும்பவில்லை. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் என்ன banner போட்டது என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும். அண்ணா படம் இல்லாமல் நாங்கள் துணி banner எந்த இடத்திலேயும், எந்தத் தொகுதியிலேயும் போடவில்லை. வேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினர் பார்க்க வேண்டுமென்று சொன்னால், நாளைக்கு அந்தப் banner-ஐ இங்கேயே கொண்டு வந்து காட்டத் தயாராக இருக்கிறோம்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய பகுதியிலே மட்டுமல்ல, வேலூர் தொகுதியிலேகூட பிரச்சாரத்திலே, தேர்தல் பணியிலே இருந்தேன். அங்கேயும் நான் உங்களுக்கு காட்டத் தயார். அத்தனை bannerகளிலும் மூன்று பேர்தான்.



1998 மார்ச் 21] [திரு. ஐ. கணேசன்]

உங்களுடைய banner நீங்கள் போட்டுக் கொள்ளுங்கள். ஆனால், நாட்டு மக்கள் சந்தேகப்பட மாட்டார்களா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே banner என்று சொன்னார். பிறகு poster என்கிறார். posterகளை ஆங்காங்கே நிற்கக்கூடியவர்கள் அல்லது ஆதரிக்கக்கூடியவர்கள் யார் வேண்டுமானாலும் போடலாம். தலைமைக் கழகத்தின் சார்பில் bannerகள் தயார் செய்கின்ற நேரத்தில் அண்ணா படத்தை, எங்களுடைய முதலமைச்சருடைய படத்தைத்தான் போட்டு நாங்கள் தயார் செய்திருக்கிறோம். எனவே, யாரோ போட்ட poster களையெல்லாம் வைத்துக்கொண்டு சபையிலே பேசுவது முறையல்ல.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டு மக்கள் மிக நன்றாகத் தெரிந்து உணர்ந்திருக்கிறார்கள். எந்தப் banner-லே, எந்தச் சுவர் விளம்பரத்திலே, எந்தெந்த நடிகர் உருவங்கள் பொறிக்கப்பட்டன, எப்படி வாக்கு கேட்கப்பட்டது என்பதையெல்லாம் நாட்டு மக்கள் மிக நன்றாகத் தெரிந்திருக்கிறார்கள்.

கோவை குண்டுவெடிப்பு பற்றி இந்த அவையிலேயும் நம்முடைய ஆளுநர் உரையிலேயும் தெள்ளத்தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கோவை குண்டு வெடிப்பினுடைய கோரத்தைப் பற்றி எதிர்க்கட்சித் துணைத் தலைவர்கூட மிக அழகாக தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். கண் இழந்தவர்கள், கால் இழந்தவர்கள், ஊனமானவர்கள் எத்தனை பேர்? அவர்களுக்கெல்லாம் இந்த அரசு செய்யக்கூடியது, சாதிக்கக்கூடியது, உதவக்கூடியது, என்ன? எந்தெந்த வகையில் உதவப்போகிறது என்பதைக் கேட்கிறேன். நான் கேட்கின் றேன், இங்கே பேசியவர்கள் சொன்னார்கள், அத்வானி தப்பித்துப் போனாரே, ஒரு நன்றி சொல்லக்கூடாதா என்று. அத்வானி அந்தக் குறிப்பிட்ட நேரத்திலே அந்தக் கோவை மாநகருக்கு வந்திருந்தால் அவருடைய உடல் சின்னாபின்னமாக்கப்பட்டிருக்கும். ஏற்கெனவே இந்தப் பாரதத்தினுடைய....

பிற்பகல் 12-45

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன், பேசுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலே 14 ஆம் தேதி ஆர்.எஸ். புரத்திலே குண்டு வெடித்த இடத்திற்கும், அத்வானி பேசுவதற்காக மேடை போடப்பட்டிருந்த இடத்திற்கும் மிகப்பெரிய இடைவெளி இருந்தது என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவைக்கு அத்வானி அவர்கள் அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் வந்திருந்தால் குண்டு வெடிப்பின் காரணமாக அவருடைய உடல் நிச்சயமாக மீண்டிருக்காது. ஏற்கெனவே, நம்முடைய தமிழ்நாட்டிலே ஒரு மாபெரும் தலைவரை..... (குறுக்கீடுகள்) நாங்கள்தான் இந்த நாட்டை ஆள்கிறோம், போட்டுக்கொடுக்க! ஆகவே, இந்தத் தமிழ்நாட்டிலே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், நீங்கள் பேசும்போது என்னைப் பார்த்து பேசுங்கள். யாராவது இரண்டு பேர் பேசினால் அவர்களுக்கும் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். 16 நிமிடங்கள் ஆயிற்று. கொஞ்சம் சீக்கிரம் பேசி உரையை முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்று முழுக்க முழுக்க உங்களைப் பார்த்துதான் பேசிக் கொண்டிருக்கிறேன். வேறு எங்கும் பார்க்கவில்லை. (சிரிப்பு) தயவுசெய்து என்னுடைய பேச்சிலே குறுக்கீடு செய்து நேரத்தை இழுத்துவிட வேண்டாம். தயவுசெய்து உங்களை நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியாவிற்குச் சுதந்திரம் பெற்றுக்கொடுத்த பண்டிதர் நேரு அவர்களுடைய கடைசி வாரிசு சென்னையிலே சின்னாபின்னமாகச் சிதைக்கப்பட்டது நாட்டுக்குத் தெரியும். 'தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா' என்று சொன்ன இந்தத் தமிழ்நாட்டிலே நேரு அவர்களுடைய வாரிசு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் குறுக்கே பேச விரும்பவில்லை. பண்டிதர் நேருவினுடைய கடைசி வாரிசு என்று நீங்களே முடிவு எடுத்துவிட்டீர்களா? (சிரிப்பு)





**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திராகாந்தியினுடைய கடைசி வாரிசு, ராஜீவ் காந்தி இங்கே துண்டுதுண்டாகச் சிதைக்கப்பட்டார். அதே போன்ற ஒரு நிலைமை இந்தத் தமிழ்நாட்டிலே ஏற்பட்டிருக்கும். நாம், இந்த மன்றம், இந்தத் தமிழ்நாட்டு மக்கள் ஆகியோர் யாருக்காவது நன்றி சொல்ல வேண்டும் என்று எண்ணினால், நேரம் கழித்து விமானத்தை ஓட்டிவந்தாரே அந்த விமானிக்குத்தான் நன்றி சொல்லலாம். (சிரிப்பு) தமிழ்நாட்டினுடைய மானம் காப்பாற்றப்பட்டிருக்கிறது என்பதனை இங்கே கூற.....

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி, பேசுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுடைய உடல் சின்னாபின்னப்படுத்தப்பட்டதற்காக பாட்டாளி மக்கள் கட்சியினர் இங்கே வருத்தம் தெரிவிக்கிறார்கள். ஆனால், இதே பாட்டாளி மக்கள் கட்சி நண்பர்கள்தான் தமிழர் வாழ்வுரிமை மாநாடு என்று சொல்லி ராஜீவ் காந்தியைக் கொன்றவர்களை உண்மையான தமிழர்கள் என்றும், ராஜீவ் காந்தியைக் கொன்றவர்கள்தான் தமிழ்நாட்டினுடைய உண்மையான பிரதிநிதிகள் என்றும் சொல்லி, அவர்களுடைய படங்களை தலையிலே தொப்பிகளிலே கட்டிக்கொண்டு, தோள்களிலே கட்டிக்கொண்டு சென்னை நகரிலே ஊர்வலம் வந்தார்களே அதற்கு என்ன பொருள்? 'ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுவதைப் போல்' இன்றைக்கு ராஜீவ் காந்திக்காக கண்ணீர் சிந்துவது யாரை திருப்திபடுத்த என்று உங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிடக்கூடாது என்றுதான் இருந்தேன். அந்த மாநாட்டை நடத்தி, பேரணியிலே தனு படத்தைப் பிடித்துவந்த பாட்டாளி மக்கள் கட்சியைத் தடை செய்ய வேண்டும் என்று முதலமைச்சராக இருந்த செல்வி ஜெயலலிதா அவர்கள் இந்த மாமன்றத்திலே முன்மொழிந்து, அதை எதிர்த்துப் பேசியவன் நான். இந்தப் பாட்டாளி

மக்கள் கட்சி ஒரு தேசத் துரோகக் கட்சி. இந்த திரு. ராமதாஸ் தேசத் துரோகி என்று பேசியவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பொதுச் செயலாளர் ஜெயலலிதாதான். அதற்கு திரு. ராமதாஸ் பதில் சொல்லியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் அது தெரியாமல் இங்கே உரையாற்றிக் கொண்டிருக்கிறார்.

பிற்பகல் 12-50

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டினுடைய தலைவர் வெடிகுண்டுக்கு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன். பேரவைத் தலைவரின் வேண்டுகோள், இரண்டு நிமிடங்களில் பேசி முடியுங்கள். இன்னும் ஐந்து பேர் பேச வேண்டும்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டினுடைய பெருந்தலைவர், தேசத்துக்காகப் பாடுபட்ட குடும்பத்திலே பிறந்த தலைவர் சின்னாபின்னமாக ஆக்கப்பட்டார். அந்த வழியிலே பாரதீய ஜனதா கட்சித் தலைவரும், இன்றைய மத்திய உள்துறை அமைச்சரும் ஒரு விபத்திலிருந்து தப்பித்து இருக்கிறார்கள் என்று சொல்லத்தான் கோயம்புத்தூர் வெடிகுண்டு சம்பவத்தை எடுக்க வேண்டியிருந்தது.

அடுத்து, பேரறிஞர் பெருந்தகை, அறிவுலக மேதை, அறிஞர் அண்ணா அவர்கள் கைத்தறித் துணியைத் தோளில் சுமந்துகொண்டு நம்முடைய கலைஞரோடு தொழிலாளர்களை வாழ்விக்க, கைத்தறித் தொழிலாளர் குடும்பங்களை வாழ்விக்க எவ்வளவோ கஷ்டப்பட்டார்கள். எப்படியெல்லாம் அந்தக் கைத்தறித் தொழிலாளர்களை வாழ்வித்தார்கள். ஆனால், இன்று நிலைமை என்ன? கைத்தறித் தொழிற்சங்கங்கள் சேலம், நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் நிறைய இருக்கின்றன.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

நாமக்கல்லில் மட்டும் 700 சங்கங்கள் இருக்கின்றன. இந்த 700 சங்கங்களுக்கும் சேரவேண்டிய மானியத் தொகை பல கோடி ரூபாய் கிடைக்காமல், பல சங்கங்கள் மூடக்கூடிய நிலையில் இருக்கின்றன. அதிலே வேலை செய்த தொழிலாளர்களுக்குச் சம்பளம்கூடக் கொடுக்க முடியாத நிலை உள்ளது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 1996-97 ஆம் ஆண்டு அளிக்கப்பட வேண்டிய மானியம் 40 கோடியே 85 இலட்சம் ஏற்கெனவே அளிக்கப்பட்டு விட்டது. அதுபோல 1997-98 ஆம் ஆண்டு அளிக்கப்பட வேண்டிய மானியம் 30 கோடி ரூபாய் கடந்த 20-2-1998 வரை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், உட்காருங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய எடப்பாடி தொகுதி விசைத்தறித் தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. தமிழ்நாட்டினுடைய ஜவுளிக் கேந்திரமாக எடப்பாடி திகழ்கிறது. வாரா வாரம் திங்கட்கிழமை பல நூற்றுக்கணக்கான லாரிகளிலே எங்கள் பகுதியிலிருந்து ஜவுளிகள் ஈரோட்டுக்குச் சென்று ஆயிரக்கணக்கான ஜவுளிகள் லாரிகளிலே வெளி மாநிலங்களுக்குச் செல்லும். ஆனால் இன்று அந்தத் தொழில் அப்படியே முடங்கிவிட்டது. தொழிலாளர்களுடைய வீட்டின் அடுப்பிலே பூனை உறங்கிக் கொண்டிருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்பதை இந்த அரசு முழு முயற்சியோடு கவனித்து, அந்தத் தொழிலாளர்களின் குடும்பத்தை வாழ்விக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்று பஸ் கட்டண உயர்வு. நம்முடைய முதலமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் முதல் அத்தனை பேரும் இங்கே பஸ் கட்டண உயர்வு பற்றி பேசினார்கள். அப்பொழுது நம்முடைய முதல்வர் அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள், 2001 ஆம் ஆண்டு வரை பஸ் கட்டணத்தை உயர்த்தமாட்டேன் என்று. ஆனால் நகர்ப்புறங்களில் 1 ரூபாய், 2 ரூபாய், 3 ரூபாய் என்று கட்டணம் இருக்கக்கூடிய டவுன் பஸ்களில் 4 ரூபாய், 5 ரூபாய் என்று கட்டண உயர்வு இருக்கிறது. இதனால் ஏழைத் தொழிலாளர்கள் டவுன் பஸ்களில்

சென்று தங்கள் தொழிலைச் செய்துவர மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நம்முடைய முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே பேருந்துக் கட்டண உயர்வை, டவுன் பஸ் கட்டண உயர்வை, இரத்து செய்தால்தான் ஏழை எளியவர்களுடைய மனம் குளிரும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, குடும்ப அட்டையைப் பற்றி இங்கே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன். தயவுசெய்து பேச்சை முடியுங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. பெரியசாமி (குறுக்கீடு) திரு. கணேசன், சீக்கிரம் பேசி முடியுங்கள். இன்னும் நிறைய பேர் பேசவேண்டும்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடைசியாக ஒரே ஒரு கருத்தைச் சொல்வதற்காவது நீங்கள் அனுமதிக்க வேண்டும். காதல் கடிதத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று நான் எண்ணியிருந்தேன். நேரம் கொடுத்தால் கடைசியாகச் சொல்கிறேன். இல்லையென்றால் பேச்சை முடித்துக் கொள்கிறேன். சொல்லிவிடட்டுமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் சொல்லி முடியுங்கள்.

பிற்பகல் 12-55

**திரு. ஐ. கணேசன்:** சாலைப் பணியாளர்களைப்பற்றி நான் இதே அவையிலே, மிகத் தெளிவாக சென்ற முறை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரை வைத்துக்கொண்டு சொன்னேன். தமிழக முதலமைச்சர் அவர்களே, சாலைப் பணியாளர்கள் விஷயத்தில் எங்கள் பகுதியிலே ஆங்காங்கே பேரம் பேசப்படுகிறது. இதைத் தடுக்க வேண்டும். குலுக்கல் முறை என்று சொல்லியிருக்கிறீர்கள். இப்படி நடக்கிறது என்று சொல்லி இதில் ஒரு தெளிவான தீர்ப்பை நீங்கள் வழங்க வேண்டுமென்று கேட்டேன். அப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் மிகத் தெளிவாக ஒன்றைச் சொன்னார்கள். சாலைப் பணியாளர்கள் குலுக்கல் முறையில்தான் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று சொன்னார்கள். மாண்புமிகு



முதலமைச்சரைப் பணிவோடு கேட்டுக்கொள்வது ஒன்றே ஒன்றுதான். இங்கே அமர்ந்திருக்கின்ற அமைச்சர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், மாமன்றத்து உறுப்பினர்களை நான் கேட்டுக் கொள்வதெல்லாம், எங்கேயாவது சாலைப் பணியாளர்கள்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது. நீங்கள் பேசி முடியுங்கள். நீட்டித்துக்கொண்டே போனால் எப்படி? சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய நெஞ்சிலே கை வைத்துச் சொல்லட்டும், எந்தப் பொறுப்பையும் ஏற்க நான் தயாராக இருக்கிறேன். நாமக்கல், சேலம் மாவட்டங்களிலே அந்தச் சாலைப் பணியாளர்கள் குலுக்கல் முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்டார்களா? நீங்கள் உத்தரவாதம் அளிக்க முடியுமா? 'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்று சூளுரைத்தீர்களே, சொன்னதைச் செய்தீர்களா? குலுக்கல் முறையில் நடத்தினீர்களா? நான் எந்தத் தண்டனைக்கும் கட்டுப்படத் தயார். உங்களால் சொல்ல முடியுமா? இது எதற்காக? 'ஓடு மீன் ஓட உறு மீன் வருமளவும் வாடி நிற்குமாம் கொக்கு' என்பதைப்போல உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ.எம். ராமசாமி.

**திரு. ஏ.எம். ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சாலைப் பணியாளர்கள் குலுக்கல் முறையில்தான் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பதை இங்கே நான் உறுதிபடத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாலைப் பணியாளர்களைப் பொறுத்தவரையில், அனைத்து மாவட்டங்களிலும் 100 பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சொன்னால் 300 பேர்கள் அதற்குரிய கல்வித் தகுதிகளோடு தேர்ந்தெடுக்கப்பட்டு, மூன்றில் ஒரு பகுதியினர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அதற்கான அனைத்து சான்றுகளும் அரசிடம் இருக்கிறது.

**திரு. ஐ. கணேசன்:** நீங்கள் ஆதாரத்தைக் காட்டுங்கள். யார், யார் குலுக்கல் முறையிலே, யார், யார் எந்தெந்த அதிகாரிகளை வைத்துக்கொண்டு, எந்தெந்த பத்திரிகையாளர்களை வைத்து, எந்தெந்த சட்டமன்ற உறுப்பினர்களை வைத்து குலுக்கல் நடைபெற்றது என்பது பற்றிய நீதி விசாரணையை நடத்துங்கள். நம்முடைய முதல்வர் நல்லவர். ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அவர் சொன்னதைப்போல அங்கே நடக்கவில்லை. முதல்வரை ஏமாற்றப் பார்க்கிறார்கள். நாட்டு மக்கள் மிகத் தெளிவாகப் புரிந்திருக்கிறார்கள். முதலமைச்சர் சொன்னதைச் செய்யாமல் இருந்திருக்கிறார்கள் சாலைப் பணியாளர் விஷயத்தில் பல லட்சங்களை லஞ்சமாகப் பெற்றிருக்கிறார்கள். நீங்கள் எந்தக் கோர்ட்டிலே எந்த நீதி விசாரணையை வைத்தாலும் அதை நிருபிப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்று சொல்லிக் கொள்கிறேன். மேலும் கள்ளச் சாராயம் என்பது பயங்கரமாக....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரமாகி விட்டது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொல்வதைப் போன்று யாராவது லஞ்சம் பெற்றிருந்தால், அவருடைய பெயரை எழுதி மாண்புமிகு முதலமைச்சரிடத்தில் கொடுத்தால் நிச்சயமாக உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பட்டியலைப் பார்த்தால் மற்றக் கட்சிக்காரர்களும் நிறைய இருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் ஆளுங்கட்சிக்காரர்களுக்கு குறைகள் இருக்கின்றன. எங்களுடைய கட்சிக்காரர்களுக்கு கொடுக்கவில்லையே என்ற குறையிருக்கிறது. குலுக்கல் முறையில்தான் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அனைத்துக் கட்சிக்காரர்களும் அதில் இடம் பெற்றிருக்கிறார்கள். ஆகவே ஏதேனும் குற்றச்சாட்டு தனியாகத் தெரிவிக்கப்படுமானால் நிச்சயமாக முதலமைச்சர் உடனடியாக உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** சாலைப் பணியாளர்கள் தேர்வுக்கு அட்டை போட்டு வரவழைத்திருக்கிறார்கள். உறுப்பினர் கார்டு கேட்டு வரவழைத்திருக்கிறார்கள். இதை இந்த அவையிலே சொல்வது சரியல்ல என்பதால் சொல்லவில்லை. (குறுக்கீடு).



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறான கருத்துக்களை இங்கே சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. அவரைப் போன்ற உறுப்பினர்கள் கொடுத்த பரிந்துரை கடிதங்கள்கூட என்னிடம் அத்தாட்சியாக உள்ளன. வேண்டுமானால் அவற்றைக் காட்டுவதற்கு தயாராக இருக்கிறேன். அப்போது அவர்களிடம் நான் சொல்லி அனுப்பியது, 'இது குலுக்கல் முறையில்தான் நடக்குமே தவிர இதில் யாரும் ஒன்றும் செய்ய முடியாது' என்று சொல்லியிருக்கிறேன். உறுப்பினர்கள் கொடுத்த சான்றுகள், அவர்களுடைய லெட்டர் பேடில் எழுதிக் கொடுத்த கடிதங்கள் எல்லாம் வைத்திருக்கிறேன். வேண்டுமானால் அவற்றைச் சமர்ப்பிக்கத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள். நேரம் அதிகமாகி விட்டது. இதுவரையில் 30 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. பெரியசாமி (குறுக்கீடு) இன்னும் 5, 6 உறுப்பினர்கள் பேச வேண்டும். முக்கியமான உறுப்பினர்கள் பேச வேண்டும். திரு. ஐ. கணேசன், நீங்கள் உட்காருங்கள். அடுத்து திரு. நா. பெரியசாமி. (குறுக்கீடு)

**திரு. ஐ. கணேசன்:** பேரவைத் துணைத் தலைவரே, எங்களுடைய குரல்வளையை நீங்கள் நசுக்குகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 30 நிமிடங்களாக நசுக்கிக் கொண்டா இருந்தோம். பேசிக் கொண்டுதான் இருந்தீர்கள். திரு. நா. பெரியசாமி, நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** எங்களுடைய வார்த்தைகளுக்குச் செவி சாய்க்காததால் இந்த அவையிலிருந்து நாங்கள், பாட்டாளி மக்கள் கட்சி - 1, வெளி நடப்புச் செய்கிறது என்று சொல்லி, வெளிநடப்புச் செய்கிறோம்.

(பாட்டாளி மக்கள் கட்சி - 1 உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

பிற்பகல் 1-00

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, வேண்டுமென்றே சட்டப் பேரவைக்கு அல்லது உங்களுக்கு ஒரு களங்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதைப்போல, இந்தச் சட்டமன்றத்திலே பேச்சுரிமை இல்லை என்று ஒரு கற்பனை வாதத்தைச் செய்துகொண்டு பாட்டாளி மக்கள் கட்சி-1 வெளிநடப்புச் செய்திருக்கிறது. அது தவறு; உண்மைக்கு மாறானது என்பதை எடுத்துச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை. இப்பொழுது பேசிய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய 1-ன் தலைவர் திரு. ஐ. கணேசன் அவர்கள் முப்பது நிமிடத்திற்கு மேல் பேசியிருக்கிறார். நீங்கள் இப்படியெல்லாம் 30 நிமிடங்கள் ஒருவருக்கு இடம் கொடுத்து, மற்றவர்களுடைய பேச்சுரிமையைக் கெடுக்கக்கூடாது, குறைக்கக்கூடாது என்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன். 30 நிமிடங்கள் ஒருவரைப் பேச அனுமதித்தும் அவர்களுடைய பேச்சுரிமையைத் தடுப்பதாக, அவர்களுடைய கழுத்தைச் சுருக்கிடுவதாக அவர் வாதிப்பாரேயானால் உள்ளபடியே நாட்டு மக்கள் அதை நம்பத் தயாராக இல்லை. இந்த அவையிலே 1-30 மணிக்கு இன்றைய அலுவல்கள் முடிய வேண்டும். இன்னும் பேச வேண்டியவர்கள், கட்சித் தலைவர்கள் பல பேர் இருக்கிறார்கள். ஆழமான கருத்துக்களைப் பேசக்கூடியவர்கள் இருக்கிறார்கள். வெறும் poster-ஐ, banner-ஐப் பற்றி மாத்திரம் பேசிவிட்டு அதுவே தங்களுடைய பேச்சு என்று முடிப்பவர்கள் அல்ல. மிக ஆழமான கருத்துக்களைச் சிந்தித்துப் பேசக்கூடிய பலர் இந்த அவையிலே முன்வரிசையிலே அமர்ந்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது தனக்குப் பேச்சுச் சுதந்திரம் அளிக்கப்படவில்லை என்று அவர் சொல்லிச் சென்றது முற்றிலும் தவறானது என்பதை நான் ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்ட வேண்டியவனாக இருக்கின்றேன். அதுவும், இந்த அவைக் குறிப்பிலே மாத்திரம் அல்ல, நாட்டிலே வருகின்ற ஏடுகளின் குறிப்பிலும் ஏறவேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் குறிப்பிடுகின்றேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதையொட்டி ஒரு உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். இன்றுகூட ஆளும் கட்சி சார்பிலே ஒருவர்தான் பேசியிருக்கிறார். எதிர்க்கட்சி சார்பிலே ஒருவர்தான் பேசியிருக்கிறார். பாட்டாளி மக்கள் கட்சி-1-இல் மூன்று உறுப்பினர்கள்தான் இருக்கிறார்கள். அந்த மூன்று பேருமே இந்த ஆளுநர் உரையின் மீது பேசியிருக்கின்றார்கள். வேறு எந்தக் கட்சிக்கும் அந்த உரிமை இதுவரையில் கொடுத்ததில்லை. ஆகவே, அவர்களுக்குப் பேச்சுரிமை இல்லை என்று சொல்வதில் பொருளே இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அடுத்து, உறுப்பினர் திரு. நா. பெரியசாமி அவர்கள் 5 நிமிடத்தில் தன்னுடைய பேச்சை முடித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆளுநர் அவர்களின் உரையின் மூலமாக,....

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்திலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் 8 பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். எங்களுடைய சட்டமன்றக் கட்சித் துணைத் தலைவர் சுப்பராயன் அவர்களே 15 நிமிடம்தான் பேசினார். இப்போது பேசுகின்ற பெரியசாமிக்கு 5 நிமிடம் கொடுப்பது என்பது போதாது. பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்களில் ஒருவருக்கே ½ மணி நேரம் கொடுத்திருக்கிறீர்கள். ஆகவே, இவருக்கும் ½ மணி நேரம் கொடுத்து, பேசுவதற்கு வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்கிற கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், திரு. சுப்பராயன் அவர்களுக்கு 15 நிமிடம்தான் கொடுத்தேன் என்பதற்கு, நீங்கள் எந்த ஆதாரத்தை வைத்துச் சொல்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. திரு. சுப்பராயன் அவர்கள் ½ மணி நேரம் பேசியிருக்கிறார். இப்பொழுது எனக்கு இருக்கிற பிரச்சினையே, 15 நிமிடம் என்று சொல்கிறவர்கள் எல்லோருமே ½ மணி நேரம் பேசியிருக்கிறார்கள். நான் இதை வேண்டுகோளாகத்தான் விடமுடியும். 1½ மணிக்கு நான் அவையை ஒத்திவைத்துவிட்டுப்போனால் பல பேருக்குப் பேசுகின்ற வாய்ப்பு இருக்காது.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு விவரங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டிய அவசியம் இருக்கிறது என்றாலும், நேரத்தின் அருமை கருதி, சுருக்கமாக, கூடுதல் முக்கியத்துவம் கொடுத்துக் கவனிக்க வேண்டிய சில விவரங்களை மட்டும் இந்த அவையின் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பிற்பகல் 1-05

1980 ஆம் ஆண்டு வாக்கிலே தொடங்கப்பட்ட சாதிமத வெறிச் சக்திகளின் நடவடிக்கைகள் சன்னம் சன்னமாக வளர்ந்து, இன்றைக்கு மிகப்பெரிய ஆலமரம் போல வளர்ந்து, படர்ந்து இருப்பதையும், இந்த அரசு மிக நிதானமாக, உறுதியாக அதைத் தடுக்கிற நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதையும் நான் பார்க்கிறேன். காவல் துறையினுடைய பணி சிரமம் நாம் அனைவரும் அறிந்ததுதான். இருந்தாலும், காவல் துறை, தன்னுடைய கடமையை உணர்ந்து, சரியான முறையிலே நடவடிக்கைகளை உரிய நேரத்திலே எடுக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி கடமையாற்றிய, கடமையாற்றுகிற காவல் துறையைப் பாராட்டி, வாழ்த்துகிற ஒரு அரசு இருப்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து மிக முக்கியமானது, பல உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்கூட, 1996-97 ஆம் ஆண்டிலே 40 கோடி ரூபாய் அளவுக்கும், 1997-98 ஆம் ஆண்டிலே 30 கோடி ரூபாய்க்கும் கைத்தறித் துணிக்காக மானியம் வழங்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியை எடுத்துக் கூறினார்கள். ஆனால் கைத்தறித் துறைக்கான கூட்டுறவுத் தேர்தல், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகுதான் நடைபெற்றது. ஆண்டு முழுவதும் 20 சதவிகிதம் விற்பனைக்கான தள்ளுபடி மானியம் வழங்கப்படும் என்ற நல்ல செய்தியும் வழங்கப்பட்டது. ஆனால் இந்த இரண்டையும், கைத்தறி நெசவாளர்களால் மிகுந்த மகிழ்ச்சியோடு அனுபவிக்க முடியாத கஷ்டநிலை ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால், 1993-94 ஆம் ஆண்டிலே இருந்து ஒவ்வொரு ஆண்டு காலத்திலும் தள்ளுபடி மானியம்



நிலுவையாக நிற்கிறது. இன்றுவரை, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தள்ளுபடி மானியம் வழங்கப்படாமல் ஏறத்தாழ தமிழ்நாடு முழுவதும் பலகோடி ரூபாய் தேக்கம் அடைந்திருக்கிறது. ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திலும் இருக்கிற காசுக் கடனுக்கு நிகராக தள்ளுபடி மானிய நிலுவையும், 'கோ-ஆப்டெக்ஸ்' நிறுவனத்திலே.....

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏறத்தாழ 35 கோடி ரூபாய் கடந்த ஆட்சியிலே தள்ளுபடி மானியம் நிலுவை இருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிலுவை இருக்கின்றது. அதை நான் மறுக்கவில்லை. ஆனால், அந்த 35 கோடி ரூபாய் அளவிலே கொடுக்கக்கூடிய அந்தத் தள்ளுபடி மானியத்தை, கூட்டுறவுச் சங்க நெசவாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய சூழ்நிலையிலே, அரசின் உத்தரவுகள் இருக்கின்றனவா என்றால் இல்லை. அவர்கள் இஷ்டத்திற்கு முரண்பாடான 3 அரசு உத்தரவுகளைப் பிறப்பித்திருக்கிறார்கள். ஆகவே, அந்த அரசின் உத்தரவை எப்படி அமல்படுத்துவது; அந்தத் தொகையை எப்படி அளிப்பது என்பது எதிர்காலத்தில் ஒரு கேள்விக்குறியாக ஆகக்கூடாது என்ற காரணத்திற்காக, இப்போது அது தணிக்கைக்கு அனுப்பப்பட்டு, அந்தத் தணிக்கைக் குழு முடிவு எடுத்த பின்புதான் அதைக் கொடுக்க இயலும். அப்படிக் கொடுக்காமல், நாமாகவே ஒரு முடிவை எடுத்தால், கடந்த ஆட்சியிலே போடப்பட்ட முரண்பாடான அரசுச் சட்டங்கள், இந்த அரசிற்கும் ஒரு தவறான பெயரையே உண்டாக்கும் என்ற காரணத்தினால்தான், அந்த 35 கோடி ரூபாயினுடைய உண்மையான நிலையை தணிக்கைக் குழு தெரிவித்த பின்புதான் கொடுக்க முடியும் என்பதை உங்களுக்கு இந்த அவையின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஆனால் ஒவ்வொரு கூட்டுறவு நெசவாளர் சங்கத்திற்கும், அதனுடைய காசுக் கடனுக்கு நிகரான அளவில் 'கோ-ஆப்டெக்ஸ்' கொள்முதல் செய்திருக்கிற வகையிலே, நிலுவையாக நின்று கொண்டிருக்கிறது. ஒருபக்கம் தள்ளுபடி மானியம் நிலுவை வரவில்லை; இன்னொரு பக்கத்திலே, 'கோ-ஆப்டெக்ஸ்'-இலே செய்த கொள்முதலுக்கு உண்டான தொகை வரவில்லை. தள்ளுபடி மானியம் இல்லாத காரணத்தினால்,

[திரு. நா. பெரியசாமி] [1998 மார்ச் 21

அவர்கள் விற்பனை செய்யும் துணிகள் தேக்கம் அடைந்திருக்கின்றன. இப்படிப் பலவகைகளிலே நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கிற ஏறத்தாழ 5 இலட்சம் நெசவாளர்களுடைய பிரச்சினையை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூரிய கவனத்தோடு கவனிக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, சென்ற நிதிநிலை அறிக்கையின்போது, 60 வயதான நெசவாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என்கிற ஒரு நல்ல திட்டத்தினை நாம் அறிவித்தோம். ஆனால், அந்த நல்ல திட்டத்திற்கு நடைமுறையில் என்ன பலன் இருக்கிறது என்று நாம் பார்க்கிறபோது, சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திலே, 1-4-1997 அன்று, 60 வயதைக் கடந்தவர் சேர்ந்திருக்க வேண்டுமென்ற ஒரு விதிமுறை வகுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தச் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம், 1988 ஆம் ஆண்டு வாக்கில் அறிமுகப்படுத்தப்பட்டபோது, 55 வயது வரைதான் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திலே, அவர்களைச் சேர்க்க முடியுமென்று சொல்லப்பட்டது. இன்றைக்கு 10 ஆண்டு காலத்திற்குப் பிறகு, இந்தப் புதிய திட்டத்தை அறிவிக்கிறபோது, அந்தச் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திலே அன்றைக்கு சேர்ந்த நெசவாளர்கள் எல்லாம் வயது முதிர்வால் விலகிவிட்டனர்; 60 வயதினைக் கடந்து விடுகிறார்கள்.

பிற்பகல் 1-10

ஒன்றை முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உறுப்பினராக இருந்து, உண்மையிலேயே நெசவாளராக இருந்து வரவு செலவைச் சங்கங்களிலே செய்துவருகிற 60 வயதைத் தாண்டிய அனைவருக்கும் ஓய்வூதியம் கிடைக்கிற வகையிலே அந்த ஓய்வூதியத் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து ஈரோடு மாவட்டத்திற்கு மட்டுமல்ல, கோவை மாவட்டத்திற்கும் சேர்த்து ஒரு மிக முக்கியமான திட்டம்; அவினாசி திட்டம் என்றும், அத்திக்கடவு திட்டம் என்றும் ஏறத்தாழ 20 இலட்சம் மக்களுக்கு குடிதண்ணீர் ஆதாரத்தை உருவாக்குகிற திட்டம் வலியுறுத்தப்பட்டு வருகிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கமுடியும். அந்தத் திட்டம் பொதுப்பணித் துறை ஆய்விலே இருக்கிறது. பொதுப்பணித் துறை



1998 மார்ச் 21] [திரு. நா. பெரியசாமி]

அதிகாரிகள் அதை ஒரு பாசனத் திட்டமாகக் கருதி பாதியிலேயே தள்ளிவிடுகிறார்கள். அது பாசனத் திட்டம் இல்லை என்று அணுகுமுறையிலே மாற்றத்தை ஏற்படுத்தி. அதைக் குடிதண்ணீர் திட்டமாக, குடிதண்ணீருக்கான ஆதாரத்தை உருவாக்குகிற திட்டமாக மாற்றியமைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு முன்வரவேண்டும்.

அடுத்து இந்த ஆளுநர் உரையிலே பல நல்ல விவரங்கள் எல்லாம், பாராட்டத்தக்க விவரங்கள் எல்லாம் இருக்கின்றன. அதை எல்லாம் உங்களின் சார்பாக நாட்டுமக்களுக்கு எடுத்துச்சொல்லி உங்களுக்கு வலுசேர்ப்போம். அந்த நடவடிக்கையில் ஈடுபடுவோம் என்று சொல்லி, ஒன்றை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சென்ற ஆளுநர் உரையிலே பொதுத் துறை பற்றி குறிப்பிட்டிருந்தீர்கள். இந்த ஆளுநர் உரையிலே பொதுத் துறை பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம், (TANCEM) நல்ல இலாபகரமாக நடந்து வரக்கூடிய ஒரு நிறுவனம். இந்த நிறுவனத்திலே உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களை, குறிப்பாக சிமெண்ட்டை நம்முடைய அரசு ஊரக வளர்ச்சித் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் போன்ற துறைகள் எல்லாம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்திற்கான சிமெண்ட் விலையை Bureau of Public Enterprises என்ற நிறுவனம் தான் நிர்ணயிக்கிறது. அப்படி நிர்ணயிக்கிற விலையைப் பார்த்தீர்களேயானால் 1991 ஆம் ஆண்டிலே வெளியிலே விற்கப்பட்ட விலை ஒரு மூட்டை 118 ரூபாய். இந்த தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் விற்பனை செய்த விலை ஒரு மூட்டை 89 ரூபாய். 1992 ஆம் ஆண்டிலே வெளியிலே விற்கப்பட்ட விலை 132 ரூபாய், நிறுவனத்திலே விற்பனை செய்த விலை 107 ரூபாய். 1993 ஆம் ஆண்டிலே வெளியிலே விற்கப்பட்ட விலை ஒரு மூட்டை சிமெண்ட் விலை 141 ரூபாய், இங்கே விற்கப்பட்ட விலை 115 ரூபாய். இப்படி குறைந்த விலைக்கு இதுவரைக்கும் விற்பனை செய்துவந்த தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் சிமெண்ட்டை தற்போது ஊரக வளர்ச்சித் துறை, D.R.D.A. மூலமாகச் செய்கிற பணிகளுக்கு எல்லாம் வாங்குவதில்லை, வெளிமார்க்கெட் விலையைவிட இங்கே விலை அதிகமாக இருக்கிறது, அதனால் வாங்குவதில்லை என்று முடிவெடுத்திருக்கிறார்கள்.

[1998 மார்ச் 21

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாங்குவதில்லை என்று முடிவெடுத்திருக்கிறார்கள் என்று சொல்வது தவறு. தேவைப்படுகிற காலத்தில் தேவைப்படுகிற அளவுக்கு அந்த நிறுவனம் கொடுக்கத் தவறினால் வெளியிலே வாங்கிக் கொள்ளலாம் என்றுதான் அரசு அறிவித்திருக்கிறது.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி. இன்றைக்கு தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் ஏறத்தாழ ஆண்டு ஒன்றுக்கு 8 இலட்சம் டன் சிமெண்ட் உற்பத்தி செய்கிறது. அவை முழுவதையும் அரசுத் துறைக்குத்தான் சப்ளை செய்து கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை இன்றைக்கு வெளிச் சந்தையிலே இருக்கிற சிமெண்ட் விலை அளவுக்கு நம்முடைய பொதுத்துறை நிறுவனத்தில் இருக்கக்கூடிய சிமெண்ட் விலையைக்கூட குறைத்துக்கொள்ள வாய்ப்பிருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தை வலுப்படுத்துகிற வகையிலே, அந்தப் பொதுத் துறை நிறுவனத்தை வலுப்படுத்துகின்ற வகையிலே உற்பத்தி செய்யக்கூடிய சிமெண்ட்டை அரசுத் துறைகள் ஏற்கெனவே வாங்கிக் கொண்டிருந்ததைப்போல மேலும் தொடர்ந்து வாங்குவதற்கான நடவடிக்கைகளைச் செய்ய வேண்டும் என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஒன்றே ஒன்றை மட்டும் கடைசியாகச் சொல்ல விரும்புகிறேன். பல சூடான விவாதங்கள், பல தவறான தகவல்கள் எல்லாம் இன்றைக்கு இந்த அவையிலே தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு நிலையான ஆட்சி வேண்டுமென்று பிரச்சாரம் செய்து கொண்டிருந்தவர்கள், மிக நிலையான, நிலையானது மட்டுமல்ல நேர்மையான நல்லாட்சி கொடுத்துக் கொண்டிருக்கிற இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்றும், ராஜினாமா செய்ய வேண்டும் என்றும் கூறுவது விந்தையிலும், விந்தையாக இருக்கிறது. இந்த விந்தை மனிதர்களை, தலை கவிழ வைக்கும் பணியை தமிழக மக்கள் ஆற்றுவார்கள், அதற்கான முயற்சியிலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் செயல்படும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.



1998 மார்ச் 21]

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை எடுத்து வைக்க வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

நேரம் 1¼ ஆகிவிட்டதால் என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலுள்ள சில கோரிக்கைகளை முதலிலே சொல்லிவிட்டு அதற்குப் பின்னாலே பொதுவான கருத்துக்களுக்கு வர விரும்புகிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கித் தொகுதியில் கூட்டுறவுத் துறையிலே சர்க்கரை ஆலை ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். அது தனியார் துறையிலாவது ஆரம்பிக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்களாலே, ஆளுநர் உரையிலே, பட்ஜெட்டிலே இங்கே அறிவிக்கப்பட்டது. இந்த ஆட்சி வந்து இது மூன்றாவது ஆளுநர் உரையாகும். நான் முதலமைச்சர் அவர்களையும், இந்த அரசையும் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புவது நடப்பாண்டிலாவது அந்தச் சர்க்கரை ஆலையை தொடங்குகின்ற பணியை நிறைவேற்ற வேண்டும் என்பதாகும். அந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் வற்புறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கடந்த ஆட்சியிலே என்னுடைய சட்டமன்றத் தொகுதி என்கின்ற காரணத்தால், ஏறத்தாழ நான்கு ஆண்டுகளாக, புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு கூட்டுறவு நூற்பாலை வேண்டுமென்றே மூடப்பட்டு கிடந்தது. அந்த ஆட்சியிலேதான் கேட்டும் கிடைக்கவில்லை என்றாலும், அதைத் தொடர்ந்து இந்த அரசு வந்ததற்குப் பின்னாலே ஏறத்தாழ 10 தடவைகள் இருக்கும், அத்தனை தடவைகள் கேட்டிருக்கிறேன். மீண்டும் இந்த மூன்றாவது ஆளுநர் உரையிலே மூடிக் கிடக்கின்ற அந்தக் கூட்டுறவு நூற்பாலையைத் திறக்க வேண்டுமென்ற கோரிக்கையை மீண்டும் நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். இதுகுறித்து சம்பந்தப்பட்ட துறை அமைச்சரை நான் நேற்று சந்தித்துப் பேசினேன். இதுகுறித்து முதலமைச்சர் அவர்களோடு பேசி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று சொன்னார். சீக்கிரத்தில், 500 பேர்கள் வேலை பார்த்து, இன்றைக்கு பசியும்,

பட்டினியுமாக வேலை இல்லாமல் இருக்கின்ற அந்தத் தொழிலாளர்களின் நலன் கருதி அந்தத் தொழிற்சாலையை மீண்டும் திறப்பதற்கு உரிய நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமென்று நான் வற்புறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அறந்தாங்கி தொகுதியிலே, ஏம்பல் உள்ளிட்டு 5 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. தாலுகா என்று வருகிறபோது அவை ஆவுடையார்கோவில் தாலுகாவிலே வருகின்றன. தாசில்தாரைப் பார்க்க வேண்டுமென்றால் ஆவுடையார்கோவில் வரவேண்டும். காவல் துறை சரகம், Inspector of Police என்கிறபோது அதுவும் ஆவுடையார்கோவிலில் வருகிறது. தொகுதி என்கின்றபோது அறந்தாங்கித் தொகுதிக்கு உட்பட்டு வருகிறது. ஆனால் ஒன்றியம் என்கின்றபோது அரிமலம் பகுதியில், அரிமலம் ஒன்றியத்திலே, திருமயம் தொகுதிக்கு உட்பட்ட பகுதியிலே வருகிறது. எனவே, அந்த 5 பஞ்சாயத்துக்களையும், அரிமலம் ஒன்றியத்தில் இருக்கிற அந்த 5 பஞ்சாயத்துக்களையும், ஏம்பல் உள்ளிட்டு அதை ஒட்டியிருக்கின்ற 5 பஞ்சாயத்துக்களையும் ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் சேர்க்க வேண்டும். அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் பொதுமக்கள் நலன் கருதி வற்புறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அறந்தாங்கி ஒன்றியம் மிகப் பெரிய ஒன்றியமாக இருக்கிறது. அந்த ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் மணல்மேல்குடி என்ற புதிய ஒன்றியத்தை உருவாக்கினோம். அறந்தாங்கி ஒன்றியம் 58 பஞ்சாயத்துக்களைக் கொண்டிருக்கின்ற பெரிய ஒன்றியமாக இருக்கின்ற காரணத்தாலும், ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகையை வாக்காளர்களைக் கொண்டிருக்கின்ற காரணத்தாலும், அந்தப் பெரிய ஒன்றியத்தை நிர்வாக வசதிக்காக, மக்கள் வசதிக்காகப் பிரிக்க, இரண்டாகப் பிரிக்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

நான் சென்ற முறை இந்த மன்றத்திலே வேண்டுகோளாகச் சொன்னேன். முதலமைச்சர் அவர்களிடம் எழுதிக் கொடுத்திருக்கிறேன். அவர் எழுதித் தாருங்கள் என்று கேட்டதன் அடிப்படையிலே எழுதிக்



கொடுத்திருக்கிறேன். ஆனால், இடையிலே 5,6 புதிய தாலுகாக்கள் அறிவிக்கப்பட்டன, அதிலே இந்த அறிவிப்பு வரும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் சென்ற முறை அறிவிக்கப்படவில்லை. இந்த முறை பட்ஜெட் அறிவிப்பு வருகின்றபோது இதையும் அறிவிக்க வேண்டுமென்று இங்கே வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.

அடுத்து நீண்ட தூரம், ஏறத்தாழ 60 முதல் 70 கிலோ மீட்டர் நீளமான கடற்கரைப் பகுதியை ஒட்டியிருக்கிற மணல்மேல்குடி குறித்து நான் ஏற்கெனவே முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்ததன் அடிப்படையிலேயும், இங்கே உரையாற்றியதன் அடிப்படையிலேயும், அரசு விளக்கம் கேட்டு, அதற்கான குறிப்புகள் எல்லாம் மீண்டும் அரசுக்குப் பரிந்துரை செய்து அனுப்பப்பட்டுள்ளன. எனவே, அந்த மணல்மேல்குடியை தனித் தாலுகாவாக உயர்த்தித் தரவேண்டும், மாற்றித் தரவேண்டுமென்று வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 1-20

அதுபோல மணல்மேல்குடியில் மகளிர் மேல்நிலைப் பள்ளியும் மிமிசல், நாகுடி, அமரடச்சி போன்ற இடங்களிலே இருக்கின்ற உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் இங்கு இதைச் சொல்வதற்குக் காரணம் இந்த ஆளுநர் உரையின் மீதான விவாதத்திலே நான் சொன்னால்தான் அதனை ஒவ்வொரு துறையிலும் இலாக்காக்கள்வாரியாக முடிவு செய்கின்றபோதும், பட்ஜெட்டிலே அறிவிக்கின்றபோதும் அவற்றைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு அரசு அதிகாரிகள் செய்ய முடியும். அமைச்சர்களும் கவனத்திலே எடுப்பார்கள் என்ற காரணத்தினாலே இந்த நேரத்திலே இவற்றையெல்லாம் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே அரசு பாலிடெக்னிக் கல்லூரியை அறந்தாங்கியிலே தொடங்கினோம். புதுக்கோட்டையிலே மட்டும்தான் இப்போது அரசு கலைக்கல்லூரி இருக்கிறது. இது ஒரு வட்டார தலைமையிடமாக இருப்பதாலும் ஒரு பெரிய பகுதியாக இருப்பதாலும் இன்னும் சொல்லப்போனால் பேராவூரணி, பட்டுக்கோட்டை போன்ற அந்தப் பகுதிகளுக்கு வசதியாக இருக்கும் என்பதாலும், அறந்தாங்கியிலே அரசின் சார்பிலே அரசு கலைக்கல்லூரி ஒன்றைத் தொடங்கித் தரவேண்டுமென்று இந்த

நேரத்திலே இந்தக் கோரிக்கையை வற்புறுத்துகிறேன். காரணம் இந்த முறை கூட அதாவது ஏழாவது முறையாகவும் நான் நாடாளு மன்றத்திற்குப் போட்டியிட்டபோது திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ் மாநிலக் காங்கிரஸ் மொத்தக் கூட்டணி பெற்ற வாக்குகள், அது போல செல்வி ஜெயலலிதா, அ.தி.மு.க. அணி பெற்ற மொத்த வாக்குகள் இரண்டையும் மொத்தமாகக் கூட்டினாலும் 5000 வாக்குகள் எனக்கு அதிகமாக அறந்தாங்கிப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். எனவே அந்தத் தொகுதியினுடைய உறுப்பினர் என்ற முறையிலே நன்றியுணர்ச்சியோடு இந்தக் கோரிக்கைகளை நான் வலியுறுத்துகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பரிவோடு இவற்றையெல்லாம் கவனிப்பார்கள், கவனிக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அது போன்று பஸ் கட்டண உயர்வு இந்த முறை மக்கள் அதிருப்தியடையும் காரணங்களிலே ஒன்றாகும். நிச்சயமாக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு இதை ஒத்துக்கொள்வார்கள். அடுத்து வருகிற நான்கு ஆண்டுகளுக்கு பேருந்து கட்டணங்களை உயர்த்தமாட்டோம் என்ற வாக்குறுதியைத் தந்திருந்தாலும் அந்த வாக்குறுதியை மக்கள் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. உயர்த்தப்பட்டிருக்கின்ற அந்தப் பாதிப்பைத்தான் பெரிதாக எடுத்துக்கொண்டார்கள். எனவே பஸ் கட்டண உயர்வைக் குறைக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். நான்கு வருடங்களுக்கு உயர்த்தமாட்டோம் என்பதை வேண்டுமானால் கூட நீங்கள் கைவிட்டுவிட்டு எப்போது எல்லாம் டீசல், பெட்ரோல் விலை உயர்த்தப்படுகிறதோ அப்போது கட்டண உயர்வு உயர்த்தப்படுகிறபோது மக்கள் அதை பொறுத்துக்கொள்வார்கள், தாங்கிக்கொள்வார்கள். ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்திலே இந்த உயர்வானது கைவிடவேண்டிய உயர்வு. இவற்றையும் நீங்கள் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல விவசாயிகளுக்கு சொசைட்டிகளிலே இருக்கின்ற கடனை வசூல் செய்வதிலே பல பகுதிகளிலே ஜப்தி நடக்கிறது என்கின்ற தகவல்களை பல விவசாயிகள் எழுதியும் தொலைபேசியிலும் எனக்கு சொன்னார்கள். அந்த ஜப்தி நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். அது



போல கடன் திரும்பக் கட்டியவர்களுக்கு மீண்டும் கடன் கொடுக்கப்பட வேண்டும் என்று நான் வற்புறுத்துகிறேன். தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக பட்டுக்கோட்டை, அறந்தாங்கி இன்னும் சொல்லப்போனால், அமைச்சர் அவர்களுடைய பகுதியிலே கூட நெல் கொள்முதல் நிலையங்கள் இப்போது ஆரம்பிக்கப்பட்டு அங்கேயெல்லாம் நெல் கொள்முதல் செய்யப்பட்டாலும் விவசாயிகள் பல இடங்களிலே போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். நெல் கொள்முதலை அரசாங்கம் முறையாகச் செய்யவில்லை, அங்கு போனால், 10 நாட்கள், 15 நாட்கள் கழித்து வாருங்கள் என்கிறார்கள். உடனடியாகப் பணம் பட்டுவாடா செய்யப்படுவதில்லை. காரணம் பணம் இல்லை, சாக்கு இல்லை என்று சொல்கிறார்கள். இந்தக் காரணங்களுக்காக மறுக்கப்படுகிறது என்று சொல்லி செய்திகள் எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கின்றன. நேற்றுகூட பேராவூரணியில் பஸ் மறியல்கூடச் செய்திருக்கிறார்கள். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்றால் நீண்டகாலமாக எதையாவது சொல்லி தவறு செய்து, அல்லது அந்தக் கொள்முதலில் தவறு ஏற்பட்டால் போராட்டம் நடத்துவது என்பது ஒன்று. இரண்டு வண்டிகளில் ஏற்றிக்கொண்டு போய், சாக்கு இல்லை என்று சொன்னால் உடனே அந்தச் செய்தியை பத்திரிகையிலே சொல்வதை நாம் எடுத்துக்கொள்ளச் சொல்வது தவறு. சில இடங்களிலே சாக்கு இல்லையென்று சொல்லி மறுநாளே சாக்கு தரப்பட்டிருக்கிறது. பணம் இல்லை என்று சொன்ன அன்று ராத்திரியிலேயே பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவை எல்லாம் ஒரு பெரிய போராட்டத்திற்கோ அல்லது நிகழாத காரியங்களுக்கோ இந்தக் கொள்முதலைப் பொறுத்தவரையில் அப்படி எடுத்துக்கொள்ளக் கூடாது. எப்படியெல்லாம் இருந்தது என்பது உங்களுக்கே தெரியும். அரசு இப்போது எவ்வளவு பொறுப்போடு நடந்து கொண்டு வருகிறது என்பது உங்களுக்குத் தெரியும். மற்றவர்கள் வேறு மாதிரி சொன்னாலும்கூட, அதை மறுத்துச் சொல்கிற பொறுப்பை நீங்கள் ஏற்க வேண்டும்.

பிற்பகல் 1-25

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறைகேடு நடக்கிறது என்றோ, அல்லது

குற்றச்சாட்டாகவோ நான் இதைச் சொல்லவில்லை. உங்களுக்கும் செய்திகள் வந்திருக்கும். ஒரு நாள், விஜய் டி.வி., ராஜ் டி.வி., ஆகியவற்றில் செய்திகளைக் காட்டினார்கள். முதலமைச்சர் அவர்களும் பார்த்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். விவசாயிகளிடம் போய் நேரிடையாகக் கேள்விகளைக் கேட்கிறார்கள். அப்படிக் கேட்கும்போது, 'நாங்கள் நெல் கொண்டு போனோம், சாக்கு இல்லை என்று சொல்லுகிறார்கள், பணம் இல்லை என்று சொல்லுகிறார்கள்' என்று விவசாயிகள் சொன்னதை அப்படியே காட்டினார்கள். அடுத்து Direct Purchase Centre-ல் இருக்கும் அதிகாரியிடம் போய்க் கேட்கிறார்கள். அவர் சொல்லுகிறார். 'ஆமாம், பணம் உடனேயே கொடுக்க முடியவில்லை. பணம் இல்லை' என்று சொல்வதைக் காட்டுகிறார்கள். அதற்கும் மேல், மண்டல அதிகாரியைப் போய்க் கேட்கிறார்கள். அவர் சொல்லுகிறார், 'கொள்முதல் செய்துகொண்டு இருக்கிறோம்' என்று. இப்படி மூன்று செய்திகளையும் டி.வி.யில் காண்பிக்கிறார்கள். இதை நான் சொல்வதற்குக் காரணம், குற்றச்சாட்டு சொல்ல வேண்டும் என்பதற்காக அல்ல, அரசாங்கத்திலே நெல் கொள்முதல் என்று முடிவு எடுக்கின்றபோது....

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனத்திடமிருந்துதான் 1 கோடி சாக்குகளை தமிழக அரசு டெண்டர் மூலமாகப் பெற்றிருக்கிறது. அப்படி சாக்குகளை வாங்குகின்றபோது, இந்த, இந்த மாதத்திற்கு இவ்வளவு சாக்குகள் தேவைப்படும் என்று சொல்லி, முன்னெச்சரிக்கையாகவே நாங்கள் பெற்றிருக்கிறோம். ஆனால், இடையிலே, சாக்குகள் இல்லை என்று சொல்லப்பட்டதற்குக் காரணம் நடுவிலே இரயில் பாதையிலே கோளாறு ஏற்பட்டதனால் இரண்டு அல்லது மூன்று நாட்கள் சாக்குகள் வராமல் போய்விட்டன. இப்போது அந்தப் பிரச்சினை எல்லாம் சரி செய்யப்பட்டு விட்டது.

இன்னொரு விஷயம், முழுச் சாக்குகளையும் நாமே பெற்று விட்டோம். அப்படி சாக்குகள் முழுமையையும் நமக்கு அளித்த திரு. திரிபாதி என்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி மீது மத்திய அரசாங்கம் நடவடிக்கையும் எடுத்திருக்கிறது. மத்திய நிறுவனம் எதற்கும் தராமல், தமிழக அரசுக்கே நீங்கள் ஏன் சாக்குகளைத் தந்தீர்கள் என்று அந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாம் அந்த அளவுக்கு முன்னெச்சரிக்கையாக இருந்து சாக்குகளைப் பெற்றிருக்கிறோம்.





இப்போதுகூட, இரண்டு மாத காலமாக கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து சாக்குகள் அனைத்தையும் யாருக்கும் வெளியே விற்கக்கூடாது என்றும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குத்தான் தரவேண்டும் என்று சொல்லி சாக்குகளும் தரப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் சொல்லும்போது, நெல் கொள்முதல் செய்யப்படவில்லை, மக்கள் போராடுகிறார்கள் என்று சொன்னார்கள். இணைக் கொள்முதலிலே, இப்போது ஏகபோகக் கொள்முதல் திட்டத்திலே கடந்த ஆண்டு கொள்முதல் செய்ததைவிடக் கூடுதலாக நாம் செய்திருக்கிறோம். கிட்டத்தட்ட 9 இலட்சம் டன் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. இதுவரையில், 20 ஆண்டுகள் இல்லாத அளவுக்கு 926 இடங்களிலே Direct Purchase Centres திறக்கப்பட்டிருக்கின்றன. ஆங்காங்கே உள்ள தாலுகா கோடவுன்களிலும் நெல் வாங்கப்பட்டு வருகிறது. விவசாயிகளிடமிருந்து நெல் வாங்கப்பட வேண்டும் என்றும், அதனால் 35 ரூபாய் மானியமாக அவர்களுக்குக் கூடுதலாக விலையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதிலே, சில இடங்களிலே வியாபாரிகள் புகுந்து கொண்டு, வெளியிடங்களிலே குறைவான விலைக்கு நெல்லைப் பெற்றுக்கொண்டு, அங்கே வந்து விற்கின்றனர். அதைத் தடுக்க வேண்டுமென்ற நோக்கத்தில்தான் ஒரு சில இடங்களில் கட்டுப்பாடு விதிக்கப்படுகிறதே அல்லாமல், விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல் எவ்வளவு இருந்தாலும் அதை வாங்கிக் கொள்வதற்கு அரசு தயாராக இருக்கிறது. பணத் தட்டுப்பாடு என்பது நிச்சயமாக இல்லை. சாக்குகள் தட்டுப்பாடு வேண்டுமென்றால் ஓரிரு இடங்களில் இருந்திருக்கலாம். அதைக்கூட ஓரிரு நாட்களிலே சரி செய்யப்படுகின்ற அளவுக்கு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, நானும் குறிப்பினைப் பார்த்துத் தெரிந்து கொண்டேன். இதுவரை 9 இலட்சம் டன் நெல்லை நீங்கள் கொள்முதல் செய்திருக்கிறீர்கள். 17 இலட்சம் டன் நெல்லை வாங்க இருக்கிறீர்கள். 926 இடங்களிலே நேரடிக் கொள்முதல் நிலையங்களைத் திறந்துள்ளீர்கள். இதையெல்லாம் நான் இல்லை என்று சொல்லவில்லை. அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் பிரச்சினையைச் சொன்னேன். நேற்றுகூட அந்தப் பகுதியிலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் என்னிடம் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, இந்தத் தகவலைச் சொல்லி, நான் சட்டமன்றத்திலே இதைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

எனவே, நீங்கள் இந்தப் பிரச்சினையில் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். பிரச்சினை இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வளவுதான். எனக்குச் சமாதானம் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. தஞ்சை மாவட்டத்திலே பல இடங்களிலே நெல்லுக்குப் பணம் தரப்படவில்லை என்பது போன்ற பிரச்சனைகள் இருக்கின்றன. அத்தகைய பிரச்சனைகள் என்னுடைய தொகுதியிலே, பேராவூரணி, பட்டுக்கோட்டை ஆகிய இடங்களிலேயும் இருக்கின்றன. என்னுடைய தொகுதியிலேயிருந்து நேற்று இரவு பல பேர், நெல் கொண்டு போனோம், உடனடியாகப் பணம் கிடைக்கவில்லை. சாலை ஓரத்திலே நெல் மூட்டைகளை அடுக்கிவைத்துவிட்டுப் போகக் கூடிய நிலை இருக்கிறது. 10 நாட்கள் கழித்துத்தான் பணம் தருவோம் என்று சொல்லுகிறார்கள், என்று தொலைபேசி மூலம் தெரிவித்து இதை நீங்கள் சட்டமன்றத்தில் பேசவேண்டுமென்று என்னிடம் கேட்டுக்கொண்டார்கள்...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நடைபெற்ற ஆட்சியிலே, தஞ்சை மாவட்டத்திலே குறுவை நெல்லை வியாபாரிகளுக்கு அளந்துவிட்டு, இரண்டு, மூன்று மாதங்கள் கழித்து பொங்கல், தீபாவளி சமயங்களில் பணம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் அந்த விவசாயிகள். ஒரு நாள், 1000 சாக்குகள் கொள்முதல் நிலையத்தில் இருக்கின்றன என்று வைத்துக்கொண்டால், அன்றைக்கு 1500 மூடை நெல் வந்தால், அன்றைக்குத் தட்டுப்பாடு வரத்தான் செய்யும். குறிப்பிட்ட அளவு தொகையைத்தான் ஒரு சின்ன கடைக்குக் கொண்டு செல்ல முடியும். தனிப்பட்ட ஒருவன், அதிகமாக நெல் வருகிறபோது வாங்கிக் கொள்ள முடியும். அரசாங்கத்தில், அப்படிக் கொடுக்க முடியாது. 'இன்றைக்கு இல்லை, நாளைக்குத் தருகிறேன்' என்று சொல்லுகிற ஒரு சூழ்நிலை அமைகிறது. ஒவ்வொரு நேரம் இப்படி ஏற்படுவது சகஜம்தான். ஒவ்வொரு முறையும் எனக்கும் தொலைபேசியிலே செய்தியைச் சொல்கிறார்கள். நானும் அவர்களுடன் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, இரவு பகல் என்றுகூடப் பாராமல் சாக்குகள், பணம் ஆகியவை கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். எனவே, இதை ஒரு குற்றமாகக் கருதக்கூடாது. மளிகைக் கடை ஒன்று இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம், அங்கேயும் கூட ஒரு நாள் ஒரு சாமான் இல்லாத நிலை, தட்டுப்பாடு வரும். அக்கடைக்காரர் மறுநாள்தான் அப்பொருளை வாங்கிக் கொடுக்கிறார். இதுதான் நிலை.



**திரு. எஸ். திருநாவுக்கரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, நானும் குற்றமாகச் சொல்லவில்லை. இருக்கிற பிரச்சினையைச் சொல்கிறேன். நீங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும். மக்களிடையே யுள்ள அதிருப்தியைப் போக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் நான் இதைச் சொல்கிறேன்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையிலே மற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது பற்றி எந்தவிதமான திட்டங்களும், அறிவிப்புகளும் இல்லை. நான் தமிழக அரசை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இதுபற்றி சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு ஏதாவது ஒரு Corporation தொழில் துவங்குவதற்கு இருப்பதுபோல, உருவாக்கலாம். கிட்டத்தட்ட 40 இலட்சம் இளைஞர்கள் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். அரசாங்கம் முன்பெல்லாம், சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், வங்கிகள் மூலம் கடன் உதவி தந்தது. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க—ஆண்டு ஒன்றுக்கு, உதாரணத்திற்கு 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி Corporation ஏற்படுத்தலாம். அதிலே உடல் உழைப்பு நல்கக்கூடியவர்கள் பெட்டிக் கடை, டீக்கடை வைப்பதில் ஆரம்பித்து, எஸ்.எஸ்.எல்.சி., ஐ.டி.ஐ., பாலிடெக்னிக்வரை படித்த இளைஞர்களுக்கு உதவலாம். அவர்கள் படிப்பை வைத்து, அவர்கள் பெற்றிருக்கின்ற சான்றிதழ்களை வைத்து, அந்தக் Corporation மூலமாக வேலைவாய்ப்பை உருவாக்கித் தரலாம். தமிழ்நாடு அரசாங்கம், 25 கோடி ரூபாய் அல்லது 50 கோடி ரூபாய் என்று நிதி ஒதுக்கி, Employment Development Corporation என்று ஆரம்பித்து இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க முடியும். எல்லோருக்கும் அரசாங்கத்தில் வேலைவாய்ப்பு பெறமுடியாது. ஒவ்வொரு ஆண்டும், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் புதியதாகப் பதிவு செய்வோர் எண்ணிக்கை பெருகிக்கொண்டு வருகிறது. இந்த ஆண்டு 40 இலட்சமாக இருக்கிறது. விரக்தி, தீவிரவாதம் போன்றவை எல்லாம் வருவதற்கு வேலையில்லா திண்டாட்டம்தான் காரணமாக

அமைகிறது. எனவே, அவற்றை மனதில் கொண்டு, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கித் தருவதற்கு ஏதாவது ஒரு Corporation அல்லது நிறுவனம் ஏற்படுத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் இந்த அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் - திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்தான் ஒன்றியக் குழுவினுடைய தலைவர்களுக்கு எல்லாம் ஒரு தலைவர் என்ற அமைப்பை வைத்து அதிலே பொறுப்பில் இருக்கிறார்கள்; எல்லோரும் சேர்ந்திருக்கின்ற அந்த ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள், மாவட்ட கவுன்சிலர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள் போன்ற இவர்களுக்கு அதிகாரம் பாரவலாக்கித் தரவேண்டுமென்பதற்காக, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தலைமையிலே ஒரு குழு போடப்பட்டிருக்கிறது. விரைவிலே இந்தக் குழு பரிசீலனை செய்து, இவர்கள் எல்லாம் முறையாக இயங்கக்கூடிய அளவில், உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள் பரவலாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், தேர்தல் நேரத்தில் வாக்கு கேட்கச் செல்கிறபோது, பஞ்சாயத்துத் தலைவர் செய்யத் தவறிய காரியங்களுக்கு எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்தான் திட்டு வாங்க வேண்டியிருக்கிறது. சின்ன விளக்கு எரியவில்லை என்றாலும்கூட, எம்.எல்.ஏ.வைத்தான் கேட்பார்கள்; 'உங்களுக்கு ஓட்டுப்போட்டோம், விளக்குகூட எரியவில்லை' என்று சொல்வார்கள். இப்படி இருக்கிற இந்தப் பிரச்சினைகளுக்கு எல்லாம் தீர்வு காண வேண்டுமென்று சொன்னால், அதற்கான அதிகாரத்தை உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பரவலாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்திக்கூற விரும்புகிறேன்.

அடுத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் தொகுதி வளர்ச்சி நிதியாக ரூ.25 இலட்சம் என்று அறிவித்தார்கள். இந்த ஆண்டு, அந்த வளர்ச்சி நிதியைக் குறைந்தது 50 இலட்சம் ரூபாயாக உயர்த்தித் தரவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதன் காரணம், உதாரணத்திற்கு, சென்ற ஆண்டு 25 கிராமத்திலே, 25 வேலைகளை எடுத்துக்கொண்டு செய்தோமானால், இந்த ஆண்டு, ஏறியிருக்கிற விலைவாசியினால், 15 இடங்களில்தான் வளர்ச்சிப் பணிகளைச் செய்ய முடியும். ஒரு சட்டமன்ற தொகுதி என்று



எடுத்துக்கொண்டால், குறைந்தது 2 ஒன்றியம், 3 ஒன்றியம், நகராட்சி நூற்றுக்கணக்கான பஞ்சாயத்துகள், ஒரு பஞ்சாயத்துக்கு 5 கிராமங்கள் என்று வருகிறபோது, 25 இடங்களில் மட்டும் வளர்ச்சிப் பணிகளை செய்தால், சட்டமன்ற உறுப்பினருக்குக் கெட்ட பெயர்தான் வருகிறது. இந்த ஊரில் செய்துவிட்டார், இந்த ஊர்தான் அவருக்கு மிக முக்கியம், அந்தப் பகுதியை விட்டுவிட்டார் என்றெல்லாம் கெட்ட பெயர் வருகிறது. அரசாங்கத்தில் மற்ற துறைகளுக்கு ஒதுக்கக்கூடிய தொகைகளைக்கூட குறைத்துக்கொண்டு, இதற்குக் கூடுதலாக ஒதுக்கலாம். சட்டமன்ற உறுப்பினர்கள் என்ன செய்யப்போகிறார்கள்? வேலையை முழுமையாக டெண்டர் வைத்த செய்யலாம், சட்டமன்ற உறுப்பினர் சொல்பவருக்கு வேலை தரவேண்டியது இல்லை, மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பிலே முழுமையாக டெண்டர் மூலம் செய்யலாம். டெண்டர் வைத்து, Influence செய்யாமல், Influence-க்கு ஆட்படாமல் வேலைகளைச் செய்யலாம். சட்டமன்ற உறுப்பினர்கள் தருகிற திட்டங்களை மட்டும் முழுமையாகப் பெற்றுக்கொண்டு வேலைகளைச் செய்யலாம். எனவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும், தொகுதி வளர்ச்சிப் பணிகள் நடைபெறுவதற்கு ரூ.50 இலட்சம் இந்த ஆண்டு ஒதுக்கித்தர உத்தரவிட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, கிராம நிர்வாக அதிகாரிகள் பதவி உயர்வுக்காக போராட்டம் நடத்தி கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை இந்த அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

சத்துணவுப் பணியாளர்கள் இரண்டு நாட்களுக்கு முன்னாலே தங்களை நிரந்தரப்படுத்த வேண்டும்; சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என்று போராட்டத்திலே இறங்கி இருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினையையும் இந்த அரசு கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டு நாட்களுக்கு முன்னாலே நீங்கள் சொன்னதைப் போல 96 உதவி ஆய்வாளர்கள், ஏறக்குறைய 376 காவலர்கள் பணிக்கு தேர்வு பெற்றவர்கள், தங்களுக்கு வேலைக்கு இன்னும் அனுமதி

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1998 மார்ச் 21

கிடைக்காத காரணத்தினாலே—வயது வரம்பைத் தாண்டியதால் வேறு வேலைக்குப் போக முடியாத சூழ்நிலையில், ஆண்டுக் கணக்கிலே இங்கே வந்து எதிர்க்கட்சி உறுப்பினர்களை எல்லாம் பார்த்துப் பார்த்து, அதிகாரிகளையும் பார்த்து மனுக்களைக் கொடுத்துக்கொண்டு அலைகிறார்கள் மூன்று வருடங்களாக. நீங்களும் ஒவ்வொரு தடவையும் பேசுகிறபோது கனிவோடு பரிசீலிப்போம் என்று அரசின் சார்பிலே பதில் சொல்கிறீர்கள். ஆனால், மூன்று ஆண்டுகள் ஆகின்றன. எனவே, இந்த ஆண்டாவது, அவற்றையெல்லாம் விசாரித்து அவர்களுக்கு வேலை கிடைக்க நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல நியாய விலைக் கடைகளைப் பொறுத்தவரையில்—பொதுவாக ஒரு அரசாங்கத்திற்கு நல்ல பெயரோ கெட்ட பெயரோ வருவது, இந்த உணவுத் துறையை வைத்துத்தான். அது ரொம்ப மோசமான துறை; சீக்கிரம் கெட்ட பெயர் தரக்கூடிய ஒரு துறை. இதிலே இருக்கிற அமைச்சர்கள் ஜாக்கிரதையாகச் செயல்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஏனென்றால், கெட்ட பெயர் அவர்களுக்குத்தான் சீக்கிரம் வந்து சேரும்; அதற்காகச் சொல்கிறேன், மோசமான துறை என்று சொல்லவில்லை. ஆனால், பொதுமக்களைப் பொறுத்தவரையில் அது நல்ல துறை. இந்தத் துறையில் உள்ள நிர்வாகிகள் எல்லாம் என்ன கேட்கிறார்கள் என்றால், அதைத் தனித் துறையாக ஆக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். இப்போது அவர்களுக்கு இந்தத் துறை தனித்தனியாக இருக்கிறது. கிராமப்புறங்களில் அரிசி போன்ற அத்தியாவசியப் பண்டங்களைத் தருவது வேறு; டவுனில் அவற்றைத் தருகின்ற இடங்கள் வேறு; அதுபோல Corporation-ல் தருகிற இடங்கள் வேறு. முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன், இந்தத் துறையைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே நுகர்பொருள் வாணிபக் கழகத்தை எல்லாம், அரிசி பருப்பு போன்ற அடிப்படை அத்தியாவசியப் பொருட்களை வழங்குகின்ற துறைகளை எல்லாம்—இப்போது பல்வேறு துறைகள் இருக்கின்றன; கூட்டுறவுத் துறை, உணவுத் துறை என்று; இப்படி இருப்பதை எல்லாம் சேர்த்து ஒரு தனித் துறையாக நீங்கள் ஆக்கினால், அதை இன்னும் effective ஆக monitor செய்ய முடியும். பொது மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அது உதவியாக இருக்கும் என்ற ஆலோசனையையும் இந்த நேரத்தில் நான் அரசுக்கு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1998 மார்ச் 21] [திரு. எஸ் திருநாவுக்கரசு]

அதேபோல, நெசவாளர்கள் பிரச்சினையைப் பொறுத்தவரையில், இங்கே எல்லாம் சொன்னார்கள்; மற்றவர்களும் சொன்னார்கள். தள்ளுபடி எல்லாம் நாங்கள் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம்; இந்த ஆண்டுகூட 30 கோடி ரூபாய் தள்ளுபடி கொடுத்தோம் என்று அமைச்சர் சொன்னார்கள். இருந்தாலும் நெசவாளர்கள் போராடிக் கொண்டு இருக்கிறார்கள். என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், இந்த அரசைப் பொருத்தவரையில், வேஷ்டி, சேலைகளை ஏழை, எளிய மக்களுக்குத் தருகிறபோது, அவற்றை எல்லாம் நெசவாளர்கள் சங்கங்களிலிருந்து வாங்குங்கள். சென்ற ஆட்சியில் அவற்றை வேறு மாநிலங்களிலிருந்து வாங்கினார்கள். வேறு மாநிலங்களிலிருந்து அவற்றை வாங்கியதற்கு ஆதாரமாக நம்முடைய முன்னாள் மத்திய அமைச்சர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்கூட இங்கே ஒரு சைக்கிள் கடை அட்ரஸைப் படித்தார்கள்: சைக்கிள் கடை, லாண்டரி கடை—இவற்றிலிருந்து பல கோடி ரூபாய்க்கு அவை கொள்முதல் செய்யப்பட்டதாக வவுச்சர்களைக் கொண்டுவந்து படித்தார்கள். வேஷ்டி, சேலைகளை வேறு மாநிலங்களில் வாங்குவது தவறு என்பது என்னுடைய அபிப்பிராயம். இங்கு ஆண்டுக்காண்டு தேவைப்படுகிற வேஷ்டி, சேலைகளை இங்கு இருக்கிற நெசவாளர்கள் மத்தியிலே மொத்தமாக கோ-ஆப்டெக்ஸ் மூலமாக நீங்கள் கொள்முதல் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கிறேன்........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடிதான் இந்த அரசு வந்ததிலிருந்து, S.W.S.-க்கு மட்டுமல்ல, அனைத்துத் துறைகளுக்கும் தேவையான அனைத்துத் துணிகளையும் ஒரு மீட்டர் கூட வெளியே வாங்காமல், கைத்தறித் துறைக்கு ஒதுக்கப்பட்டு, அதற்கு மேல் தேவை இருந்தால் விசைத்தறிக்கு ஒதுக்கி, அதுவும் தமிழகத்தில் உள்ள விசைத்தறிக்கே ஒதுக்கி, அதற்குரிய நூலையும் கூட்டுறவு நூற்பாலைகளிலே கொடுத்து, அந்த முறைதான் இப்போது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இன்னும் எந்த அளவிற்கு கைத்தறியை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்களோ, அந்த அளவிற்கு நாங்கள் உற்பத்தி செய்து கொடுப்பதற்கு எங்களுக்கு சக்தி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1998 மார்ச் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. திருநாவுக்கரசு, நீங்கள் இரண்டு நிமிடங்களில் பேச்சை முடியுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** முடித்துவிடுகிறேன். இதுபோல அரசு கவனம் செலுத்தி, நெசவாளர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முன்வர வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றபடி, நடைபெற்று முடிந்த தேர்தல் குறித்தும் இங்கே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கருத்துக்களைச் சொன்னார்கள். என்னைப் பொருத்தவரையில் தமிழக மக்கள் சட்டமன்றத் தேர்தல் என்றால், சட்டமன்றத் தேர்தலுக்குச் சிந்தித்து ஒருமாதிரியாகவும், நாடாளுமன்றத் தேர்தல் என்றால், நாடாளுமன்றத்திற்குச் சிந்தித்து தனியாகவும்—இப்படிப் பாகுபடுத்தித் தான் கடந்த காலங்களிலே வாக்களித்திருக்கிறார்கள். இந்த இரண்டு தேர்தல்களையும் ஒன்றாகக் குழப்புவது தவறு என்பது என்னுடைய கருத்தாகும். சட்டமன்றத்திலே இப்போது ஆட்சியில் இருக்கிற கட்சி நாடாளுமன்றத் தேர்தலிலே குறைவான எண்ணிக்கையைப் பெற்றுவிட்டது என்கிற காரணத்தினாலே, ராஜினாமா செய்ய வேண்டுமென்று சொல்வதோ, அல்லது இந்த அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டும் என்று சொல்லுவதோ சரியல்ல ஒரு வாதத்துக்காக எடுத்துக்கொண்டால், ஒருவேளை அப்படி ராஜினாமா செய்வதாலோ, அல்லது டிஸ்மிஸ் செய்வதாலோ அதன் பிறகு மீண்டும் தேர்தல் வந்து, அந்தத் தேர்தலிலே மக்கள் இப்படி டிஸ்மிஸ் செய்யப்பட்டவர்களுக்கேகூட வாக்களித்தால் என்ன ஆகும்? பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்றக் குழுத் தலைவர் இங்கே பேசும்போது ஒன்றைச் சொன்னார். ஆனால் 1980-ல் நடந்தமாதிரி திரும்ப வந்துவிட்டால் மீண்டும் அவர்களுக்குத்தான் ஆபத்து. மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா செய்யவேண்டிய அந்தச் சூழ்நிலையும், அதனால் மத்தியில் இருக்கும் திரு. வாஜ்பாய் ஆட்சி கவிழ்ந்துபோகவேண்டிய சூழ்நிலையும் வரும்.

பிற்பகல் 1-40

இப்படி 6 மாதங்களுக்கு ஒருமுறை மாநிலத்திற்குத் தேர்தல். மத்திய ஆட்சிக்குத் தேர்தல் என்று வந்துகொண்டிருந்தால், தேர்தல்தள்தான் நடந்துகொண்டிருக்குமே தவிர, யாரும் ஆட்சி நடத்திக் கொண்டிருக்க



1998 மார்ச் 21] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

முடியாது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நாடாளுமன்றத் தேர்தலோடு இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கும் சேர்த்து தேர்தல் நடந்து, அதிலே ஆளுங்கட்சிக்குச் சாதகமாக மக்கள் வாக்களித்துவிட்டார்கள் என்பதற்காகமட்டும் நான் சொல்லவில்லை. அவர்கள் தோற்றிருந்தாலும் இதையேதான் நான் சொல்லியிருப்பேன். ஏற்கெனவே கடந்த காலங்களில் அது அண்ணா தி.மு.க. ஆட்சியிலும் சரி, காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோதிலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோதிலும் சரி, பல நேரங்களில் ஆட்சியில் இருந்த கட்சிகளின் உணர்வுகளுக்கு மாறாகக் கூட பல தேர்தல்களில் மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். அதனாலேயே அந்த ஆட்சிகள் போய்விட வேண்டும் என்பது அல்ல. எனவே சட்டமன்றத் தேர்தலாக இருந்தாலும் சரி, நாடாளுமன்றத் தேர்தலாக இருந்தாலும் சரி, மக்கள் வாக்களித்து இருப்பது இந்த அரசை மனதிலே கொண்டு அல்ல. ஏற்கெனவே இருந்த முதலமைச்சர் மீண்டும் முதலமைச்சராக வரவேண்டுமென்பதற்காகவும் அல்ல என்பதை நான் திட்டவட்டமாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இருந்தபோதிலும், இப்படி மக்கள் வாக்களித்திருப்பது, தான் நிரபராதி என்பதற்காகவும், தன் மீதுள்ள குற்றச்சாட்டுகள் எல்லாம் பொய் என்று மக்கள் வாக்களித்துவிட்டார்கள் என்றும் சொல்லுவது, அவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வதாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆட்சி மாற்றம் மத்தியிலே ஏற்பட்டதற்குக்கூட யார் யாரையோ காரணமாகச் சொல்கிறார்கள். யார் யாரையோ குறை சொல்கிறார்கள். வெடிகுண்டுதான் காரணம் என்கிறார்கள். நான் முன்பு சொன்னதைப்போல பஸ் கட்டண உயர்வு அல்லது சட்டம், ஒழுங்கு இப்படியெல்லாம் அவரவர்களுக்குத் தெரிந்ததைச் சொன்னாலும், நான் குற்றம் சொல்ல விரும்புவது - இங்கே இருக்கிற முதலமைச்சரை அல்ல - தி.மு.க. தலைவராக இருக்கிற கலைஞரையும், தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் மூப்பனார் அவர்களையும்தான் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்குக் காரணம், தேர்தல் என்று வருகிறபோது, தேர்தலில் இரண்டு அணிகளைத்தான் மக்கள் பார்க்கிறார்கள். நான் மூன்றாவது அணியில் போட்டியிட்டேன். மூன்றாவது அணிக்கு மக்கள் முக்கியத்துவம் கொடுக்க விரும்புவதில்லை. ரேஸில்கூட முதலில் வரும் குதிரை மீதும், இரண்டாவதாக வரும் குதிரை மீதும்தான் பணம் கட்டுவார்கள். 3-வது, 4-வது குதிரைக்கு

யாரும் பணம் கட்டுவது இல்லை. அதுமாதிரி, ஒன்றா இரண்டா என்று பார்க்கிறபோது, அந்த அணிகளை உருவாக்குவதிலே, ஓவர் estimate, over confidenceஸோடு திராவிட முன்னேற்றக் கழகமும், தமிழ் மாநிலக் காங்கிரசும் இந்த முறை நடந்துகொண்டன என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. இங்கே இருக்கிற எல்லாக் கட்சிகளையும், குறிப்பாக மார்க்சிஸ்ட் போன்ற கட்சிகளையும், எங்களைப் போன்றவர்களையும் சேர்த்துக் கொண்டிருக்கலாம். சேர்த்துக்கொள்ளவே மறுத்துவிட்டீர்கள். எனக்கு ஒரு சீட் கொடுத்திருந்தால் நான் ஜெயித்திருப்பேன். அல்லது நான் அந்த இடத்தை உங்களுக்கு விட்டுக் கொடுத்திருந்தால் நீங்கள் ஜெயித்திருப்பீர்கள். புதுக்கோட்டையிலே நீங்கள் எனக்கு விட்டுக்கொடுத்து ஒரே அணியிலே நான் போட்டியிட்டிருந்தால், தமிழ்நாட்டிலேயே இரண்டு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் நான் ஜெயித்திருப்பேன். இப்போதும் 2 லட்சத்து 30 ஆயிரம் வோட்டுகள் பெற்றிருக்கிறேன். தரமாட்டேன் என்று சொல்லிவிட்டீர்கள். நான் பார்த்தேன். என்னால் முடிந்தவரைக்கும் உங்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று நீங்கள் 3 இடங்களில் வரமுடியாமல் செய்துவிட்டேன்.

அதுமாதிரி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி. என்ன ஆனது? மதுரையில் 1 லட்சத்து 10 ஆயிரம் வாக்குகள் பெற்றிருக்கிறார்கள் அவர்கள். அந்த இடத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டுக்குக் கொடுத்து இருந்தால் அது வெற்றி பெற்றிருக்கும். அல்லது தி.மு.க. அங்கே போட்டியிட்டிருந்தாலும் தி.மு.க வெற்றி பெற்றிருக்கும். கூட்டணி பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

"உருவு கண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து"

என்று சொல்வார்கள். அதுமாதிரி, சின்னச் சின்ன கட்சிகள் தானே, போனால் பரவாயில்லை, போன தடவை இரண்டரை லட்சம் ஓட்டு வித்தியாசத்தில் ஜெயித்தோம், அதிலே 50,000 போனாலும் இரண்டு லட்சம் ஓட்டில் வெற்றி பெறலாம், அதுமாதிரி போன தடவை ஒன்றரை லட்சம் ஓட்டு வித்தியாசத்தில் ஜெயித்தோம், அதிலே 50 ஆயிரம் போனாலும் 1 லட்சம் ஓட்டில் ஜெயித்துவிடலாம் என்று நினைத்துவிட்டீர்கள். அதுபோல, தமிழ் மாநிலக் காங்கிரசின் ,தலைவர், என் மரியாதைக்குரிய மூப்பனார் அவர்களும் விடாப்பிடியாக 20-க்கு 20-லேதான் நிற்போம் என்று அவர் அடம் பிடிக்க. அதற்குத் தக்கவாறு



நீங்களும் சேர்ந்து அடம் பிடிக்க, ஆக இரண்டு பேரும் சேர்ந்து மற்றவர்களுடன் இடங்களைப் பகிர்ந்து கொள்ளத் தயாராகவே இல்லை, போட்டியிட்டீர்கள். அதனுடைய பலனைத்தான் இன்றைக்கு அனுபவிக்கிறீர்கள். "ஆட்சியில் இருந்து நீங்கள் போகவேண்டும்" என்ற கோஷங்கள் வரை கேட்க வேண்டிய, அனுபவிக்கவேண்டிய நிலை வந்தது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே இருந்து 30 பேர் அந்த அணியில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த 30 பேரால்தானே அங்கே ஆட்சி வந்தது. பி.ஜே.பி. அகில இந்திய அளவில் சென்ற முறை பெற்ற இடங்களில் கூட 60 இடங்களை இழந்திருக்கிறது. புதிதாக 50 இடங்களைப் பெற்றிருக்கிறது. பி.ஜே.பி. ஒன்றும் தலை சிறந்த இயக்கம் என்று மக்களிடம் ஆதரவு பெற்று ஆட்சிக்கு வந்துவிடவில்லை. தமிழ்நாட்டால்தான் ஆட்சிக்கு வந்தது. இந்த 30 பேரில் 15 பேர் மாறியிருந்தால் இன்றைக்கு பி.ஜே.பி. ஆட்சியில் இருக்கிற நிலையே வந்திருக்காது. என்ன நடந்திருக்கும் ? ஆட்சிக்கே வந்திருக்கமுடியாது.

பிற்பகல் 1-45

இங்கேகூட, அருமை நண்பர் ரஜினிகாந்த் பற்றி பா.ம.க. உறுப்பினர்கள் மறைமுகமாகச் சொன்னார்கள். அவர்கள் சொல்கிற போது, வெற்றி பெற்றால் அவரைப் பாராட்டுவதும், தோற்றுப் போனால் ரஜினிகாந்துக்கு செல்வாக்கு இல்லை என்று சொல்வதும் தவறாகும். அவர் அரசியல்வாதியல்ல. நாட்டின் நலன் கருதி அவருக்கு நியாயம் என்று தோன்றியதைச் சொல்கிறார். வெற்றி, தோல்வி பற்றி அவர் கவலைப்படுவதில்லை. சென்ற முறை என்ன சொன்னார்? அந்த 'ஆட்சி மீண்டும் வந்தால் தமிழ்நாட்டை அந்த ஆண்டவனால்கூட காப்பாற்ற முடியாது' என்று சொன்னார். அப்போது என்ன சொன்னோம், பசுமரத்தாணிபோல் தமிழ்நாடு முழுவதும் புயல் மாதிரி மக்களிடத்திலே பாதிப்பை உண்டாக்கியது என்று பாராட்டினோம். இப்போதும் சொன்னார், உடனே ரஜினிகாந்திற்கு செல்வாக்கு இல்லை என்று சொல்லிவிட முடியாது. அவர் சொன்னதை மீறி இன்றைக்கு நடந்து இருக்கிறது என்று சொன்னால், நான் சொன்னமாதிரி கூட்டணி ஒன்று. அதுமட்டுமல்ல, அவர் சொன்னதிலே வந்த பாதிப்பை இப்போது மக்கள் எண்ணிப்பார்க்கிறார்கள். ஆட்சி அமைப்பதற்கு முன்னாலே கடந்த 10 நாட்களாக எவ்வளவு டிராமா நடந்தது. அகில இந்திய

அளவிலேயும், தமிழ்நாட்டிலே வாக்களித்த மக்களும் சிந்தித்துப் பார்க்கிறார்கள். அகில இந்திய அளவிலே எல்லா அரசியல் கட்சித் தலைவர்களுடைய புருவமும் உயர்ந்திருக்கிறது. தமிழ்நாட்டினுடைய சில அரசியல் கட்சிகளைக் குறிப்பிட்டுப் பார்க்கிறபோது 6 அம்ச கோரிக்கை என்று 6 அம்ச கோரிக்கையைச் சொன்னார்கள். இன்றைக்கு 6 அம்ச கோரிக்கைகளில் எத்தனை அம்சங்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றன? நான்கூட பத்திரிகையாளரிடத்திலே கேட்டேன். இந்த ஆட்சி அமைக்கிற கட்சிக்குத் துணையாக இருக்கிற கட்சிகளும் சொல்ல வேண்டும், இந்த ஆதரவைப் பெற்றுக்கொண்டு ஆட்சி அமைக்கிற பி.ஜே.பி.-யும் சொல்ல வேண்டும்; இந்த 6 அம்சங்களிலே எந்தெந்த அம்சங்களை எல்லாம் நீங்கள் ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்பதைத் தெளிவாக நாட்டு மக்களுக்குச் சொல்ல வேண்டும். இல்லையென்றால், ஏதோ பேரம் நடந்திருக்கிறது என்றுதான், அதனுடைய அடிப்படையிலேதான் ஆட்சி ஏற்பட்டிருக்கிறது என்றுதான் மக்கள் நினைப்பார்கள் என்று நான் பத்திரிகையிடத்திலே சொன்னேன். அதைத்தான் இங்கேயும் சொல்கிறேன். இப்போதும் சொல்கிறேன்; பேரம்தான் நடந்திருக்கிறது. என்ன பேரம் நடந்திருக்கிறது?

இன்றைக்கு சட்ட அமைச்சர் 110-விதியின்கீழ், ஓர் அறிக்கை வைத்தார்கள். அதிலே சட்ட அமைச்சர் வந்த உடனே, என்ன சொன்னார்—சட்டம் மற்றும் நீதித் துறையினுடைய அமைச்சர் பொதுவாக கடந்த காலத்திலே, தமிழ்நாடாக இருந்தாலும் சரி, அகில இந்திய அளவிலே மத்திய அரசாக இருந்தாலும் சரி, சட்ட அமைச்சரை போடுகிறபோது, அவர்கள் சட்டத்திலே, சட்டத் துறையிலே விற்பன்னர்களாக இருக்கிறார்களா என்று பார்த்துப் போடவில்லை என்றாலும், குறைந்தபட்சம் சட்டக் கல்லூரிக்குப் போய் இருக்கிறார்களா, சட்டம் படித்து இருக்கிறார்களா என்று பார்த்து சட்ட அமைச்சரைப் போடுவார்கள். நானும் பார்த்தேன், சட்டத் துறை அமைச்சரை, நீதித் துறை அமைச்சரை பார்க்கிறபோது, அவர் எம்.ஏ., எம்.பில், பி.எச்.டி.,-டாக்டரேட், மற்ற துறையிலே-படித்திருக்கிறார், ஆனால் சட்டம் படித்ததாகத் தெரியவில்லை சட்டமே படிக்காத ஒருவர் சட்ட அமைச்சர். (சிரிப்பு) இந்தியாவுக்கே நீதித் துறை அமைச்சர். நாடு எங்கே போய்க் கொண்டிருக்கிறது? அல்லது வாஜ்பாய் எங்கே போய் கொண்டிருக்கிறார்? அல்லது யாரை திருப்திபடுத்து வதற்காக பிரதமர் இப்படி அறிவித்திருக்கிறார்? துறைகளை கூட்டணிக்



கட்சிகள் கேட்டுப் பெறுகிறார்கள். பெறட்டும். இந்த நாட்டு நலன் கருதி, மக்களுடைய நலன் கருதி இன்றைக்குத் துறைகள் பெறப்பட்டு இருக்கிறதா என்று நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்ன Point of order?

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே அமைச்சராக இருப்பவர்கள் எல்லாம் அந்தந்தப் படிப்பைப் படித்துவிட்டுத்தான் அமைச்சர்களாக இருக்கிறார்களா? (சிரிப்பு)

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் சொல்லும்போதே சரியாகத்தான் சொன்னேன். சட்டத் துறையைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டிலே சட்டம் படிக்காத யாரும் சட்ட மந்திரியாக இருந்ததாக எனக்கு ஞாபகம் இல்லை, இருந்தால் திரு. தாமரைக்கனி சொல்லட்டும். அதுமாதிரி, இந்திய அளவிலேகூட, இந்திய நாட்டினுடைய நீதித் துறை அமைச்சராக, சட்டத் துறை அமைச்சராக சட்டம் படிக்காத யாரும் மத்தியிலே சட்ட அமைச்சராக இருந்ததாக இதுவரை எனக்குத் தெரியவில்லை. அப்படியிருந்து அவர்கள் சொன்னால் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சுந்தரம், உட்காருங்கள் (குறுக்கீடு)....... தாமரைக்கனி, நீங்கள் என்ன இதற்கு சிபாரிசா? உங்கள் வேலையைப் பாருங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** எனவே, இவற்றையெல்லாம் நான் . . .

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** Point of Order, Sir, Please. I am on a Point of Order, Sir *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாமரைக்கனி அவர்கள் முறைகேடாகப் பேசக்கூடாது. கொஞ்சம் இருங்கள். இடையிலே தயவுசெய்து யாரும் பேசாதீர்கள். தாமரைக்கனி நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தாமரைக்கனி, கொஞ்சம் இருங்கள். அவர் ஒன்றும்

கேவலமாகப் பேசவில்லை. அவர் படித்தவர், எம்.ஏ. வாங்கி இருக்கிறார், எம்.ஃபில், வாங்கி இருக்கிறார், பி.எச்.டி. வாங்கியிருக்கிறார் என்று சொன்னார். அவர் சொன்ன ஒரே கருத்து, சட்ட அமைச்சர் சட்டம் படிக்கவில்லை என்பதுதான். நீங்கள், தமிழ்நாட்டிலே எல்லோரும் படித்தவர்களாக இருக்கிறார்களா என்று கேட்டீர்கள். அவர் அதற்குப் பதில் சொன்னார். எனக்கு தெரிந்தவரையில் இதுவரையில் தமிழ்நாடு அமைச்சரவையில், எந்தக் கட்சி அமைச்சராக இருந்தாலும், சட்டம் படித்தவர்கள்தான் சட்ட அமைச்சராக இருந்திருக்கிறார்கள். அப்படி யில்லையென்று, தாமரைக்கனி சொன்னால், நான் ஏற்றுக்கொள்கிறேன் என்றார். இதிலே பிரச்சினை கிடையாது. இனிமேல் பேசினால் நடவடிக்கை எடுப்பேன். சுந்தரம் உட்காருங்கள், நான் திருநாவுக்கரசு பேசியதை அனுமதிக்கிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் யாரையும் குறிப்பாகச் சொல்வதற்காக இதைச் சொல்லவில்லை. நிர்ப்பந்தங்கள் எப்படி உருவாக்கப்பட்டிருக்கின்றன. நிர்ப்பந்தத்திற்கு. . . . . (குறுக்கீடு)

பிற்பகல் 1-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. தாமரைக்கனி, வேண்டுமென்றே கடைசி நேரத்தில் ஏதாவது செய்ய வேண்டும் என்பதற்காகப் இப்படிப் பேசக்கூடாது. நீங்கள் பேச வேண்டிய நேரம் வேறு. அறையிலே வந்து அவசரமாக ஊருக்குப் போக வேண்டும், முதலிலே பேசிவிடுகிறேன் என்றீர்கள். நான் பேச விட்டுவிட்டேன். நான் உங்களைக் கூப்பிட்டுக் கேட்டேன். நீங்கள் ஊருக்குப் போகவேண்டும் என்று சொன்னீர்களே, ஏன் இங்கே உட்கார்ந்திருக்கிறீர்கள் என்று கேட்டேன். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். நான் பேசி முடிக்கிறேன். (குறுக்கீடு) நான் இப்போது பேசிக் கொண்டிருக்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி :** அப்போதுள்ள நிலைமை வேறு, இப்போதுள்ள நிலைமை வேறு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்ன நிலைமை? (குறுக்கீடு) அப்படியானால் இறந்தவர் உயிரோடு வந்துவிட்டாரா? (குறுக்கீடு) நீங்கள் என்னிடம் சொன்னது அதுதானே. நீங்கள் சொன்னதைத்தான் சொல்கிறேன். நான் இப்போது என்ன சொல்கிறேன் என்றால் -



நீங்கள் சொல்லிவிட்டீர்கள் - நான் இரண்டு பட்டம் பெற்றிருக்கிறேன். ஆனால், எங்கள் முதலமைச்சருக்கு இருக்கிற அறிவிலே ஆயிரத்திலே ஒரு பங்கு எனக்குக் கிடையாது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பி. ஆர். சுந்தரம் :** தலைவர் அவர்களே, . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் என்னைத் தான் சொன்னேன். உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவர் அவர்களே . . .

**திரு. பி.ஆர். சுந்தரம் :** தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் சத்தம் போட்டுப் பேசினால், வெளியேற்றுவேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. இரா. தாமரைக்கனி :** **

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, தங்களைப் பற்றியே, ** என்று சொன்ன அந்த வார்த்தைகள் அவைக்குறிப்பிலே இடம் பெறக்கூடாது, நிச்சயமாக இடம் பெறக்கூடாது என்ற உத்தரவை—என்னுடைய வேண்டுகோளை ஏற்று—இடுமாறு வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பி.ஆர். சுந்தரம் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் மைக்கிலே பேசிக் கொண்டு இருக்கிறீர்களா? (குறுக்கீடுகள்) உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் எல்லோரும். திருநாவுக்கரசு, உங்கள் பேச்சை முடியுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். திருநாவுக்கரசு, உங்கள் பேச்சை முடியுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். திருநாவுக்கரசு, நீங்கள் சீக்கிரம் பேச்சை முடியுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது, மத்தியிலே ஊழல் இல்லாத, நேர்மையான, நாணயமான ஒரு நல்ல ஆட்சியை அமைப்போம் என்ற வாக்குறுதியோடு இன்றைக்குத்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1998 மார்ச் 21

தேர்தலிலே வெற்றி பெற்று ஆட்சியை அமைத்திருக்கிற திரு. வாஜ்பாய் அவர்கள், தன்னுடைய அமைச்சரவையிலே இடம் பெற்றிருக்கிற சில அமைச்சர்கள் . . . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் உட்காருங்கள் என்று சொன்னால், நீங்கள் உட்காரவேண்டும். (குறுக்கீடுகள்) அதை நீங்கள் அடிக்கடி செய்திருக்கிறீர்கள், இரண்டு பேரும். இப்போது சும்மா இருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். திருநாவுக்கரசு, உங்கள் பேச்சு முடிந்ததாக நான் கருதுகிறேன்.

**திரு. பி. ஆர். சுந்தரம் :** தலைவர் அவர்களே . . .

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, திருநாவுக்கரசு அவர்கள் பேசும்போது, என்னைக்கூட குறை கூறிச் சொன்னார். மூப்பனாரைக் குறை கூறிச் சொன்னார். கூட்டணி பற்றிப் பேசும்போது, திராவிட முன்னேற்றக் கழகத்தையும் தாக்கிப் பேசினார். தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியையும் தாக்கிப் பேசினார். அப்போது எல்லாம் குறுக்கிடவில்லை. ஏன் என்றால், அவருடைய பேச்சு ஒழுங்கு முறையோடு, சட்டமன்றத்தினுடைய மரபுக்கு ஏற்ப, அமைந்திருந்தது. நான் முதலிலேகூடச் சொன்னேன். ஆழமான கருத்துக்களோடு பேசக் கூடிய பலர் முன்வரிசையிலே இருக்கிறார்கள் என்று சொன்னேன். அதிலே ஒருவர் திருநாவுக்கரசு என்பதை நானும் அறிவேன், தாங்களும் அறிவீர்கள். ஆனால் அவருடைய பேச்சில் இறுதியாக நன்றாக அமைந்து விட்டது என்ற ஒரே காரணத்திற்காக, ஒரு குழப்பத்தோடு இந்த அவையை முடிக்க வேண்டும் என்கிற நிலையில், சில மாண்புமிகு உறுப்பினர்கள் ஈடுபடுவது முறையல்ல. அதற்குத் தாங்கள் இடம் தரக்கூடாது. இது நான் தங்களிடத்திலே வைக்கின்ற ஒரு தாழ்மையான வேண்டுகோள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருநாவுக்கரசு அவர்களை, பேசி முடிக்கச் சொன்னது இந்த விவகாரத்திற்காக அல்ல. நேரம் ஆகிவிட்டது என்ற காரணத்தால், உங்களை ரொம்ப நேரத்திற்கு முன்னாலேயே 2 நிமிடத்தில் பேசி முடியுங்கள் என்று சொன்னேன். இங்கே அவையில் இருக்கிற எல்லா உறுப்பினர்களும் எனக்கு உத்தரவு போட்டால், நான் இங்கே தலைவராக இருக்கவேண்டிய அவசியம் இல்லை. திரு. திருநாவுக்கரசு பேசுங்கள்.



1998 மார்ச் 21]

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது, முக்கியமாக, தேர்தலுக்குப் பின்னால் அமையப் போகிற அரசைப் பற்றி சில அபிப்பிராயங்களை மட்டும் பொதுவாகச் சொல்வது என்னுடைய கடமை என்கிற காரணத்தாலே சொன்னேன். இவர், சிறப்புமிக்க பிரதமராகத் திகழ்வார் என்றெல்லாம் எதிர்பார்க்கப்பட்ட, நாணயமான, நேர்மையான ஒரு நல்ல மனிதர் என்று போற்றப்படுபவர் என்றெல்லாம் சொல்லப்படுகிற திரு. வாஜ்பாய் அவர்கள், தன்னுடைய அமைச்சரவையிலே அமைச்சர்களைத் தேர்வு செய்கிறபோது அவருடைய கேபினெட் அமைச்சர்களில் இந்தந்த அமைச்சர்கள், இன்னின்ன தேதிகளில், இந்தக் கோர்ட்டிலே, ஸ்பெஷல் கோர்ட்டிலே போய் நின்றார்கள். இந்த வழக்கிலே நின்றார்கள் என்றெல்லாம் பத்திரிகைகளிலே வரக்கூடிய அளவிற்கு, தன்னுடைய அமைச்சரவையிலே அமைச்சர்களைத் தேர்வு செய்திருப்பது நியாயம்தானா என்பதையும், எந்தக் கட்டாயத்தின் அடிப்படையிலே, எந்த நிபந்தனையின் அடிப்படையிலே இவை எல்லாம் நடக்கின்றன என்பதையெல்லாம் நாட்டு மக்கள் சிந்திப்பார்கள். இது ஆட்சி அமைக்கின்ற பி.ஜே.பிக்கு நிச்சயமாக பெருமை சேர்க்காது என்பதை நான் நிச்சயமாகச் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-55

இன்னொன்று, கூட்டங்களில் பேசுகிறபோது — அமைச்சரவையிலே இடம் பெறுகிறபோது சென்ற முறையும்கூட இடம் பெற்றிருந்தார்கள். பெறுகிற அந்த இலாக்கா இந்த நாட்டு மக்களுக்கு நன்மை செய்வதாக இருக்கவேண்டும். எத்தனையோ இலாக்காக்கள் இருக்கின்றன. Rural Development இருக்கிறது. Water Irrigation Resources இருக்கிறது. P.W.D. என்று எத்தனையோ இலாக்காக்கள் இருக்கின்றன. மத்தியிலே இருக்கிற மக்களோடு நேரடியாகத் தொடர்புடைய எத்தனையோ துறைகள் இருக்கின்றன. ஆனால் என்ன துறைகள் கேட்டு பெறப்படுகின்றன? சட்டம் படிக்கவில்லையென்றாலும், சட்டமும் நீதியும்தான், ஒன்று. இன்னொன்று என்ன வேண்டும்? நிதி வேண்டும். நிதியிலே என்ன வேண்டும்? வருவாய் வேண்டும், பேங்கிங் வேண்டும். இதெல்லாம் எதற்காக? அதுபோல் இன்னொரு அமைச்சருக்கு என்ன தரப்பட்டிருக்கிறது, Personnel Department அதுகூட என்ன கேட்டு எழுதுகிறார்கள்? C.B.I. அதிலே வரும் என்று நினைத்துக்கொண்டு பழைய மாதிரி கேட்டிருக்கிறார்கள். இப்போது Supremect Court -

directions பிரகாரம், அது Autonomous body. அது தனியாக இருக்கவேண்டும் என்று 15 நாட்களுக்கு முன்னால் உத்தரவு போட்டிருக்கிறது. அதுவும் தெரியாமல்கூட ஒரு வேளை கேட்டிருக்கலாம். Personnel Department-லே C.B.I..-யும் வரும் என்று நினைத்துக்கொண்டு, இப்படி C.B.I. வேண்டும், Income Tax வேண்டும் என்றெல்லாம் இலாக்காக்கள் கேட்டு வாங்கியிருப்பது, இந்த நாட்டு மக்களுக்கு நன்மை செய்யவா ? தமிழ்நாட்டு மக்களை மனதிலே கொண்டா ? வாக்களித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி காட்டவா? நன்மை செய்யவா? தங்கள் மீதுள்ள வழக்குகளைக் காப்பாற்றிக்கொள்ள, தங்களுடன் இருப்பவர்களுடைய வழக்குகளிலிருந்து அவர்களைத் தப்பிக்க வைப்பதற்காக, இன்னும் சிலபேரைப் பழிவாங்கவேண்டு மென்கிற உணர்வோடு இந்த இலாக்காக்கள் எல்லாம் கேட்டுப் பெறப்பட்டிருக்கிறதே தவிர, நாட்டு மக்களுடைய நலனுக்காக அல்ல என்பதை வாக்களித்திருக்கிற மக்கள் நிச்சயமாக சிந்தித்துப் பார்ப்பார்கள். அதற்கு இடம் தந்திருக்கிற பி.ஜே.பி.-யும்—மக்கள் இந்த முறை ஏதோ தந்திருக்கிற வாக்குகளைக் கூட பயன்படுத்திக் கொள்ளாமல்—இந்தப் பாணியிலே போனால், அடுத்த முறை இந்த இடத்தைக் கூட அவர்கள் பெறுவார்களா என்கிற சந்தேகம் நிச்சயமாக எழும். அந்த அளவிலேதான் மக்களுடைய தீர்ப்பு அமையும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, நான் அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிந்தன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (23-3-1998) காலை 9-30 மணிக்குக் கூடும்.

இதிலே பேசவிருக்கும் முன் வரிசையில் அமர்ந்திருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களான, திரு. பி. வெங்கடசாமி, திரு. கிருஷ்ணசாமி ஆகியோர் திங்கட்கிழமை காலை சுருக்கமாகத் தங்கள் பேச்சை முடித்துக் கொள்ளவேண்டும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-57 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

48. மதுரை, யூனியன் மோட்டார்ஸ் சர்வீஸஸ் நிறுவனத்தினரிடமிருந்து, மதுரை திருவாளர்கள் இந்தியன் பார்வையற்றோர் கழகம் மாருதி ஆம்னி வேன் ஒன்று வாங்கிய வகையில் செலுத்த வேண்டிய விற்பனை வரி, மேல் வரி ஆகிய வரிகளிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 21-11-1997-ஆம் நாளிட்ட 529-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவு மற்றும் 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) ஆகிய பிரிவுகளின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

49. காஞ்சிபுரம், தமிழ்நாடு சரிகை லிமிடெட்டிடமிருந்து 1-11-1981 முதல் 25-2-1992 வரை திருவாளர்கள் கைத்தறி கூட்டுறவு சங்கத்தினர் கொள்முதல் செய்த சரிகைக்கு செலுத்த வேண்டிய கொள்முதல் வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 30-9-1997-ஆம் நாளிட்ட 401ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

50. சென்னை, திருவாளர்கள் கிருஷ்ணமூர்த்தி பவுன்டேஷன் ஆப் இந்தியா நிறுவனத்தினர் அவர்களின் நிறுவனர் திரு. ஜே. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் சிறு வெளியீடுகள், ஒலி-ஒளிப்பதிவு சிறு பேழைகள் ஆகியவற்றை விற்பனை செய்ததின் வகையில் செலுத்தவேண்டிய விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 22-9-1997 ஆம் நாளிட்ட 394 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

51. ஸ்விட்சர்லாந்து தூதர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை தந்தபோது தங்கிய விடுதிகளுக்கு செலுத்த வேண்டிய ஆடம்பர வரி விதிப்பிலிருந்து

[1998 மார்ச் 21

விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 6-10-1997 ஆம் நாளிட்ட 415 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்களிலும் மற்றும் தங்கும் விடுதிகளிலும் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீதான வரிவிதித்தல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

52. 1994-95 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தி இரண்டாம் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

53. 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கையும், கணக்குகளும் [1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

54. 1996-97 ஆம் ஆண்டிற்கான அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

55. 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

56. 1996-97 ஆம் ஆண்டிற்கான தமழ்நாடு நகர்புற நிதி-அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் ஏழாவது ஆண்டறிக்கை. *(1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ்ப் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ்., ஆங்கிலம்).*

57. 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).



1998 மார்ச் 21]

**(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

12. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 1996-97 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை-ஆண்டு கணக்குகள் (தமிழ், ஆங்கிலம்).

13. போக்குவரத்துத் துறை பற்றிய திரு. ஆர். தில்லைநாயகம் தலைமையில் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கை. (ஆங்கிலம்)

14. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்தேழாவது அறிக்கை, 1997-98.

15. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்தெட்டாவது அறிக்கை, 1997-98.

16. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்தொன்பதாவது அறிக்கை, 1997-98.

17. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முப்பதாவது அறிக்கை, 1997-98.

D
V211, 31'N98
N98.401
21849.